4673

# அரிசமயதீபம்.

## நூன்முகம்.

7375

1. புகழ்விளங்குகதருமமுஞானமும்பொலிக
சகமுமாதவன்றனிமுதற்சமயமுந்தழைக்க
நிகமநான்குமந்தணருமாநிரைகளுநிறைந்த
மகமுமோங்குகவாழியமுறைதவாமன்னன்.

2. பூதன்பொய்கைபேய்மழிசையான்றொண்டர்தாட்பொடிநால்
வேதமாறன்முத்தமிழ்க்குலசேகரன்விளங்குங்
கீதநாமத்தன்பட்டர்கோன்கிளர்பரகாலன்
நாதன்யாமுநன்வாழ்கவாழியதமிழ்நலனே.

3. பதிகளெங்கணுஞ்சுருதியின்பொருளெலாம்பரப்பி
அதிகமான்முதற்சமயமுந்தன்மதமாக்கி
எதிகளுதளுகியவிராமாநுசனிருதாட்
டுதிகருங்கடற்றுயிலுமாதவன்பதத்துதியே.

4. கங்கைதங்கியபங்கயச்சரணமுங்கமல
மங்கைசெங்கதிர்மணிதிருவற்சமார்மார்புஞ்
சங்கையாழியைக்கதைசிலைவாளினைத்தரித்த
செங்கையும்பயில்பரமனைப்பணிகுவாந்தினமும்.

# 14-வது இராமாநுசச்சருக்கம்.

## [ஸ்ரீபெரும்பூதூர்.]

1. வடவேங்கடமால்வரைத்தென்பால்வளஞ்சேர்தொண்டைத்
திருநாட்டில், தடமாமதில்சூழத்திகிரி தனக்குக்குணபாலெவ்வு
ளெனும், அடன்மாறுயிலுந்திருப்பதியாங் கதற்குத்தென்பாலரும
றைக்கோர், இடமாய்ப்புடவியெனுமடந்தை வதனம்போலுமெழி
னகரம்.

2. கருமாகளிறுபரியிரதங் கஞல்வீதிகளுங்கதிரவனைப்,பொரு
மாமணியின்றிரளிமைக்கும் பொற்கோபுரமும்புரிசைகளுந், திருமா
லுறையுமுதற்பதிபோற் பூசாரப்பேர்சிறந்தெகினப்,பெருமான்றனக்
குங்கணிப்பரிய வளங்கூர்தகைமைப்பெரும்பூதூர்.

## [இராமாநுசர் அவதாரம்.]

3. ஆருயிராந்தணர்க்கிடனா மதிலாசூரிகேசவனாகும், மாருள்
வழுத்துமுனிதேவி மலர்த்தாடளிர்க்கைமலர்க்கூந்தல், தேறுமருங்
குல்வாங்கமைத்தோட் டெம்பாற்கிளவிமேம்படுசீர்த், தாருர்கமுக
மிடற்றிலவச் செவ்வாய்க்காந்திமதிதன்பால்.

4. சுவலிற்பதினாலுலகுமொருமலர்போற்பரித்துந்தொன்மறை
நூல், நுவலற்கருமாயிரமுகத்தான் மேனாளுவன்றுநோற்றோர்தங்,
கவலிற்பிறவிக்கடற்புணையாங் கரியோன்றவிசாக்கவின்படைத்துந்,
தவலிற்றவிர்சீரிலக்குவனும் பலதேவனுமாய்த்தகைசான்றோன்.

5. கடைநாள்விழியீராயிரத்துங் காலுங்கதச்செங்கனலானும்,
மிடைநாவிதக்கும்பகுவாயில் விரியுங்கருந்தீவிடத்தானும்,உடைநா
லொடுபத்துலகவண்ட மொழித்துத்தனித்தானொழிந்தாழிப், படை
நாரணன்றன்கலையாத லாற்சேடப்பேர்படைத்துயர்ந்தோன்.

6. அயலாஞ்சமயக்களைகளையா வருண்மால்சமயப்பயிர்வளர்
க்க, முயலாமகவாயவதரிப்பான் முன்னுங்காலைமுகிணைகையும்,
இயலாங்கவன்போல்விளர்த்துமுலை யிணைக்கண்களுமேவிழிவிடத்
தின், செயலாமெலிந்தாளுலகமெலாம் பரிப்போற்றுங்குந்திறனெ
ளிகே.

7. தருமந்தளிர்ப்பப்பாசமயந்தலைசாய்ந்தொதுங்கத்தழன்மகத்
தோர், கருமஞ்செழிப்பப்பாகவதர் கணத்தோருள்ளங்களிகூரப்,
பெருமங்கலச்சித்திரைத்திங்கள் பிறழுந்திருவாதிரைநாளில், உரு
மஞ்சனையோன்றுயில்கடல்சூ ழுலகோர்வாழவுதித்தனனால்.

[பாலியம்—வித்தியாப்பியாசம்.]

8. நாமஞ்சவுளமுபநயன நவினான்முறையேமுடித்ததற்பின்,
ஏமந்தருநான்மறையோதி யெயில்சூழ்கச்சியாதவனும், தோம்வந்
தணுகாவெதிக்ரூரவன் றணைத்தாடுதித்துவேதாந்தம், வாமன்கண்
ணன்சாந்திபன்பாற் படித்தாங்கெண்மைவடித்தனனால்.

[இராமாநுசரை யாமுநாசாரியர் கண்டு
சீடராகக்கொள்ள விரும்புதல்.]

9. படிக்குங்காலத்தத்துவிதம் பகர்யாதவனுமுளந்திகைப்ப,
வடிக்கும்வேதப்பொருடுவித மாபானுவன்றுமறுப்பதெல்லாம், முடிக்
குந்துளவப்புயலரங்கத் துறையாமுநப்பேர்முனிகேளா, கொடிக்
கோபுரமாமதிண்மாடக் குழாஞ்சூழ்கச்சிகுறுகினனால்.

10. காண்டல்விரும்பிவருமவனைக் கச்சிநம்பிகருத்துவகை,
தூண்டவெதிர்கொண்டடிவணங்கித் துதித்தானறைப்பூந்துளவணி
யும், நீண்டதிருமாலத்திகிரி வலஞ்செய்திறைஞ்சிநிறைசீலம், பூண்
டமுனியுந்திருக்கழற்பாங் கொருமண்டபத்துட்புகுந்திருந்தான்.

11. இருக்குங்காலையாதவப்பேரெதிமாணாக்கரினஞ்சூழ, அருக்
கன்பொருவும்படைமாலைப் பணிவான்வரக்கண்டாளவந்தான்,
பெருக்குந்திரளுட்கச்சிநம்பி யிராமாநுசனார்பேசுகென, உருக்கும்
பொன்போன்றொளிர்மேனி யுயர்ந்தோனவனென்றிவனுரைத்தான்.

12. கண்டுண்மகிழாவருளாளன்கழற்றாமரைக்குக்கவினார்ந்த
வண்டுதனதுவிழியாக்கிவணங்கிவழுத்திவரமெனக்கொன்
றுண்டுன்பாலென்மாணாக்கனிராமாநுசனாவுதவுகெனாப்
பண்டுபோலநம்பெருமான்றுயில்கூராங்கப்பதிபுகுந்தான்.

[சோழன்குமாரனைப் பிடித்து யாதவப்பிரகாசரால் போக்கமுடியாத
முனியை இராமாநுசர் போக்குதல்.]

13. அக்காலையிற்சோழன்சுதனை முனியொன்றணுகவதுநீக்கத்,
தக்காரெவரென்றாய்ந்தளவி னிறையாதவப்போர்த்தவமுனிவன், மிக்
கானெனச்சொற்றனர்வேந்துங் கொணர்மினெனமுன்வேதியனும்,
புக்கானோக்கிப்போகெனப்பேய் நகைத்துக்காங்கள்புடைத்தாறு

14. என்னைத்தூரக்குந்தகைமுனிவனீயேயகல்வேனெனியேனே, மின்னைப்பொருவுஞ்சடையோனு மெனைப்போகென்றுவிலக்குவனே, முன்னைச்சனனத்துனையினைய னெனநீயுணராயம்முறைமை, தன்னைக்கேட்டியானறிவ லெனச்சான்றோன்முன்னிவைசாற்றும்.

15. போதார்பொழில்சூழ்மதுராந்த கத்தண்டடத்தின்புறம்புற் றிற், கோதாவடவேங்கடத்திருமால் கொடிஞ்சித்தடந்தேர்க்கொடித்திருநாள், ஓதார்கலிப்பார்வயிணவர்போ துறுவோர்தடத்துண் டொழித்தமிச்சம், நீதானயின்றத்தடநீர்தோய்ந் திம்மாணுருவ நெறிபடைத்தாய்.

16. அகத்திற்றுயர்கூரெனதுதொன்மை யதுகேண்மறையோன் யானயரும், மகத்திற்பொருண்மந்திரங்கருமம் வழுவுற்றிடவவ்வடி வொழித்தே, இகத்திற்கடியாவுழல்கின்றே னிராமாநுசன்வந்தெனை நோக்கிச், சகத்திற்புன்மையகற்றினன்போ கெனிற்போவலெனவ வன்சார்ந்தான்.

17. இதுநீயாற்றுகெனச்சார்ந்த விராமாநுசன்றுளிறைவணங் கப்,பொதுநீர்மையனுமலகையைப்போ கெனத்தாளிறைஞ்சிப்புகழ் ந்தடியேன், முதுநீள்பணையைமுறித்தேகு கின்றேனென்றம்முறை யேக, அதுநீள்புவியாளாசனுங்கண் டிராமாநுசனையடிவழுத்தி

[இராமாநுசரிடம் துவேஷமாய் அவரை யாதவப்பிரகாசர் நீக்கிவிடுதல்.]

18. எண்ணற்கரியநிதிபொழிந்தானிராமாநுசனுமியாதவப்பேர், அண்ணற்குருதக்கணையுதவா வடிதாழ்ந்தனன்மற்றுங்கொருநாள், நண்ணற்கருஞ்சீரியாதவனு நவில்வேதாந்தநற்பொருளைக், கண் ணற்கரியபரிபவமாய்க் கலைவேதியற்குக்கட்டுரைத்தான்.

19. தயிலத்தினையாதவற்காட்டுந் தடந்தோளிராமாநுசன்றவ றே, பயிலப்புகலும்பொருள்செவிக்குப் படநாராசம்போற்பதை யாத், துயிலத்திருமாறனைக்கருதி விழிநீருகுப்பத்துளிகாய்ந்த,அயி லிற்படயாதவன்முதுகி லவனுந்துணுக்குற்றகமழுங்கா

20. எனைப்பின்சேறல்பழுதாநீ யினியத்திகிரியெம்பெருமான், தனைப்பின்சேறியிவணில்லா தகல்கென்றிசைப்பத்தணந்தவனும், மனைக்கண்மருவியனைக்கியம்ப வவளுமாறுள்வழுத்துகென, அனைத் துந்தெரிந்தோன்கச்சிநம்பி யடிதாழ்ந்தருளோர்பணியென்றான்.

[அதுகேட்ட யாமுநாசாரியர் பெரியநம்பிகளை அனுப்பி இராமாநுசரைக் கொணர்கென்றல்.]

21. திருமஞ்சனந்தந்துதவுகென விராமாநுசனத்திறம்புரியத், தருமந்தனேர்யாமுநனத் தகைகேட்டுவகைதழைத்தருளால், அருமந்திரநூற்பெரியநம்பி தனைக்கூய்நீசென்றருட்காஞ்சி, வருமனிராமாநுசனைநம்பாற் கொணர்கென்றிசைப்பமற்றவனும்

22. எவ்வாறவனைக்கொணர்வதென முனியாமுநனுமியாரொருவன், செவ்வாரிசத்தோன்சிவன்மகவான் முதலாந்தேவர்திரள்சிறிதும், ஒவ்வாத்தனதுதகவோதத் திவலைக்கணமாவுடையோனென், றவ்வாரணங்கூறரிதுநிலை யவன்கேட்டிடச்சொற்றமைழயென்றான்.

வேறு.

23. என்றுபுகறவமணியை யேதமிலான்பெரியநம்பி யிதயந்தேக்கிச், சென்றுதிருக்கச்சிபுகாச் சீலவிராமாநுசன்றன் செவியிற்சார, நின்றுபுகன்றிடவுனக்கித் துதியுரைத்தார்யாவரென நெடியோன்கேட்ப, நன்றுதெரியாமுநன்சொற் றனையாங்கத்தழைத் தனனீ நடக்கவென்றான்.

[தாம் அரங்கமடைவதற்குள் திருநாடலங்கரித்த யாமுநாசாரியருடைய திருவுள்ளத்தை இராமாநுசர் அறிந்து திரும்புதல்.]

24. ஆதரத்தோடவன்பின்னர் நடந்தரங்கநண்ணுமுன்னே யாளவந்தான், சீதரற்காட்டியஞான முத்திரைக்கைவிடாதுமுத்தி சேரக்காண, நீதரத்தானம்மதத்திற் குனக்களித்தேபெனல்போன் முத் திரைக்கைநீங்கக், காதரத்தைநினைந்ததுவே யுபதேசமாய்த் தனது கருத்துட்கொண்டான்.

25. இறைஞ்சினன்மாறெரிசனமா மிலதைபடர்ந்திமிர்ந்துதிசை யெட்டும்போர்த்து, நிறைந்திடவோர்கொழுகொம்பாய் நின்றுலகை வாழ்வித்தாய் நிகரிலாதாய், அறைந்திடுதற்கரியபுக ழண்ணலேயெனப்போற்றி யரந்தையாற்றான், உறைந்திலனுண்டொருபகலு முலகேழிலொருவர்தனக் குவமையில்லான்.

[இராமாநுசர் திருக்கச்சிநம்பிகளை ஆசிரயிக்க விரும்புதல்.]

26. குரவனெனக்குபதேச மளிக்குமுன்னேநீக்கினனீ கொடியையென்று, அரவணையிற்றுயிலரங்கே சனைப்பணியாதெயிற்காஞ்சி யடைந்துமேலோர், பரவுதிருக்கச்சிநம்பி தனையணுகாப்பதமலர்கள் பணிந்துபோற்றி, உரவகத்தாயெனையாட்கொண் டருள்கவெனவாங்கவனு முகந்துநோக்கா

[திருக்கச்சிநம்பிகள் அது விலக்கல்.]

27. உலகுயிர்க்குநாதனைக்கண் டுடையயோகியரையிழி புயர் பென்றோர்ந்து, குலநினைப்பதன்றவரைக் குலத்தினுந்தோன்றலினை னரீ குறித்துக்கோதில், நலபரமவைதிகத்தின் முறைகருதியிது புரிய நயந்தாயேனும், அலருலகநடையிறப்ப வயர்தொழிலீ தொழி கவென வறைந்தானம்பி.

[திருக்கச்சிநம்பிகள் வாயிலாக இராமாநுசர் பேரருளாளர்க்குச் செய்யும் விண்ணப்பம்.]

28. என்னவுயர்கச்சிநம்பி விலக்கலுமாங்கவனிருதா ளிறைஞ்சி யேத்திப், பின்னருமாதரவினிரா மாநுசனுந்துளவணிதேப் பெரு மான்பாலென், முன்னநவின்றருளாளன் மொழிந்தருளுமொழிகேட் டம் முறைசொற்றேனும், நின்னருள்வைத்தெனையாட்கொண் டருள் கவெனவதுபுரிவா னேர்ந்தோனுகி

29. நம்பியுந்தேப்பெருமானை யேகாந்தத்தடிவணங்கி நளினக் கானம், பம்பியநீன்மலைபோலும் படிவவிராமாநுசன்கூர் பரிவை நோக்கி, வம்பியல்கீடத்தினைத்தன் னுருவிளைக்கும்வேட்டுவனின் மாட்சியாக்கி, அம்பிபவக்கடற்காகுங் குரவரியாரருளுகென வடி கடானும்

[இராமாநுசருடைய விண்ணப்பத்துக்கு விடை.]

30. ஆரணமுமுபநிடதத் தந்தமுந்தத்துவப்பொருளு மயனுந் தேருங், காரணமுமருமறையு நமதருளாலவனறிவன் கருத்தன் யாமே, சீரணவுந்துவிதமத மவனறியாதிலையெனினுந் தெரிக்குங் கான்மா, பூரணனும்பெரியநம்பி குரவனெனவம்முறையே புகன்று னம்பி.

[இராமாநுசர் பெரியநம்பிகளை ஆசிரயித்தல்.]

31. கேட்டவிராமாநுசனுங் கிளர்மதுராந்தகநகரங் கெழுமிக் கேழ்கூர், வாட்டடங்கட்டேவியொடுந் தடாகநாயகன்கோயில் வந் துவைகுந், தாட்டடந்தாமரைப்பெரிய நம்பியைக்கண்டெனக்கு னடி தருவாயென்ன, வேட்டடைந்தேனெனவவனுங் கச்சியிற்கூறு துமெனத்தாள் வீழ்ந்துபோற்று

32. தெருடருயாமுநனுனே யாக்கைநிலையாமைகண்டு தெளிந் தாமின்போன், மருடருமெய்நிலையன்றே யிக்கணமேயுபதேச மளிப் பாயென்ன, அருடருமாபூரணனு மகிழ்ந்தியாமுநமுனிதாள் கருதி யாதிப், பொருடருமந்திரந்துவயங் குரவர்பரம்பரைமுறையே புக லாப்பின்னும்

33. வனத்தகலுமிராமனிஜே புவியினுக்காய்ப்பரதனிடைவைத் தான்பாதம், எனத்தகையா முநமுனியு நினக்காகத்தனதுசரணென் பால்வைத்தான், உனக்கவன்றந்துளபொருளுங் கச்சியிற்காட்டுவ மெனத்தன் னுடன்கொண்டேகிக், கனத்தகைமையருளாளன் றனைக் காட்டிப்பொருளிவனீ காண்டியென்றான்.

[துறவறம் பூண்டல்.]

34. இந்நீர்மைதெரிந்துறைநாட் டடத்தினிடையிருவர்மனை வியருமேகி, நன்னீர்மைகக்கனல்கொடு முகக்குங்காற்றுக்குதலு நனிமாறுகிச், சொன்னீர்மைத்தகைக்குருதே வியைத்தனதுதேவி நவில் சோர்வுகேளா, அந்நீர்மைக்குளநடுங்கி யரிகரியென்றவட ணைப்பார்த் தழன்றுசொல்வான்.

35. அறந்தவத்தீநரகமெனக் கமைத்தனைநீமிகக்கொடியா யந் தோவந்தோ, சிறந்தகுரவன்றேவி யுடனெதிர்ந்தாயுனையினியான் றீண்டல்பாவம், பிறந்தகஞ்செல்கெனத்துரவா வென்மருகன்றசு ரதிப் பெயரோனல்லால், துறந்தனன்மற்றனைவரையு மெனச்சபத நவின்றுமுற்றத் துறந்தான்றூயோன்.

[மடம் நிருமித்துத் திரிதண்டம் தரித்தல்.]

36. கடனிறப்போரருளாளன் குருவாகத்துவராடை கவினச் சாத்தி, மடமமைத்துச்சிகையுடன்முந் நூலிலங்கமுக்கோலு மலர்க் கைதாங்கித், திடமனத்தோடிருக்குங்காற் சுப்பிரதிட்டுவுஞ்சருவ செந்திதானும், புடவியுற்றுத்தாசரதி புகழ்கூரவற்சனெனப் புகல் பேரானோர்,

[முதலியாண்டானும் கூரத்தாழ்வானும் இராமாநுசரை ஆசிரயித்தல்.]

37. வந்துபணிந்தெமையடிக ளளித்தருளவேண்டுமென மறை வலானும், முந்துகருணையினவர்கட் குபதேசித்திடவடிமை முறை மைபூண்டார், இந்துதெரிந்தங்நாள்யா தவப்பிரகாசனைநோக்கி யவனையீன்றோள், நந்துதவவேடமிரா மாநுசன்போற்றரித்திடினீ நன்றுமென்றாள்.

[யாதவப்பிரகாசர் இராமாநுசரை ஆசிரயித்தல்.]

38. சிகையொடுமுந்நூலுமினித் தறித்தறவமென்றவையே செய் வானெண்ணில், தகைமைபெறப்பூவலஞ்செய் திடவேண்டுமஃதின் றேற் றனுத்துய்தன்றால், நகையுலகத்துளதாகு மெனப்புகலாத் துயில்காலை நணுகார்மேற்புள், உகையருளாளப்பெருமா னவன் கனவிற்கருணையினு னூற்றுச்சொல்வான்.

39. அவனிவலம்வருதலிரா மாநுசனைவலம்வருத லிலைம்போற் றுங், தவமுமவன்றவமேமற் றவன்மதமேமதமெமக்கு மதுவே சால்பாங், கவலையுறேலிம்முறைநீ புரிகவெனவிழித்தவனுங் கச்சி நம்பிக், குவகையுடனுரைத்திதனை மாயனைக்கேளெனவவனு முரைப்பமாலும்

40. யாங்கனவிற்புகன்றபரி சிழைக்கிலெமக்ககமகிழ்வென் றிசைப்பாயென்னப், பூங்கமலத்தயனிகர் யாதவற்குநம்பியிது புகலக்கேளா, ஆங்கவனுமுட்கொடிரா மாநுசனைவலஞ்சூழா வடி தாழ்ந்தைய, தீங்ககலவெனக்குனருள் பெறல்வேண்டுமெனவுரைப் பச் செவ்வியோனும்

41. குரவனையுண்ணினைந்துசிகை முந்நூன்முக்கோல்கொடுத் துக் கோதில்ஞானம், பரவுமுபதேசமுடன் கோவிந்ததாசப்பேர் பரிவிற்சாத்தி, உரகவணைத்துயின்மாயன் சமயமுறையுணர்தருநூ லுள்ளயாவுங், கரதலநெல்லியிற்புகலாத் திருமாலைப்பரவியுளங் களிக்குங்காலை

[இராமாநுசர் அரங்கநகர் அடைதல்.]

42. மதிலரங்கத்திருவரங்கப் பெருமானையரங்கத்தோர் மகிழ்ந் துநோக்கிப், பதிகளின்மிக்குயர்காஞ்சி நகர்க்கேகிவாதனைத்தாள் பழிச்சிக்கீத, விதிமுறையினகமகிழ்வித் தினியவிராமாநுசனை வினவிவேண்டிக், கதிதருநம்பதிகொணர்தி யெனவவனும்விடை கொடுமால் கச்சிசார்ந்தான்.

43. சந்நிதியிற்கின்னரனிற் பாடலுமாலவனையரு டழைப்ப நோக்கி, என்னபொருள்கேட்பினும்யா மீகுவங்கேளெனவவனு மெந்தாயீசன், தென்னரங்கத்துறையவிரா மாநுசனைத்தருதியெ னத் திருமானேரான், அன்னவனல்லாதனகே ளெனச்சரதனீ பொய்த்தா லழகாமன்றே.

44. எனவரங்கப்பெருமான்சொற் றடிபணியவருளாள னீந்தே மென்றான், மனமகிழ்ந்தாங்கவனுமிரா மாநுசனைமால்பணித்தான் வருதியென்னத், தினகரனுத்தரதிசையி னின்றுதென்பானடந்த தெனச் சென்றன்னனும், பனகமிசைத்துயின்மாய னரங்கநகர் வடதிசையின் பக்கஞ்சார்ந்தான்.

45. அயனையருளரங்கேசன் சேனைநாதனைநோக்கி யனைவரோ டும், இயன்மறைநூறெரிந்தவிரா மாநுசனைக்கொணருதிநீ யெ திர்போயென்னச், சயன்விசயன்சுனந்தனந்தன் மிடற்கருடன்றே வர்முதற் றலத்தோரோடும், புயலரங்கனருளப்பா டெனவெதிர் கொள்ளாமுகமன் புகன்றன்மாதோ.

46. அரங்கவிமானத்தினைக்கண் டவனியில்வீழ்ந்திறைஞ்சிமுகிற் கணியாம்பொன்னி, தரங்கமலிபுனற்படிந்து நியமமுடித்தணி நகரந் தன்னுட்சார்ந்து, துரங்கமணித்தேர்களிறு துதைவீதிபல கடந்து தூய்மைசான்ற, வரந்தருதாமோதரன்வாழ் மணிமுடிப் பொற்கோபுரத்தின் வாயில்வந்தான்.

வேறு.

47. அங்கமெட்டவனியிற்படியவன்புளம்
பொங்கநீர்பொழிதரப்புளகமெய்தரச்
சங்கணிதிகிரிவாள்சார்ங்கந்தண்டெழிற்
பங்கயவடிவுளங்கொடுபராவினான்.

48. மணிமுடிக்கோபுரவாயில்புக்குவாள்
அணிமணியிழைத்தவேழாணந்தானொரீஇப்
பிணியகற்றிடுபலிபீடந்தன்னொடு
பணிபகைக்கம்பமும்பணிந்துபோற்றினான்.

49. மாண்பணிப்பெட்டகம்வலஞ்செயாமணிப்
பூண்பயில்சயவிசயரையும்போற்றியே
சேண்பதுமத்தனுமானுந்தேவருங்
காண்பருபொருளையுங்கண்ணிற்கண்டனன்.

50. பதயுகக்கமலமும்பசும்பொன்னாடையும்
முதலவேதனைத்தருமுளரிநாபியுஞ்
சததளக்கரங்களும்புயமுந்தாமமும்
அதரவித்துருமமாவமர்ந்தவாகமும்

51. செடிவிடுமகரகுண்டலமுஞ்செங்கதிர்
முடியுநாசியுமதிமுகமுமூரலும்
நெடிதுகண்கவர்தரக்கருத்துநேர்தலாற்
படியிசைபடிந்திலன்பரவன்மேயினான்.

[இராமாநுசர் அரங்கநாதனைத் துதித்தல்.]

52. அளவிலாவண்டமுமயின்றோராலிலை
இளமகவாய்த்துயின்றனையன்றென்பரால்
உளதலமெவணெனவுணர்கிலேனுயர்
துளவமாலிகையினாய்துலங்கச்சொற்றியால்.

53. ஆதிநீயொருவனேயென்னவாரணம்
ஓதிமற்றெவையுநீயெனவுமோதுமால்
பேதியாவுருவமோபிறவும்பெற்றியோ
நீதியாயுணர்கிலேனிகழ்த்தவேண்டுமால்.

54. மூலமேயென்றுவாய்மொழியவந்ததுன்
கோலமேயெனமறைகூறல்வாய்மையோ
ஞாலமேற்சமயநூனவின்றவாய்மையின்
சீலமேயோவிதுதெளியக்கூறுவாய்.

55. உண்டவெண்ணெயின்பொருட்டசோதையுன்னைநாண்
கொண்டடித்தலுமழக்கோலவாயினுள்
அண்டமுஞ்சராசரமனைத்துமாங்கவள்
கண்டனளென்பதென்கருத்திற்கையமே.

56. இலஞ்சியசரோருகத்துதித்தவெண்கணான்
தலஞ்சராசரந்தருந்தகைமையெண்ணலேன்
பொலஞ்செய்தாட்சரோருகம்பொடித்ததோர்துகள்
உலஞ்சிலையகலியாய்விதித்ததோதுவாய்.

57. வழுத்தியிம்முறையிராமாநுசப்பெயர்
முழுத்தவன்மெய்புளகரும்பமுற்றுறப்
பழுத்தபேரன்பிறைப்பணிந்தகாலையெட்
டெழுத்தினிலுறைந்தருளிறையுங்கூறுவான்.

[இராமாநுசரிடம் அரங்கநாதன் திருவருள் செய்தல்.]

58. இப்பதிமுதலநூற்றெட்டியாமுறை
மெய்ப்பதிமுதன்மையுஞ்சமயமேன்மையுஞ்
செப்பருஞ்செல்வமாமிரண்டின்சீர்மையும்
ஒப்பருந்தகைமைசாலுனக்குத்தந்தனம்.

59. எனத்திருவருள்புரிந்திரவிகான்முளை
தனக்குநேர்முதலிகடலத்துமற்றுளோர்
மனத்தினிலுவகைகூர்ந்திறைஞ்சிவாழ்த்தநற்
றினத்திலாசிரியனுமுதன்மைசெய்தனன்.

60. தகுமிராமாநுசன்றனுந்தண்மது
உகுமலர்ப்பொழிலரங்கேசற்கோகையால்
மிகுமருச்சனைவிழாவியற்றிவேதமீத்
தொகுமலர்ச்சரணினைத்துதித்துவைகுநாள்.

[இராமாநுசர் பெரியநம்பிகளிடம் ரஹஸ்யார்த்தங்கள் கேட்டல்.]

61. தவப்பரிபூரணன்சரணம்போற்றிநீ
உவப்பினுண்டனைபொருளுள்ளயாவையும்
பவப்பிணிமருந்தனுய்பகர்தியாலென
நிவப்பரும்பொருளெலாநிகழ்த்திநம்பியும்

62. நாமுணர்ந்தருள்பொருணவிலக்கேட்டனை
யாமுநன்மறைப்பொருளின்னங்கேட்குவான்
காமுறிற்கோட்டியூர்நம்பிகற்றுளோர்
கோமுனிதிருமலைநம்பிகோதிலான்.

63. வரங்களாலுயர்திருமாலையாண்டவன்
அரங்கநாயகனவனடிமையாயுளார்
இரங்கனீயிவர்வயினெய்திக்கேளென
உரங்கலாவறிவினனுரைத்துப்பின்னரும்

64. தன்புதல்வனையிவன்சரணம்போற்றென
அன்புடனவன்றன்மாணுக்கனுக்கினன்
பின்புமுன்னிலக்குவப்பெயர்கொள்வள்ளலுங்
கொன்புனைதருதிருக்கோட்டியூர்புகா

[இராமாநுசர் திருக்கோட்டியூர் நம்பிகளிடம் திருமந்திரார்த்தமும் சரமசுலோகார்த்தமும் கேட்டல்.]

65. கோட்டியூர்நம்பிபாற்குலவுமாமணி
வாட்டிருமாளிகைவாயினண்ணியே
தாட்டிருமலர்பணிந்தேத்தித்தாழ்விலா
ஈட்டியமறைநவின்றென்னையாள்கென்றான்.

வேறு.

66. வினவமற்றவனும்பதினெழுதினத்தி னளவைசொற்றிலன் மறைமேலோன், மனமிகத்தளர்ந்துமிறைவிடுத்தகலா மருவிமற்ற வன்றன்மாணுக்கர்க், கெனதிடுக்கணைநீக்கிடவுயர்நம்பிக் கிசைமி னென்றலுமவரெய்தி, உனதருட்கிராமாநுசனுரியவனுண் டளிக் குதியடிகளென்றுரைத்தார்.

67. நுவன்றவப்புகல்கேட்டருள்பெருகுதலும் புகன்றமாணுக் கரைநோக்கி, அவன்றனைத்தண்டம்பவித்திரமல்லா லகற்றியீண் டழைத்திரென்றருளக், கவன்றமெய்த்தவனுக்கம்முறைபுகலா வரு தியென்றழைத்தலுங்களிகூர்ந், திவன்றனித்தாசரதியொடுங்கூரத் தவனொடும்பணிந்தனனெய்தி.

68. பவித்திரந்தண்டமெவணவென்றிசைப்பப் பணிந்திராமாநு சன்மலர்க்கை, குவித்திவரிருவோரருள்பொருளென்னக் கோட்டி யூர்நம்பியுமிவரைப், புவிக்கணியனையாய்பகுத்துரையெனத்தா சர தியைத்தண்டமாய்ப்புகலா, சவித்தகைவற்சனானகூரனையே பவித் திரமென்றனன்றவத்தோன்.

69. இருவருநீயுமுணர்திமற்றெவர்க்கு மிசைத்திடேலெனவரு கிருத்தி, ஒருவருந்தெரிதற்கரிதியாமுநனன் றுரைத்தமெய்ப்பொரு ளிதென்றுரைத்தான், பொருவருமிராமாநுசனுமப்பொருளைப் புய றிருக்கோட்டியூர்விழவில், வெருவருமறலிக்கஞ்சன்மினெவருங் கேண்மெனவெளிப்படவிரித்தான்.

70. குரவர்சொற்றதனைமறுத்திதுபுரிந்த கொடுமையாற்கூறருங் கொடிய, நரகமுற்றிடுவையெனத்திருக்கோட்டி நம்பிசொற்றலு மறைநவிலும், பாகதிக்குலகோரனைவரும்படா யானிதுபகர்ந்த பாதகத்தால், அரவணைக்கடவுளனையவெங்குரவ வருநரகடையினு மழகே.

71. எனப்புகலிராமா நுசன்றனைமகிழ்ச்சி யெய்தலாற் கரங்க ளாற்றழுவி, உனக்கிணையெவரேயுலகெலாங்கதிபெற் றுய்யவந்தவன் கொனீயென்று, வனக்கடற்புவியிம்மதமுனபெயரால் வழங்குக வெனவரமருளித், தனக்குநேர்புதல்வன்றனையுமாணாக்க னாக்கொ டுத்தனன்பெருந்தகையோன்.

72. பின்னருமிராமாநுசமுனிவதன நோக்கியேபெருகுகாதலி னால், இன்னமும்பரமபொருள்சிலவுனக்கீண் டிசைக்குவானெண் ணினேனிசைக்கு, முன்னமேயமைதியுடையனாயினைநீ யெனவிரா மாநுசமுனியும், அன்னதாதரமிக்கதனையுங்கேட்டற் கடும்பலுற் றிருந்தனனழுங்கி.

73. மாற்றமாறுரையானிருப்பநம்பியுநின் மனத்ததேதிசையெ னவணங்கி, மேற்றகைமுனிநீநவின்றருள்பொருளின் மேலுமொன் றுள்ளதாவினவின், ஊற்றமிலுளத்தனாகுவன்கேளா விடின்பொரு ளாற்றதின்றுளத்தின், றேற்றநீநவில்லையெனநவில்விரகொன் றறிகி லாதிருந்தனனென்றான்.

74. கேட்டநம்பியுநீவருந்தலின்றேகி யின்னுமோர்பகலிவண் கெழுமுங், கூட்டநீத்தெம்பால்வருகெனவிடைகொண் டேகினான் கோட்டியூர்நம்பித், தாட்டளிர்மலர்மற்றொருபகறனித்துச் சார்ந் தனன்பரவமெய்த்தவனும், வாட்டமில்பரமபொருணவின் றெவர்க் கும் வழங்கனீயென்றலும்வணங்கா

[கூரத்தாழ்வான் இராமாநுசரிடம் சரமசுலோகார்த்தம் கேட்டல்.]

75. கூரனுக்கிசையாதிருக்கிலனடியே னென்னவக்கூரனிப்பொருளைத், தேரனீர்மையனேயெனினுமோர்பருவ மேவல்கொண்டுரையெனத்தெரிந்து, நாரணனரங்கத்திலக்குவமுனிவ னண்ணலும்வற்சனுமத்தன், ஆரருளெதிநாதனைப்பணிந்தடியேற் கப்பொருளருள்கவென்றறைந்தான்.

76. இலக்குவமுனியுங்கோட்டியூர்நம்பி யிசைத்தவாறிசைப்பவேயிலங்கும், பொலக்குவடனதோள்வற்சனுநிலைமைப் பொருள்வடிவென்னுமப்பொருடேர்ந், தலக்கணுற்றெரியாண்டயர்பணிவிடையினதிகமோர்திங்களுணகற்று, நலத்தவமெனநூனவிலறேர்ந்ததுவே புரியவப்பொருளவனவின்றான்.

[முதலியாண்டான் திருக்கோட்டியூர் நம்பிகளிடம்
சரமசுலோகார்த்தம் கேட்டல்.]

77. முதலியாண்டானுமப்பொருள்விரும்ப விலக்குவமுனியுமுன்மொழிந்தோன், பதமலரடைந்தேகேளெனவவனுங் கோட்டியூர்நம்பிதாள்பணியா, இதமுறத்திங்கண்மூவிரண்டேத்தச் சிறிதுநோக்காமையினெனையாள், நுதலருங்குணத்தாயென்னவோர்வைகல் பணிதலுங்குரவனுநோக்கா

78. தரும்புகழ்விஞ்சைதனங்குலனெனுமிம் மும்மதங்கடத்தலேசமமாம், திருந்துமத்தமந்தான்மனத்தைவென்றிடுதலாதலானிவற்றைநீதீர்க்கில், வருந்தலைவருதியெனத்திருவரங்க மருவிமாதுலன்பதம்வணங்கி, இருந்துதேவகியானம்பிபாற்பரமப் பொருளைவாய்த்தெவரினுமுயர்ந்தான்.

[இராமாநுசர் திருமாலையாண்டானிடத்தில் தமிழ்வேதப் பொருள்
கேட்டலும், திருவரங்கப் பெருமானரையரிடத்துத்
தமிழ் வேதத்தைப் பண்ணிலியைத்துப் பாடப் பயிறலும்
மாணுக்கர்க்கு வேதாந்தம் உபதேசித்தலும்.]

79. எவரினுமுயர்சீரிலக்குவமுனியும் யாமுநனிருசரணிறைஞ்சித், தவநனிவிளங்குமாலையாண்டான்பாற் றமிழ்மறைப்பொருளொலாந்தெரிந்து, கவலைதீர்ந்துயர்சீரரங்கநாதன்பாற் கானமாங்கடற்கரைகாணு, அவனிபோற்றிடவேதாந்தமாணுக்கர்க் கறைந்துகோயிலினினிதமர்ந்தான்.

[சங்கரர் என்னும் யதியானவர் இராமாநுசரிடம் தர்க்கம்பண்ணி ஈடுபடுதல்.]

80. உறைதருங்காலையுத்தரதிசைநின் றொருவருமிணையிலா வொருதண், டிறைகொளுஞ்செங்கைச்சங்கரனெனும்பே ரெதியரங் கத்தில்வந்திருசீர், மறைதெரியிராமாநுசனையென்னுடனீ வாதி யென்றலுமவன்வருகென், றறைபுகன்றிருவோர்மதத்துமாறுகி யா றிரண்டைந்துநாளகலார்.

81. திருக்கிளர்நெடுந்தாளழகியநரசிங் கப்பெயர்ச்சீதரன்றிரு முன், தருக்கமேபுரியவெலற்கருந்தகைத்தாச் சங்கரன்மேம்படத் தளரா, மருக்கமழ்துளவநரகரி திருத்தாள் வழுத்தலாற்கனவின் மற்றவனுஞ், சுருக்கமாமறையொன்றளித்தலுமதனாற் சங்கரன்வலி யெலாந்தொலைத்தான்.

[சங்கரர் இராமாநுசருக்குச் சிஷ்யராய் அருளாளப் பெருமா ளெம்பெருமானார் என்னுந் திருநாமம் பெற்றிருத்தல்.]

82. சங்கரன்றிகைத்தன்றிலக்குவமுனிதாட் டாமரைசிரசின் மேற்றரித்துச், செங்கண்மாலனையாயென்னையாள்கெனமுந் நூலு டன்சிகையுமுக்கோலும், மங்கலமறைநூன்முறைமையிற்றரிப்பித் தெட்டெழுத்திசைத்துளமகிழ்வால், அங்கவற்கருளாளப்பெருமா ளெம் பெருமனென்றளித்தனனாமம்.

83. மூலமந்திரத்துட்பொருணவின்றவனுக் கடியரின்முதன்மை யுமுதவிச், சாலவேமகிழ்வுற்றிருக்குஞான்றனந்தாழ் வானுமெச் சானுமெய்த்தவத்தின், சீலமார்தொண்டனூர்நம்பிமருதூர் நம்பியுங் குடக்கெனுந்திசைநின், றாலமார்கடவுடுதித்தருளரங்கத் திலக்குவ முனிபதத்தடைந்தார்.

84. அவர்களையருளாளப்பெருமாளெம் பெருமனுக்கடியராய ளித்தான், உவகையினவன்றாள்பணிந்தவர்வழுத்த வெருவியவ் வுயர்தவத்தோனும், பவவஞர்தெறுஞ்சீரிலக்குவமுனிதா ளகன் மெனவவருமப்பரிசே, இவர்வுடனிருதாள்பரவமாலரங்கத் திடை யிராமாநுசனிருந்தான்.

[திருமலையில் புஷ்பகைங்கரியத்துக்கு அநந்தாழ்வான் அமைதல்.]

85. இருப்பவனொருநாண்முதலிகடமைப்பார்த் தெம்பிரான் றிருமலைக்கேகித், தருப்பயிறிருநந்தனவனம்புரிவோ ரெவரென வெழுந்தனந்தாழ்வான், விருப்பமொடவன்றாள்பணிந்தனன்பரவி விடைகொளாவேங்கடமெனும்பேர்ப், பொருப்படைந்திராமாநுச முனிப்பெயரான் மலர்வனமழகுறப்புரிந்தான்.

[திருவேங்கட யாத்திரை.]

86. ஏத்தருந்தகைசாலிலக்குவமுனியும் பலபகலிறந்தபின்னி பமுன், காத்தருளரங்கேசனைப்பணிந்தவன்பால் விடைகொளாமுத லிகள்களுல, நீத்தணிநகர்நீணதிகடந்தரிவாழ் பதிபலதணந்தனனீங் கிப், பூத்தருணளினமிதலைமால்கருடப் பொருப்புடைத்திருப்பதி புகுந்தான்.

87. முன்பராகாலன்றிருமலைக்கிவரா முறைமையாற்றுனுமம்மு றையே, அன்பமருளத்தானுறைதலுமனந்தாழ் வான்முதலனைவரு மணுகிப், பொன்பயில்கிரிமீயிவர்கிலாயெனிலிப் புவியுளோர்யாவ ரும்போதார், என்பதுசொலமாணுக்கருந்தானுந் திருமலைக்கேறு வானிசைந்தான்.

88. தெளிபுனல்படிந்துதவளமண்டரித்துச் சிதைவிலாச்சேட வெற்படியின், புளியினைவணங்கியெந்தைமேற்பதத்திற் கிவர்தலாப் புந்தியிற்கொடுகான், நளிமலர்மதுவார்ந்துழைகுரால்விளரி கைக் கிளைமுதலிசைநலத்தின், அளிமுரல்வளங்கூர்திருமலைக்கிவர்வோன் பரிவட்டப்பாறையையடைந்தான்.

89. மாயவன்றனுந்திருமலைநம்பி தனையெதிர்செல்கெனமறை யின், தூயனுந்துளவமாலிகைகைக்கொண் டெதிர்வரக்கண்டடி தொழுதே, நேயமாருலகின்குரவனீசிறியோர் போல்வரானீதியோ வெனலும், ஆயவனென்னிற்சிறியரின்றெனலு மதிசயித்தவனொடு நடந்தான்.

வேறு.

90. இத்திருப்பதிவாழெந்தையடியவரிருமையெல்லாம்
முத்திருத்தியவேயன்னநகைத்திருமுயங்குமார்பத்
தத்திருத்துளவத்தொங்கலரியலாரறியாரென்றுப்
பத்திரப்பழுவஞ்சூழ்கல்வேலியின்பக்கஞ்சார்ந்தான்.

91. துளங்குகல்வேலிகாறுஞ்சேறலுந்துளவத்தொங்கல்
இலங்குதோளீசன்சேனைநாதனையெதிரேயேவ
நலங்கிளர்முனியுஞ்சேனைநாதனைப்பணிந்துநண்பின்
வலஞ்செயாவுயர்வைகுண்டக்கோபுரவாயில்வந்தான்.

92. நிகரில்கோனேரிநீருட்படிந்துதன்னியமமுற்றி
அகதிருவீதிநான்கும்வலம்வராவலர்ப்பூஞ்சோலை
புகர்மணிமடங்களம்பொன்மாளிகைபுண்டரீகம்
மிகமலர்சுனைகள்பூமண்டபமலர்விரிபூம்பொங்கர்,

93. கண்டுகோனேரிவாழுங்குருகினங்கறங்கல்காவில்
வண்டுகண்முரலுங்கீதச்சுவைசெவிமடுத்துமாந்தி
விண்டுவாழ்புவிவைகுண்டமிதுவெனுமிகவானந்தங்
கொண்டுளங்களித்துச்செம்பொற்கோபுரவாயிற்சேர்ந்தான்.

94. மருப்புமண்கொண்டஞானப்பிரான்றிருமலர்த்தாளான்ற
விருப்புடன்வணங்கிப்போற்றிநிழறிரும்பாதமேன்மைத்
திருப்புளிகருடகம்பந்தனையிருசெங்கைகூப்பிப் [போற்று
பொருப்புறழ்பொருவிறிண்டோள் புவிதொடப்பணிந்து

95. தவாதமெய்த்தவத்தானன்பிற்சண்பகாவரணஞ்சூழ்போந்
தவாவறச்சூழ்ந்தானம்பொற்கோபுரவாயிலண்மி
உவாவினிற்கிளர்ந்தவோதத்துவகையானுலப்பில்சோதிக்
குவான்மணிக்கனகந்தன்னூற்குயிற்றியகோயில்புக்கான்.

96. கமலமான்றலமானந்தநிலயநற்கனகச்சோதி
விமலமானத்தைநோக்கிவிண்ணுளோர்விழைந்துபோற்றும்
அமலமார்மணிமாமண்டபாதிகண்டார்வத்தோடும்
சமரமாநரசிங்கன்றுள்பரவினன்றகைமைமிக்கான்.

வேறு.

97. தூரகாதியங்க ளுறைவாகனங்க டொழுதாதிசேனை முத லோன், உரகாரிவாயுசுதனுநியோக ரொருமூவரேனையரோடும், கர காமர்கஞ்சமுகிழாவணங்கி யுலகேழ்கடந்தமிடல்சால், நரகாரிசெம் பொனணிகோயில்வந்து நனுகாவிறைஞ்சிநவில்வான்.

[இராமாநுசர் திருவேங்கடமுடையானைத் துதித்தல்.]

98. உந்தித்தடத்திலொருதாமரைக்க ணொருசேயைமுன்னமுத வா, முந்தித்தழைத்தவுலகேழொடேழு முளதாவிதிப்பமுயல்வாய், வந்தித்துநிற்குமவனுலொர்சேயை வருவித்துமற்றவையெலாஞ், சிந் தித்தழித்தியருளாலளித்தி திறனன்றுநன்றுதிறலோய்.

99. பாதத்தில்வந்த புனலானகங்கை படிமீதிழிந்து பவமாம், ஓதத்திலென்றுமமிழாதவண்ண முயர்வீடுநல்குமுறைசால், வேதத்தி னந்தமுணராதவுன்ற னிலையார்விளங்கவறிவார், பூதத்திபைந்தவடி வாயகன்று புணராதுநின்றுபுணர்வாய்.

100. அடியோரிரண்டு மணிவாமமும்பொ னணியாடையின்ற னமுகும், படியோதுமண்டமதுகோடிதந்து படர்காமருந்திமலரும், கொடியோர்மருங்குலலர்மேன்மடந்தை குலவாகமுங்குறைவிலா, நெடியோயரங்கநகர்வாழ்முகுந்த நிகரானிறைந்தவடிவும்

101. கண்டேனயர்ந்தகனபாதகங்கள் களைவாயெனுங்கவர்வதே, கொண்டேனிறந்துபிறவாததன்மை குலையாவரந்தருகுவாய், தண்டேனலங்கறுளவாவுகந்த மலையேதலங்களெனுநீர், உண்டேயுமிழ்ந்த முகிலேபவங்க ளொழியாதொழிந்தமுதலே.

102. என்றுதரத்தொடிசைபாவழுத்தி யிசையாமறைக்குமிசையா, நின்றானிருக்குமுயர்சேடவெற்பை நிகராய்நினைக்கிலெவையும், ஒன்றாபுவிக்கணெனவோகைமிக்க வரவோனொர்பக்கமுறுவோர், தன்றாள்பழிச்சியுறைவானதிக்கு ளுயர்பாயுதித்ததகைசால்

103. ஆகாயகங்கையொடுபாவநாச மிவையன்பிணுடியருநால், ஏகாந்தியன்பரொதியீசராகு மிருவோரைவைத்திணையிலா, மாகாந்தனின்பமுறமாலைதீப மகபூசைமற்றுமெவையும், நாகாழிதங்குபுய ஞானயோகி நலமாவியற்றிநசையான்,

104. உலகாளுமன்னனனுகாவணங்க லொடுமாசியொன்றுவகையால், பலகானவின்றுவளமேகிளர்ந்த பதியானதொன்றுகவரா, இலகாழிசங்குமுளமாயனன்ப ரிணையாமலின்பமுறவே, அலகானதின்றிவளர்சீலனன்பி னருளாவணங்கியரிதாள்,

105. விடைகொண்டுதொண்டுபுரியன்பர்சூழ மிகுசீலநம்பியுடனே, நடைகொண்டுதுங்கமலைநின்றிழிந்து நலமார்புயங்கமிசைகண், படைகொண்டுகஞ்சமடமங்கைவிஞ்சு படிமங்கையான்மருவவே, தொடைகொண்டமங்குலெனவேகிடந்த துளவோனைவந்துதொழுதான்.

[இராமாநுசர் திருமலைநம்பிகளிடம் வான்மீகம் கேட்டல்.]

106. நாகங்கலந்தவிமையோர்வணங்கு நலஞகநம்பிநவில்வான், மீகம்பரிந்துவினவாவவன்ற னிருதாள்விரும்பிமிகுமா, யோகம்புரிந்தவுரவோர்கடேவர் தொழவேயுறங்குமழையா, மேகம்புரைந்த திருமானகர்க்கு ளுறைகின்றவேலையதனில்

## வேறு.

107. பொருவிலுயர்சதுமறையோர் புரவலரேணையர்வணங்கிப் புகழுந்தொல்சீர்த், திருமலைநம்பிக்குமுதன் மாணுக்கன்யாவரினுஞ் சிறந்தமேலோன், பெருகுபுகழெம்பாரென் றுலகேத்துங்கோவிந்தப் பெருமானோர்நாள், அருமணிமஞ்சத்தணையை நம்பிதிருக்கண் வளர்தற் கழகுசெய்யா

108. உன்னரியபெருந்தகைமை நம்பிதிருமேனியினி லுறுத்தா தோர்வான், முன்னரதிற்றுன்படுப்ப வதனையிராமாநுசப்பேர் முனி வன்காணு, இன்னதொருமுறைமையிவன் வழங்குவதேயென்ன நம்பிக் கிசைத்தலோடும், அன்னவனுங்கோவிந்தப் பெருமானை வருதியென வழைத்துநோக்கா

109. இன்றுநமதணைமிசைநீ துயின்றனையென்றனரிதுநீ யிழைத் ததீமைக், கொன்றுகதியாவதென நரகமெனவுணர்ந்திழைத்த தோ துகென்ன, நன்றுதருநீதளிம முறுத்தாதுதுயில்பெறவோர் நன்மை யெய்திற், சென்றுதமியேனரகத் தழுந்துகினுமதுவுமிகு சிறப்பா மென்றான்.

[இராமாநுசர் விடைகொள்ளல்.]

110. எனவுரைத்தகோவிந்தப் பெருமானையிலக்குவப்பே ரெதி யுஞ்சால, மனமகிழ்ச்சியொடுநோக்கி யிவனைநிகர்தகைமையினோர் மற்றின்றென்ளுத், தனதகத்துட்கொண்டொருநா ணம்பிபதம் பணிந்துவிடை தருதிமாயோன், பனகமிசைத்துயிலரங்கப் பதிக் கேகவெனலுநம்பி பரிந்துநோக்கா

[எம்பாரை நன்கொடையாகப் பெறுதல்.]

111. உனக்கரியபொருளுள்தென் றுதவவியான்கண்டிலனீண் டொன்றுமென்ளு, மனக்கருணையொடுமுகமன் புகலவிராமாநுசப் பேர் வள்ளலுனும், எனக்குதவவருளுண்டே லெம்பாரைத்தரு குதிரென் றிறைஞ்சியேத்தத், தனக்குநிகர்கோவிந்தப் பெருமானை யுளத்துவகை தழைப்பவீந்தான்.

[இராமாநுசர் அரங்கம் சார்தல்.]

112. கோதிலிராமாநுசனு நம்பிபதம்பணிந்துவிடை கொண்டு சால்பு, நீதியயில்கோவிந்தப் பெருமானேடணிநகர நீங்கிப்பைம் பொற், சோதிமதிற்கச்சிபுகுந் தருளாளன்பதம்பணியாத் துதித் துக்கோதில், ஆதிமுனிவரர்க்கிறைதாள் பணிந்துதிருக்காவேரி யரங்கஞ்சார்ந்தான்.

[அருளிச்செய்த நூல்கள்.]

113. அரதனவான்மணிக்கோயி லரங்கேசன்றிருமலர்த்தா ளன் பிற்போற்றி, வரமுனிவனுறைந்தருள்வோன் புன்சமயங்களைநீக்க மனனுட்கொள்ளாச், சாதகவில்வேதாந்த சாரதீபஞ்சுருக்கஞ் சக மூண்டோங்கும், பரமனருச்சனைமுறைமை பகர்கீதாவிவரணமாம் பனுவல்செய்தான்.

114. புலனருள்சீரங்கத் தியமுதலமூவனுகையாப் புகன்றுதொன் னூல், நலனவனிமிசைவிளங்க விருத்திநவின்றவையனைத்து நனி மாணுக்கர், குலனழகுபெறப்போதித் துறைநாளிற்புன்சமயக் கூட் டஞ்சால, நிலனதிகமுறக்காணுத் திக்குவிசயம்புரிவா னினைந்தா னன்றே.

[திக்கு விஜயம்.]

115. தாசரதிகூரத்தான் முதலாயமுதலிகளுந் தானுங்கோயில், ஈசனடிவணங்கிவிடை கொண்டுதிருவனந்தபுரத் தெய்திச்சின் னுள், வாசமவட்புரிந்துமடந் தன்பெயராலமைத்திகலு மதத்தோர் மாட்சி, நாசமுறமுடித்தவனி வலம்வரவுத்தரதிசையே நடப்ப தானுன்.

116. கண்ணனுறைமதுரைதுவா ரகைபடர்ந்துபிரயாகைக் கரு ணைநீல, வண்ணனுயர்மாதவனைக் காசிவிந்துமாதவனை வணங்கிப் போற்றி, வெண்ணகைச்சேயிதழ்வாணி விளங்குபட்டிமண்டபத் தை மேவலோடும், எண்ணருஞ்சீர்நாமகளு மெதிர்ந்துதழீஇக் கொண்டுதன திருக்கைபுக்காள்.

117. பழுதின்மணித்தவிசிருத்தி யருச்சனைசெய் தயலிருந்துபனு வலாட்டி, எழுதரியசதுமறையே முதலியனபனுவலினு ளிவன் சீர்தேர, முழுதுமுணர்முனிவானு மவற்றினுயர்திடப்பொருளை மொழியக்கேளாத், தொழுதுதுதித்தனளெதிரா தனுமவளைமகிழ்வி னெதிர் துதித்துநோக்கா

118. அன்னையுலகனைத்தினுக்கு நீயெனையின்றகமகிழ்வுற் ருர் வங்கூர்தற், கென்னைதவமுயன்றனனென் றுலுமவளுஞ்சங்கரப்பே ரெதியான்கேட்ட, முன்னைமறைவாக்கியத்தின் பொருளுணரான் றிகைத்தனனீ மொழிதலாலே, உன்னையுவந்தனன்போதா யனவி ருத்திகொள்கவெனு வுவப்பினீந்தாள்.

119. கவர்ந்ததனைத்தானவின்ற வேதாந்ததீபமவள் கரத்திலீந் தான், உவந்தவள்கைக்கொண்டதனின் பொருடேர்ந்துசிரத்திலணிந் துந்திப்போதின், பவந்தனதா முனிவானுந் தெரிவரியபொருண்மை யதிப் பனுவலென்னுச், சிவந்ததுகிர்நிகர்திருவாய் மலர்ந்துவகை யொடுமெலகில் சிறப்புச்செய்தாள்.

120. கலைமகளை விடைகொடெதிர் கவிஞர்களை வென்றுதிறை கவர்ந்துசொல்லுந், தொலைவில்புகழிலக்குவப்பே ரெதிநாதன்பெருந் தகைமைத் தோற்றமெல்லாங், கொலையயில்வேனிருபசிங்க மென் னும்பேர்ப்புவிபுரக்குங் கோமான்கேளா, அலைகடலிற்றுயில்புரிமா லிவனேயென்றவனையடைந் தடிமையானுன்.

121. தரையிலெவர்மதமுமுயர் தன்மதத்தாற் றொலைத்தவர்புன் சமயநீக்கித், திரையிலரவணைத்துயின்மால் சமயநிலைநிறுத்துமிவன் றிறனோனது, புரையிலவர்சிலரிவனை வதைத்திடுவான்கருதிமகம் புரிதலோடும், வரையிலுயர்பெரும்பூத மடங்கலாயுதித்தனவம் மகத் துண்மாதோ.

122. உய்த்தனராங்கவற்றையிரா மாநுசன்மீதவனுமிக வுருத்து மாயோன், கைத்தலநேமியைக்கருதத் திகிரியெனுங்கடவுளுமக் கணத்திற்றோன்றிப், பைத்தடுதல்கண்டவன்றான் பணிந்தடியாராயி னரப் பாராள்வேந்தும், மெய்த்தவனைமணிமதில்சூ ழயோத்தியெ னுநகர்காறும் விடுத்துமீண்டான்.

123. அங்கணிராமனைப்பரவ வக்கடவுணீநமக்கோ ரனுசனா லம், எங்கணுநீவெல்கவென வாமுதவவாய்த்தவன்று ளிறைஞ்சி யேத்தித், துங்கமுடிபயில்சாளக்கிராமவரைபதரிகையைத் தொழுது போற்றிச், சங்கரன்மாதுலனுகு மிமயவரையடைந்துசெயத் தம்ப நட்டான்.

124. தோதரிகைநைமிசா ரணியமுதற்பதியெவையுந் தொழுது போற்றிச், சீதநதிசிந்துமுதற் படிந்தயனேமுதலாய தேவர்க்கெல் லாம், நாதனெடுமால்புவியோர் நாதனியானெனவிருது நவின்று நான்கு, வேதமுனிவரையுமய வேதாந்தமுனிக்குரவன் வென்று மீண்டான்.

125. சிறந்தபுருடோத்தமநீலக்கிரியொண்கூர்மாத்ரிசிங்கவெற்பு, பிறந்தையகற்றிடுந்தசைமைப் புட்காரங்கோகுலமுதலாம் பிறங்க லெண்ணுன், கறந்தழைத்தகச்சித்திருக் கோவன்முட்டஞ்சித்திரகூ டம்பார்யாவுந், துறந்தவர்வாழ்சீராமவிண்ணகரந்திருநகரி துலங்கு நாங்கை

126. கண்ணபுரந்திருக்குடந்தை காவேரிநனந்தலைவாழ் கரிய மேக, வண்ணனரவணைத்துயிலுஞ் சீழையிலொண்மதிலரங்க மணிப் பொற்கோயில், அண்ணலிராகவன்றிருப்புல் லணைசேதுதிருமோகூ ரண்டாரனும், எண்ணருஞ்சீர்த்திருக்குருகூர் குறுங்குடிமாலிருஞ் சோலை யெனும்பேர்வாய்த்த

127. பதிகணெறியாநெடுமா லருச்சனையின்படிமைகளைப் பணிந் துபோற்றி, எதிகளிறைதன்பெயரான் மடமமைத்துமதிலரங்கத் தெய் திநந்தாக், கதிதருநாதனைவணங்கிக்கொணர்போதாயனவிருத்தி கவி னப்பார்மேன், மதியினுயர்மாணுக்கர்க் கிசைத்தொருவரிணையில னுய் வைகினால்.

## வேறு.

[கண்டன் என்னும் சோழனுடைய கொடுமை.]

128. இவனிருக்குமிப்பரிசெலாஞ்சிவத்தின்மேலிலையென்
றவனியிற்பலசமயமுமொருமதத்தடக்குங்
கவனமுற்றிடுசிறுதொழிற்கண்டனுங்கேளாத்
தவனனிற்கனன்றவனையிக்கணந்தருகெனலும்

129. எண்ணிறாதுவரோடினரெம்பிரானரங்கம்
நண்ணிவாழிராமாநுசன்றனக்கிதுநவின்றார்
புண்ணில்வேலெனச்செவியுளம்மொழிபுகப்பொருனாய்
விண்ணில்வாசவனெனினும்வெல்குவனெனவெகுண்டான்.

130. பையராவணைமேவியபரமனைப்பணியா
ஐயயான்செயவடுப்பதேதறைகுதியெனலும்
வையமுண்டவன்மாதவநிற்கொடுமகியிற்
செய்யயாநினைந்துள்ளனபலவெனத்தெரிவாய்.

131. நாளைநீநெறிக்கொண்டுமேனாட்டிடைநண்ண
வேளையோர்ந்திராககதர்செயல்வீட்டியவிதமே
காளையாத்திரிகாவலன்செருக்கினைக்காற்றிற்
பூளைவீயெனப்புரிகுவம்யாமெனப்புகன்றான்.

132. கூரானுங்கதுகாண்டலுங்கொடியவன்றன்பால்
சேரனீதியன்றடிகளின்றிருவருளுண்டேல்
ஆரணிந்ததோளறிவிலானவையகமனாகிப்
பாரகம்புகழ்விடைகொடுக்குவனெனப்பகர்ந்தான்.

133. அருள்விரித்துமுக்கோலுடன்றனதுருவளித்துப்
பொருள்விரித்துமாணாக்கரோடேகெனப்புகலும்
உருள்பரித்ததேரிரவிபோலவரொடுமொருவா
இருள்விரித்தபுன்மதத்தினானவைபுகுந்திருந்தான்.

134. தந்தியூகத்துளரியெனத்தாவியலுழையின்
பந்திபுக்கதோர்புலியெனப்பயின்றபாதகத்தின்
முந்தியுற்றதோர்தருமத்தின்வடிவெனமுனிவன்
வந்திருத்தலுமதியிலாவளவனுநோக்கா

135. அழுத்துசீற்றத்திற்சிவத்தின்மேற்பொருளிலென்றமைய
எழுத்திடென்றலுஞ்சிவமதாங்குருணிமேலவனும்
பழுத்திடுந்துரோணப்பெயர்ப்பதக்குமுண்டென்று
வழுத்தரும்பெருந்தகைத்திருவற்சனும்வரைந்தான்.

136. கண்டகண்டனுங்கட்கனல்பிறழ்தரக்கதமுட்
கொண்டகாலையிற்றூதர்வந்தவனடிகுறுகி
எண்டவத்திராமாநுசனிவனலனெனவாய்
விண்டறைந்தரங்கத்துளானவனெனவிரித்தார்.

[இராமாநுசர் மேனாட்டுக் கெழுந்தருளல்.]

137. சுற்றியங்கவன்றன்னைநந்தானைபோய்த்துனைவில்
பற்றிவீக்கியிக்கணந்தருகுதிரெனப்பகர்ந்தான்
வெற்றிவீரருஞ்சேனையும்படர்வதுவினவா
மற்றிவன்றனாட்டுறைதறீதெனமுனிமதித்தே

138. கடந்துபொன்னிமாநதியினைக்குடதிசைகடிதிற்
படர்ந்தபான்மைகேட்டறிவிலாவிறையவன்பதாதி
தொடர்ந்துபின்செலப்பட்டர்கோன்கவியொன்றுசொல்லி
கிடந்ததோர்பரலெறிந்தனனெழுந்ததோர்கிரியே.

139. அண்ணன்மாமுனிவரன்றனைத்தொடர்ந்துபின்னனுகும்
எண்ணரும்படைகிரியிடையெழுதலானினியாம்
நண்ணலாங்கவன்றனையரிதாமெனநவிலாப்
பண்ணமைந்ததோராசனுக்கிம்முறைபகர்ந்தார்.

[கூரத்தாழ்வான் கண் களைதல்.]

140. அரசனம்முனிவரன்றனையழல்விழிநோக்கிக்
குருணிமேற்பதக்குண்டுகொலெனமுனிவரனும்
பரவுநன்மறைபுகன்றரிபராபரனென்றே
இருபதைந்தெனுங்கட்சியாற்சிவமதமிறுத்தான்.

141. விளைவதோர்கிலான்வெகுண்டுகூரனையிணைவிழியைக்
களைதிரென்றலுமவனுநிற்கண்டகண்களினால்
அளைநுகர்ந்தமாலடியரைக்காண்டறீதாமென்
றிளையவன்பதநினைந்துதன்விழிகளைந்தெழுந்தான்.

142. கோயில்புக்கவணிருந்தனன்குவலயத்துயிர்க்கோர்
த்தாயின்மிக்கவன்புளவிராமாநுசன்றானும்
வேயினக்கடந்திரும்புகானெறிக்கொடுமேல்பாற்
போயிடக்குடகடவினுட்பதங்கனும்புகுந்தான்.

[வேடமுதலிகள்.]

143. முனியுமொன்பதிற்றைவராமுதலிகளுடனே
குனிதருஞ்சிலைக்கொலைஞர்சீறூர்வயின்குறுகி
இனியிருக்குவமிவணெனுமுதலிகட்கியம்பும்
புனிதவாசகங்கேட்டனர்குரம்பைவாழ்புளிஞர்.

144. இருளிலுற்றவரெவர்கொலென்றயிர்த்தயிலெடுத்தே
அருகினுற்றவர்வயிணவரெனமொழியானுந்
திருநுதற்றிருமண்ணினுந்தெளிந்தவர்திருத்தாள்
உருகுளத்தொடும்பலமுறைபணிந்தனருவப்பால்.

145. யாண்டிருந்தெழுந்தருள்குவதடிகளீண்டெனத்தாள்
பூண்டிறைஞ்சியேவினவலும்புகலுதற்குரியோர்
வேண்டிருங்கதியுதவியேயுலகெலாம்விருப்பால்
ஆண்டிலங்குமாலரங்கமாநகரமென்றறைந்தார்.

146. என்னலோடுமந்நகரில்வாழும்பெருமானார்
நன்னர்வாய்த்துறைபரிசறைகுதிரெனநவின்றார்
அன்னமாமுனிவரனைநீரறிந்தனர்வினவு
முன்னமேதெனவணங்கியப்புளிஞருமொழிவார்.

147. இலங்குபொன்மதிற்கச்சிமாதிருவருட்கிலக்காய்
வலங்கொள்வேங்கடமாதவன்விரும்புறமானந்
துலங்கியோபளக்கிரியுறவாயிகளுலைத்தே
நலங்குலாவியமுனிவரன்றிருமலைநல்லான்

148. மருள்கடிந்தெமையாளுநாளெம்பெருமானார்
ஒருவர்மாநிலத்துயிரெலாமுய்யவாழ்பரம
குருவவன்றிருவடிகளேசரணெனக்குறித்தே
இருமினீவிரென்றிசைத்ததாலறிந்தனமென்றார்.

149. உளமகிழ்ந்திராமாநுசமுனிவனுமுயர்சீர்
வளமலிந்தநல்லானெனுமுகினடுவனத்தும்
அளவியேபொழிந்ததுகொலென்றக்கிராதருக்குத்
துளவணிந்தமாணிகர்தனதுருவமுஞ்சொற்றான்.

150. அரங்கமாநகராவணைக்கடவுளீண்டடியார்க்
கிரங்கியாட்கொளவந்ததேயெனப்பணிந்தேத்தாக்
கரங்கள்கூப்பித்தம்பதியினுட்கொடுசெலாக்களித்தார்
சரங்களாற்பொலியாவநாழிப்புறச்சவரர்.

151. வருக்கைவாழைதேமாங்கனிநுவணைதேன்மகிழ்வாற்
பொருக்கெனத்திருமுன்னர்வைத்தருந்தெனப்புகன்றார்
பெருக்குமன்புடன்முதலிகளுடனுமப்பெரியோன்
சுருக்கமின்றியேகடன்முடித்தயின்றவட்டியின்றான்.

[யாதவாத்திரியடைதல்.]

152. அங்குநின்றறுகாவதங்கடந்துதன்னடியார்
தங்குமோர்பதிதரித்துமற்றப்பதிதணந்தே
கங்குனீங்குறக்கதிர்விடுமரதனக்கணங்கள்
எங்குமார்ந்தயாதவக்கிரியடைந்தவணிருந்தான்.

வேறு.

[கண்டனை இராமாநுசர் சபித்தல்.]

153. அவணவனுறைய வரங்கமாநகரத் தமர்திருவற்சனு மன்பால், இவணிகழ்முறைமைநவின்மெனத்தூதர்க் கியம்பவத்தூதருமேகிக், கவலையொடிறைஞ்சிநிகழ்ந்தவாறுரைப்ப வெதிகளுந்தனுமிகக்கனன்றே, தவறல்செய்யாசன்முடிந்திடவென்றே யரங்கர்தாணினைந்தனன்சபித்தான்.

154. கடுமிடற்றரவினணைத்துயிலரங்கக் கடவுளுங்கனவினிற்கண்டங், கொடுமிடற்கண்டன்கண்டமேகண்டங் காண்டலுங்குலைந்துயிர்த்தெழுந்தே, சுடுமிடர்க்கிடனுய்க்கிருமிவாய்வழியே சொரிந்துதன்கிளையொடுந்தொலைந்தான், விடுமிடர்ப்பெரியோர்வெகுண்டுளோரெவரே விளிந்திலார்விரிகடற்புவிமேல்.

155. அன்னவாறரங்கத்தமருமாருதியம் மாடிருமாருதியாண்டான், என்னவாழிருவரிலக்குவமுனிபா லெய்தியேயிறைஞ்சினரியம்ப, உன்னலாவுவகையொடுதழீஇயவர்கட் குதவுவானுயர்பொருளரிதாய், முன்னமேமொழிந்ததுவயமந்திரத்தின் மூலமாம்பொருளினைமொழிந்தான்.

[திருநாராயணபுரத்தில் செல்வப்பிள்ளை விக்கிரகம் பிரதிஷ்டித்தல்.]

156. யாதவபுரியிற்கண்ணனூர்படிமையியற்றியிற்பதிட்டைசெய்தெயிறோர், கோதகறிருக்கோபுரந்திருக்கோயி லமைத்தவன்றனைவிடைகொடுநீண், மாதவனரங்கமாயவற்பணிவான் கருதமற்றவனுளோர்வணங்கி, நீதணந்திடயாந்தரிக்கிலோமெனவே நிகழ்த்துபுநெடிதுயிர்த்திருந்தார்.

[இராமாநுசர் திருவரங்கம் திரும்புதல்.]

157. மற்றவர்துயரந்தணித்தவண்டனையோர் படிமையின்வகுத்தினிதமைத்தே, நற்றவனரங்கநகர்வயினணுகா நாகமீத்துயின்மறைநாதன், பொற்றடந்துணைத்தாள் பணிந்தனன்பலகாற் புகழ்தலுங்கருணையம்புயலும், உற்றனைகொல்லோவகுத்தநஞ்சமய நிறுத்துவானெனத்தழீஇயுவந்தான்.

158. ஊழிநூறொருவியுலகுயிரெவையு மொழியினுமுலைவிலாதுயர்ந்தே, வாழிநீவாழிமதமுநிற்பணிந்தோர் வணங்கினோரெமையெனாமகிழ்வாற், சூழிமால்கரிகாத்தருள்பிரான்வரமீந் தரவணைமீதுகண்டுயின்றான், ஆழிமாதவன்பால்விடைகொடுமுனியும் வற்சன்மாளிகைதனையடைந்தான்.

[கூரத்தாழ்வான் கண் பெறுதல்.]

159. எதிரெழுந் திறைஞ்சும் வற்சனைத்தழீஇக்கொண் டிருகணீராட்டியாண்டிருந்து, முதிர்கருணையினாற்கைகளால்விழியைத் தைவராமுதுமறைமுதலே, மதிலரங்கேசவற்சனதிருகண் டருகெனாவழுத்தமால்பலித்தான், எதிகடம்மிறையுமெழுந்துதன்மடஞ்சார்ந் தெழுந்தருளினனினிதிருந்தான்.

160. வஞ்சமோவியசீர்வற்சனுங்கோயின் மருவியேமணிமறுமார்போன், கஞ்சமாமலர்த்தாண்முதல்முடிகாறுங் கண்களானோக்குபுகளித்தே, தஞ்சநீயெனையாண்டருள்கெனவணங்கி வழுத்தலுஞ்சகமளந்தோனும், எஞ்சலாவரநீவேட்டவைதருவா மெனத்திருவாய்மலர்ந்திசைத்தான்.

161. உலைவிலாப்பரமபதந்தருகுதியென் றிறைஞ்சமாலுதவினனுயர்சீர், தொலைவிலாமுனியும்விடைகொளாத்தனதா கியதிருமாளிகைதுறந்தே, நிலையிலாவடிவையகற்றுவானெனையா ணெடியமாறிருவடிநினையா, அலைவிலாயோகத்தினிலமர்ந்திருந்தா னெதிகணாதனுமஃதறிந்தான்.

162. துயருழந்தவன்மாட்டணுகிநீயெனையுந் துறந்ததென்னவில்கெனத்துயர்தீர்ந், தயர்தவமுனியுமுளத்திலைம்புலனு மமைத்துமால்பதத்தினிலுளஞ்சேர்த், தயர்விலாயோகத்திருந்தவனுணரா னஃதிராமாநுசனறிந்தே, மயர்விலாத்துவயமனுவினைச்செவிக்கே வழங்கினான்வற்சனுமகிழ்ந்தே

[கூரத்தாழ்வான் பரமபதித்தல்.]

163. உடறுறந்தரிவாழுயர்திருநாட்டை யடைந்தனன்கூரவனு முலவாப், படருழந்தவன்சேய்பட்டனுமுனியாற் பழுதிலாச்சுரு திநூற்படியே, கடனயர்ந்தவனைக்கைக்கொடாடரவிற் கண்வளர் கருணையங்கடவுள், இடனடைந்திவனின்கையடையெனையா ளீச வென்றடிபணிந்தீந்தான்.

[அரங்கன் பட்டருக்கு அருள் செய்தல்.]

164. இந்திரைபுடவியெனுமனைவியரோ டெம்பிரான்றிருவரங்கே சன், செந்திருக்கரத்தாற்றழீஇத்தனக்கினிய சிறுவனுய்விரும்பி நஞ்செல்வம், முந்தியவரிசையிவனதென்றருளான் மொழிந்தனன் பட்டனுமுனியும், உந்தியம்புயத்திலுதித்தசேய்வானிற் குயர்ந் துளானெனப்புவிக்குயர்ந்தான்.

165. பரிவினம்பெருமான்பின்னருஞ்சுதனும் பட்டனுக்காயு வைப்பலித்தான், உரியவிஞ்சையினையிலக்குவமுனிவோ னுதவின னுலகெலாம்பரவுந், தெரிசனமுதன்மையளித்தனன்புகழெம் பாரெ னுமுனிவரன்றிருமால், அரிவரகுமரனைபட்டனும்பா ரடிபணிந் திடவினிதமர்ந்தான்.

வேறு.

166. நற்றவஞ்சேர்முக்கோல ரெழுநூற்றுவோரெழுபா னுன் கினோர்மாண், பெற்றருள்சிங்காதனரே காந்தியரீராயிரவர் பிரியா தேத்த, உற்றபொருட்பனுவலவர்க் குரைத்தனனுற்கடல்புடைசூ ழுலகோர்வாழக், கொற்றவிராமாநுசனு முனிவரனுநம்பெருமாள் கோயில்வாழ்ந்தான்.

அரிசமயதீபம்—இராமாநுசச்சருக்கம் முற்றிற்று.

# அரிசமயதீபம்.

## உரை.

**அரி சமய தீபம்** என்பது அரி-சமயர்-தீபம் என்னும் மூன்று வட சொற்கள் தொடர்ந்த தொடர்மொழிப்பெயர்.

**அரி**-(ஹரி) அடியார் பாவங்களை (ஹரிப்பவன்) போக்குமவன். யுகாந்த காலத்தில் யாவரையும் எவற்றையும் அழிக்குமவன் என்னலுமாம்.

**சமயர்.** சமயம்-(ஸமயம்) நன்கு அறியப்படுவது: அரியென்னும் பரம புருஷனையும், சேதனரையும், அப்பரம புருஷனிடத்தில் சேதனர் பெறும் பேற்றையும், அப்பேற்றைப் பெறுவதற்கான உபாயத்தையும், அதில் நேரிடும் தடையையும் (ஆகிய அர்த்தபஞ்சகத்தை) நன்கறிதற்குச் சாதனமானது. சமயர்-சமயத்தை யனுசரிப்பவர்.

**தீபம்**- விளக்கு.

ஆகவே அரிசமயதீபம் என்பது அரிசமயத்தை யனுசரிப்பவரை விளக்குந்தீபம் என்பதாம். எனவே அரிசமயத்தை யனுசரித்தவரான ஆழ்வாராசாரியர்களது வைபவங்களை விளக்கும் நூல் என்பது பொருள். பரமபதச்சருக்கத்தில் 47-வது செய்யுளில் "பாகவதர்சீரெலாம், கருத்தனிப் பரிசுரைத்தது" என வருதல் காண்க.

இனி, அரிசமயம் என்பது விஷ்ணுமதம்: வைஷ்ணவம். அரிசமய தீபம்-வைஷ்ணவத்தை விளக்குந் தீபம். ஆழ்வாராசாரியர்களுடைய வைபவங்களும் வேதாதிநூல்களைத் தழுவிய அவர்கள் அருளிச்செயல்களுமே வைஷ்ணவத்தை இன்னதென்றறியத்தக்க சாதனமாயிருத்தலால், அவற்றை உணர்த்தும் இந்நூல் அரிசமயதீபம் எனப் பெயர்பெற்றது எனினும் பொருந்தும்.

# இராமாநுசச்சருக்கம்.

**இராமாநுசர்,** ராம+அநுச என்னும் இரண்டு வடமொழித்தொடர். நிலைமொழியீற்று அகரமும் வருமொழி முதல் அகரமும் கூடி ஆகாரமானது தீர்க்கசந்தி. (ராம) இராமனுக்கு (அநுஜ) பின்பிறந்தவர் என்பது பொருள். அர்விகுதி சிறப்புப் பொருளது. ஸர்வ தேச ஸர்வ கால ஸர்வாவஸ்தைகளிலும் எம்பெருமானைத் தொடர்ந்து அடிமை செய்யுமவரான ஆதிசேஷர், லக்ஷ்மணராயும் பலதேவராயும் இராமாநுசராயும் முறையே அவதரித்தாரேனும், லக்ஷ்மணர் பெருமானைத் தொடர்ந்து அடிமைசெய்ததுபோலவே, இராமாநுசரும் செய்துவந்தனரென, உபதேசரத்தினமாலை 28-வது செய்யுள் வியாக்கியானத்தில், ஸ்ரீ பிள்ளை லோகார்யஜீயர் அருளிச்செய்தனராதலால், அதுவே நிரூபகமாக இராமாநுசரெனத் திருநாமம் பெற்றனர். சருக்கம்—பிரிவு.

# நான்முகம்.

நூன்முகம் என்பது நூற்குமுன் சொல்லப்படுவது. இதில் முதற் செய்யுளில் பொதுவாழ்த்தும், இரண்டாவது செய்யுளில் ஆழ்வார் பூருவாசாரியர்கள் வாழ்த்தும், மூன்ருவது செய்யுளில் இராமாநுசவணக்கமும், நான்காவது செய்யுளில் திருமால் துதியும் உரைத்திருப்பது காண்க.

1. (இ-ள்.) புகழ் விளங்குக-புகழ் விளங்குவதாக, தருமமும் ஞானமும் பொலிக-தருமமும் ஞானமும் பொலிவடைவனவாக, சகமும் மாதவன் தனிமுதல் சமயமும் தழைக்க-உலகமும் திருமாலின் ஒப்பற்ற முதன்மையான சமயமுந் தழைப்பனவாக, நிகமம் நான்கும்-நான்கு வேதங்களும், அந்தணரும்-வேதியரும், ஆநிரைகளும்-பசுக்கூட்டங்களும், நிறைந்த மகமும்-நிறைவுற்ற யாகங்களும், ஓங்குக-விருத்தியடைவனவாக; முறைதவா மன்னன் வாழிய-முறைதவருத அரசன் வாழ்வானுக. (எ-று.)

"தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார், தோன்றலிற் றேன்ருமை நன்று" என்கிறபடி உலகத்து மாந்தர் பெறவேண்டுவது புகழாதலாலும், அப்புகழ்-தருமங்களை யறிந்தொழுகுவதனு லுண்டாவதாதலாலும், அத்தருமம்-தக்கஞானத்தாலே பெறுவதாதலாலும், அந்த ஞானம்-மக்களுக்கு வேண்டிய பலவளங்களுடன் உலகம் செழித்திருப்பதனுல் நிலைபெறுவதொன்றுதலாலும், அச்செழிப்பு-பகவதாராதநங்களா லமைவதாதலாலும், அவ்வாராதநம் நிலைபெற்றோங்குதற்கு அவரது சமயம் வேண்டற்பாலதாதலாலும், அச்சமயத்துக்குப் பிரமாணங்களான வேதங்கள் இன்றியமையாதனவாதலாலும், அவ்வேதங்கள் வழங்க அந்தணர் அமைந்தவராதலாலும், அவர்க்கு ஆநிரையும் மகமும் அவசியமாதலாலும், இவற்றுக்குத் தீங்கு வாராவண்ணங் காப்பதற்கு மன்னன் இன்றியமையாதவனுதலாலும் இவற்றை இம்முறையே எடுத்தோதி வாழ்த்துக் கூறினர்.

2. (இ-ள்.) பூதன்—பூதத்தாழ்வார், பொய்கை-பொய்கையாழ்வார், பேய்-பேயாழ்வார், மழிசையான்-திருமழிசையாழ்வார், தொண்டர்தாட்பொடி-தொண்டரடிப்பொடியாழ்வார், நால்வேதமாறன்-நான்கு வேதங்களையுந் தமிழாகச்செய்த நம்மாழ்வார், முத்தமிழ் குலசேகரன்-முத்தமிழ் வல்லவராகிய குலசேகராழ்வார், விளங்கும் கீதநாமத்தன்-விளங்கும் திருப்பாணுழ்வார், பட்டர்கோன்-பெரியாழ்வார், கிளர்பரகாலன்-பெருமையாலுயர்ந்த திருமங்கையாழ்வார், நாதன்-ஸ்ரீமந்நாதமுனிகள், யாமுநன்-ஸ்ரீ ஆளவந்தார் (ஆகிய இவர்கள்), வாழ்க-வாழ்வார்களாக; தமிழ்நலன் வாழிய-தமிழின் நலமும் வாழ்வதாக. (எ-று.)

**ஆழ்வார்கள்**-பகவத்குணுநுபவத்தில் ஆழுமவர்கள். **பூதத்தாழ்வார்**-எம்பெருமானுல் நிலைமைபெற்றவர். **பொய்கையாழ்வார்**-பொற்ருமரைத் தடாகத்தி லுதித்தவர். **பேயாழ்வார்**-பேய்கொண்டவர்போலஎம்பெருமான்விஷயத்தி லீடுபட்டவர். **மழிசையாழ்வார்**-திருமழிசையி லுதித்தவர். **தொண்டரடிப்பொடி யாழ்வார்**-பாகவதர்களது திருவடித்தூள் (ஸ்ரீவைஷ்ணவ

ஸ்ரீபாததூளி) எனத் தமக்குப் பெயராக விரும்பினவர். மாறன்-பிறந்தது முதல் உலகிலுள்ள ஸம்ஸாரிகள் நடக்கைக்கு மாறுபட்டிருந்தவர். குல சேகராழ்வார்-தமது குலத்திற் பிறந்த ஏனையோர் யாவரினும் சரீரத்திற் சிறந்த வுறுப்பான சிரத்தைப் போன்றவர்; அன்றித் தலையிற்றரிக்கும் முடியைப் போன்றவரெனக் கொள்ளலுமாம். திருப்பாணாழ்வார்-இசையி னால் எம்பெருமானை யுகப்பித்தவர்; அன்றிப் பாணர்குடியில் வளர்ந்தவ ரெனினுமாம். பாணர்-புகழ்ந்து பாடுவோர். பட்டர்கோன்-வேதியர் தலை வர். இவர்க்குப் பெரியாழ்வார் என்னும் திருநாமம் வாய்த்ததற்குக் கார ணம்: ''மங்களா சாசனத்தின் மற்றுள்ள வாழ்வார்கள், தங்களார் வத்தளவு தானன்றிப்-பொங்கும், பரிவாலே வில்லிபுத்தூர்ப் பட்டர்பிரான் பெற்றான், பெரியாழ்வா ரென்னும் பெயர்.'' என்னும் பாசுரத்தாலறிக. பரகாலன்-தம்முடன் கூடாத பிறருக்குக் காலனைப்போன்றவர். யாமுநன்-யமுனைத் துறையின்கண் ணெழுந்தருளியிருக்கும் எம்பெருமானது திருநாமத்தைக் கொண்டவர். முத்தமிழ்-இயல், இசை, நாடகம் என்னும் மூன்றுவகைப் பட்ட தமிழ். வாழ்க வாழிய இரண்டும் வியங்கோள்.

3. (இ-ள்.) பதிகள் எங்கணும்-பதிகள் எல்லாவற்றிலும், சுருதியின் பொருள் எல்லாம் பரப்பி-வேதத்திற் சொல்லப்படும் பொருள்களையெல் லாம் விரித்து, அதிகம் மால்முதல் சமயமும்-பெருமைவாய்ந்த திருமா லினது முதன்மைபெற்ற சமயத்தையும், தன்மதம் ஆக்கி-தனது மதமாகச் செய்து, எதிகள் நாதன் ஆகிய-எதிகளுக்குத் தலைவராகிய, இராமாநுசன்-இராமாநுச முனிவரது, இருதாள் துதி-இரண்டு திருவடிகளையுந் துதித் தலானது, கருங்கடல் துயிலும் மாதவன் பதம் துதியே-சிறப்புற்ற திருப் பாற்கடலில் அறிதுயிலமர்ந்த மாதவனது திருவடிகளைத் துதித்தலேயாம். (எ-று.)

இராமாநுசனைத் துதிப்பதே எம்பெருமானைத் துதித்தபடியாம். எதி கள் (யதிகள்)-இந்திரியங்களை வென்றவர்கள்.

இராமாநுசர், ஆதிசேஷாம்சமாய் ஸ்ரீ பெரும்பூதூரில் ஆசூரிகேசவா சார்யருக்குப் புத்திரரா யவதரித்தவர். இவர் யாதவப்பிரகாசரிடத்து வேதாதி கலைகளை யோதிவருகையில், சில சுருதிவாக்கியங்களுக்கு அவர் பொருள் கூறுமிடத்து மாறுபட்டுப் பிரிந்து, அவரது வஞ்சனைக் கருத்துக்குத் தப் பும்படி பெருமாள் பிராட்டியாரது அநுக்கிரகம் பெற்று, ஸ்ரீ ஆளவந்தார் திருவருளை யடைந்து, பாகவதாபசாரம்புரிந்த மனைவியைத் துறந்து, துரீயா சிரமம் கைக்கொண்டனர். பின்பு பேரருளாளன் நியமித்தவண்ணம் பெரியநம்பிகளை யாசிரயித்து திருவரங்கத்தி லிருக்கும்போது, திருக்கோட் டியூர் நம்பிகளிடத்து அதிரகசியமாகப்பெற்ற ரகசியப்பொருளைப் பெரு மான் உற்சவத்திலே யாவருக்கும் உபதேசித்ததைக் கேட்ட திருக்கோட்டியூர் நம்பிகள், 'இங்ஙனஞ் செய்யலாமோ' வென்ன, இராமாநுசர், 'அடியேன் இவ்வரிய ரகசியப்பொருளை இங்ஙனஞ் சொன்னதனால் நரகமடையினும், இதனைக் கேட்டோர் பரமபத வாழ்வெய்துவரே அஃதொன்றுமே அடியே னுக்குப் பெரும்பேறு' என்று கூறுதலும், திருக்கோட்டியூர் நம்பிகள் மிக மகிழ்ந்து 'இத்தரிசனம் நின்பெயரால் வழங்குக' எனக் கூறினர். இஃதன் றியும் இராமாநுசர் ஞானமொன்றையே நோக்கித் தாழ்ந்த குலத்தவரான பிள்ளையுறங்கா வில்லிதாசனைப் பரிசித்துக்கொண்டும், திருமலைக்கு வழி

காட்டிய பஞ்சமனை விழுந்து சேவித்தும், டில்லி நவாபினிடமிருந்த செல்வப்பிள்ளை விக்கிரகத்தைக் கொண்டுவரும்போது நேர்ந்த ஆபத்துக்கு உபகரித்த பஞ்சமர்கள் அப்பெருமான் ஸந்நிதிக்குட் போய்ச் சேவிக்கும் படி நியமநமிட்டும், ஸ்ரீபாஷ்யாதி நூல்களியற்றியும், "வான்றிகழுஞ் சோலை மதிளரங்கர் வண்புகழ்மேல், ஆன்ற தமிழ்மறைக ளாயிரமும்—ஈன்ற, முதற்ருய் சடகோபன் மொய்ம்பால் வளர்த்த, இதத்தா யிராமாநுசன்" என்கிறபடி, தமிழ் மறையை வளர்த்தும், பல்லாயிரம் பேரை வைண வர்களாக்கியும், தமக்கும் தமது சம்பந்த சம்பந்திகளுக்கும் பரமபதவாழ்வு தரும்படி பெருமானை வேண்டியும், வைணவசித்தாந்தப் பிரவர்த்தகராய்ப் போந்ததனுல் "எம்பெருமானுர் தரிசனமென்றே யிதுக்கு நம்பெருமாள் பேரிட்டு நாட்டிவைத்தார்" என்றபடி எம்பெருமானும் நியமித்தனன். ஆகவே இவ்வாசிரியர் "அதிகமான் முதற்சமயமுந் தன்மதமாக்கி" என்ருர்.

4. (இ-ள்.) கங்கை தங்கிய பங்கயச் சரணமும்-கங்காநதி பொருந் திய தாமரைபோன்ற திருவடிகளும், கமலமங்கை-தாமரைமலரிலெழுந் தருளிய பெரிய பிராட்டியும், செங்கதிர்மணி-சிவந்த கிரணங்களையுடைய கௌஸ்துபமணியும், திருவற்சம்-ஸ்ரீவற்சமும், ஆர்-பொருந்திய, மார்பும்-திருமார்பும், சங்கை ஆழியை கதை சிலை வாளினை தரித்த செங்கையும்-சங்கையும் சக்கரத்தையும் கதாயுதத்தையும் வில்லையும் வாளையும் தரித் திருக்கும் சிவந்த திருக்கைகளும், பயில்-உடைய, பரமனை-பரம்பொருளை, தினமும்-எந்நாளும், பணிவாம்-வணங்குவோம். (எ-று.)

திருமாலின் பஞ்சாயுதங்களான சங்கு-ஆழி-கதை-சிலை-வாள் என்பன முறையே பாஞ்சஜந்நியம், சுதரிசனம், கௌமோதகி, சார்ங்கம், நாந்த கம் எனப்பெயர் பெறும். கங்கைதங்கிய பங்கயச்சரணம்-இறைவன், திரி விக்கிரமாவதாரத்தில் மேலுலகங்களையெல்லாம் ஓரடியாக அளந்தபோது, சத்தியலோகத்தை அத்திருவடி அடைகையில், பிரமன், அதனைத் தனது கமண்டல நீரினுல் திருமஞ்சனம் பண்ணின நீரே கங்கையாகப் பெருகிற்று என்பவாதலின் 'கங்கை......சரணம்' என்ருர்.

4673 (7725)

# 14–வது இராமாநுசச்சருக்கம்.

1. (இ-ள்.) வடக்கின் கண்ணுள்ள திருவேங்கடமென்னும் பெருமை பொருந்திய மலைக்குத் தெற்கில் வளம்பொருந்திய அழகிய தொண்டைநாட்டிலே, விசாலமாகிய பெரிய மதில்கள் சூழ்ந்த ஸ்ரீ ஹஸ்திகிரிக்குக் கிழக்கிலே, திருவெவ்வுளூரென்னும் ஸ்ரீ வீரராகவப்பெருமான் அறிதுயிலமரும் திருப்பதிக்குத் தெற்கிலே, அரிய உபயவேதங்களுக்கும் ஒப்பற்ற இடமாகி, பூமிதேவியாரென்னும் மடந்தையின் திருமுகத்தைப்போன்றிருக்கும் அழகிய நகரம்,

முதலிரண்டு செய்யுளும் ஒரு தொடர். வடக்கு மங்கலத்திசையாதலாலும் ஓரிடத்துக்கு எல்லை கூறுமிடத்து, வடவெல்லையை முதற்கண் கூறவேண்டுமாதலாலும் வடதிசையை முதலில் எடுத்தார். இராமாநுசர், ஆதிசேஷருடைய அவதாரமாதல்போலத் திருமலையும் ஆதிசேஷாவதாரமாய்ச் சேஷகிரியெனப் பெயர்பெற்றிருத்தலை நோக்கியும் "பூமன்னு மாது பொருந்திய மார்பன் புகழ்மலிந்த, பாமன்னு மாற னடிபணிந் துய்ந்தவன் பல்கலையோர், தாமன்னவந்த விராமாநுசன்" என்பதின்படி இராமாநுசருக்குப் பரமாசாரியரான நம்மாழ்வார், திருவாய்மொழியில், "உலகமுண்ட பெருவாயா" என்னுந் திருப்பதிகத்தில் பரிபூர்ண சரணாகதி பண்ணின தலமாதலாலும் "நிலங்கடந்த நெடுமுடியண்ணலை நோக்கி உலகர்தவஞ்செய்து வீடுபெற்ற மலை" யென தொல்காப்பியம் முகவுரையில் நச்சினார்க்கினிய ருரைத்திருப்பதனாலும், 'வேங்கட மால்வரை' யென விதந்து கூறினார். **வேங்கடம்** என்பதனை வேம்–பாவம், கடம்–எரித்தல் எனக்கொண்டு, தன்னையடைந்தவர்களது பாவ மனைத்தையும் ஒழிப்பது என்றுதல், வேம்–அழிவின்மை, கடம்–ஐசுவரியம் எனக்கொண்டு, தன்னையடைந்தார்க்கு அழிவில்லாத ஐசுவரியங்களைத் தருவதென்றுதல் கொள்க. **அத்திகிரி**–ஹஸ்திகிரி. ஹஸ்தி–யானை, கிரி–மலை. கஜேந்திராழ்வான், மலையுருக்கொண்டு அமைந்திருப்பது. **எவ்வுள்**–எந்தவீடு. வீரராகவப்பெருமான், கனகவல்லித்தாயாரைத் திருமணம்புணர்ந்து அழைத்துவருகையில், சாலிஹோத்திர முனிவர் தவஞ்செய்திருந்த அவ்விடத்துக்கு வந்து அவருக்குச் சேவைதந்த இடம்; (கிம்க்ருஹம்) எந்தவீடு எனப் பெருமானைக் கேட்டமையால் அதுவே பெயர் அத்திருப்பதிக்கு அமைந்துளது. **மால்**–பெரியோன்; பண்பாகுபெயர். **ஆங்கு**–அசைநிலை. வேதமோதி அவ்வாறொழுகுவாருக் கிடமாயிருத்தலால் 'நான்மறைக்கு மிடமாய்' என்றார்.

2. (இ-ள்.) கருமையும் பெருமையுமுடைய யானையும் குதிரையும் தேரும் நெருங்கும் வீதிகளும், சூரியனை யொக்கும் பெரிய இரத்தினக்கூட்டங்கள் விளங்கும் பொன்மயமான கோபுரங்களும், மதில்களும், பூமியிற் சாரமாந்தன்மை யுடையதென்னும் பெயரும் சிறந்து, பெருமான் எழுந்தருளியிருக்கும் முதன்மைபெற்ற பரமபதம்போல, அன்னவாகனத்தையுடைய பிரமதேவனுக்கும் கணிப்பதற்கரிய வளமிகுந்த பெருமையுடைய **ஸ்ரீபெரும்பூதூர்** என்பதாம்.

**கஞல்வீதி**—வினைத்தொகை. **முதற்பதி**—முதன்மையாகச் சொல்லப்படும் பரமபதம். **கணிப்பரிய**—கணிப்ப+அரிய; கணிப்பு+அரிய எனப் பிரித்து, கணிப்பு என்பதைத் தொழிற்பெயராகக் கொள்வதுமாம். **பூதூர்**—பூத+ஊர்—பூதங்களாலியற்றப்பட்ட நகரம்.

3. (இ-ள்.) ஆருயிரந் திருநாமங்களான அந்தணர்களுக்கு இடமான தான அந்த ஸ்ரீ பெரும்பூதூரில், பெருமானது திருவடிகளைத் துதிக்கும் ஆசூரி கேசவாசாரியர் ஆகிய மநநசீலரது தேவியாராய், மலர்போன்ற பாதங்களும், தளிர்போன்ற கைகளும், மலர்கள் சூடிய கூந்தலும், தெரிவதற்கரிதான இடையும், வளையும் மூங்கில்போன்ற தோள்களும், இனிய பால் போன்ற சொல்லும், உயர்வான குணங்களும், குலையுடைய கமுகுபோன்ற கண்டமும், இலவம்பூப்போன்ற சிவந்த வாயுமுடைய **காந்திமதியம்மையாரிடத்தில்,**

இதுமுதல் ஆறு செய்யுள் வரையில் ஒரு தொடர். **மாறன்**—மால்+தாள். மால்தாள் வழுத்தும் ஆசூரி கேசவனுகும் முனி என்க. **ஆசூரி**—ஆஸுரி என்பதன் மரூஉ. **தேற**—ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

4. (இ-ள்.) தமது தோளின்மீது பதினுலுலகங்களையும் ஒரு புஷ்பத்தைப்போல் தாங்கியும், சொல்வதற்கரிய ஆயிரமுகங்களாலும் முற்காலத்தில் பழமையான வேதசாஸ்திரங்களைச் சொல்லியருளியும், தம்மிடத்தில் பக்தி செய்தவர்களுடைய வருத்தமான பிறவிக்கடலுக்குத் தெப்பமாகிய பெருமானது ஆசனமாக அழகுபெற்றும், குறைதலின்றி விளங்கும் சீரையுடைய இளையபெருமாளும் நம்பி மூத்தபிராஞுமாகியும் பெருமை நிறைந்தவர்:

**மறைநூல்**—வேதசாஸ்திரங்கள்; உம்மைத்தொகை. **நுவன்று**—நுவல்—பகுதி. **நோற்றோர்**—நோல்—பகுதி. **கவல்**—முதனிலைத் தொழிற்பெயர். **கரியோன் தவிசு**—ஆதிசேஷர். ஆதிசேஷர் எம்பெருமானுக்குத் தவிசாயிருத்தல், "சென்றாற் குடையா மிருந்தாற் சிங்காதனமாம், நின்றால் மரவடியாம் நீள்கடலுள்—என்றும், புணையாம் மணிவிளக்காம் பூம்பட்டாம் புல்கும், அணையாந் திருமாற் கரவு" என்னும் முதல் திருவந்தாதிச் செய்யுளாலுணர்க. **இற்று**—இறு என்னும் பகுதியில் ஒற்றிரட்டித்து இறந்த காலங்காட்டியது. **இலக்குவன்**—லக்ஷ்மணன் என்பதன் மரூஉ. இலக்குவன், ஆதிசேஷாவதார மென்பதனை, கம்பராமாயணம் பாலகாண்டம், திருவவதாரப்படலத்தில் "வளையொடு திகிரியும் வடவை தீதர, விளைதரு கடுவுடை விரிகொள் பாயலும், இளைஞர்க ளெனவடி பரவ வேகினாம், வளைமதி லயோத்தியில் வருது மென்றனன்" என்னுஞ் செய்யுளாலுணர்க. பலதேவன், ஆதிசேஷாவதார மென்பதனை, அனதாரியப்பப்புலவர் பாகவதம் திருவவதாரப்படலத்தில், "கூற்றனன் குழவியாறு கொன்றபி னுலகந்தாங்கும், ஆற்றலஞ் சேடன்மாத ராலகட் டகத்தனைக, மாற்றருஞ் சிறப்புவாய்ந்த மாயையை நோக்கிமல்லற், பாற்றிரைத் துயிலுநங்கள் பரஞ்சுடர் பணிக்குமன்றே" என்னுஞ் செய்யுளாலும், வரதராச ஐயங்கார் பாகவதம் திருவவதாரப்படலத்தில் "கற்பு மிக்கிடுந் தேவகி காண்குறுங், கெற்ப மாகியு ரோகிணி கிள்ளையாம், பொற்பி னுடன் வயிற்றுதி யோயெனச், சற்பராசனை முற்செலச் சாற்றினன்" என்னுஞ் செய்யுளாலு முணர்க.

5. (இ-ள்.) ஊழிகாலத்தில் ஈராயிரம் கண்களினின்றும் உண்டாகும் கோபமுடைய சிவந்த அக்கினியாலும், ஒன்றோடொன்று நெருங்கிய நாக்குகள் மேலிட்டுவரும் பெரிய வாயினிடத்து உண்டாகும் கருமையுடைய அக்கினிபோன்ற விஷத்தாலும், பதினாலுலகங்களையுடைய அண்டத்தை யழித்துத் தனியாகத் தான் சேஷித்திருந்து, திருவாழியாகிற படையையுடைய ஸ்ரீமந்நாராயணனது அம்சமாதலாலே சேஷனென்னும் திருநாமம் பெற்று உயர்ந்தவர்:

மிடை—வினைத்தொகை வினை. விநத்தும்—வித-பகுதி. நாலொடுபத்துலகு உடை அண்டம் என்க. நாலொடுபத்து—பதினான்கு. கலை—அம்சம்; பிரிவு. சேடப்பேர்—சேடம்—மிகுதி; சேடன்—மிகுந்திருப்பவர். சம்மாரகாலத்தில் ஆதிசேஷரிடத்தினின்று காலாக்கினி யுருத்திரர் தோன்றி உலகத்தைச் சுட்டெரிப்பரென விஷ்ணுபுராண முரைக்கும்.

6. (இ-ள்.) அந்நியமான சமயங்களாகிற களைகளைக் களைந்து, அருளையுடைய பெருமானது சமயமாகிய பயிரை வளர்க்க முயன்று, ஒரு குழவியாகித் திருவவதாரஞ்செய்யச் சிந்திக்கும்போது, முல்லையரும்புபோன்ற தந்தங்களையுடைய காந்திமதியம்மையாரும், தமது சாயல் அவ்வாதிசேடரைப் போல வெளுத்து, இரண்டு தனங்களின் கண்களும் அவரது விஷத்தின் செயலாகக் கறுத்து மெலிந்தனர். உலகமெல்லாம் தாங்குமவரை (கர்ப்பத்தில்) தாங்கும் தன்மை எளிதாகுமோ?

ஆம்—ஆகும். முயலா—செய்யாவென்னும் வாய்பாட்டு வினையெச்சம்: முயன்று. அவதரிப்பான்—பானீற்று வினையெச்சம். அவதாரம்—கீழே வருதல். முகிணகை—(முகிழ்+நகை) உவமைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை: காந்திமதியம்மையாரைக் குறித்து நின்றது. ஆங்கு—அசைநிலை. காலை—ஐ—சாரியை. செயலா—செயலாக. எளிதே—ஏ—வினாவில் எதிர்மறைப் பொருளது. காந்திமதி தன்பால் தகைசான்றோன் ஆகிய சேடப்பேர் படைத்துயர்ந்தோன் மகவாய் அவதரிப்பான் முன்னுங்காலை, முகிணகையும்..................மெலிந்தாள் என இயைத்துக்கொள்க. ஆதிசேஷரானவர்—மால் சமயப்பயிர் வளர்க்க முயன்று, காந்திமதியம்மையாரிடம் மகவாய் அவதரிக்க நினைத்தார்: அவ்வளவில் அவ்வம்மையாரிடம் கர்ப்பசின்னங்கள் தோன்றுதலாயின என்பதாம். 'உலகமெலாம் பரிப் போற்றுங்குந் திறனெளிதே'—வேற்றுப்பொருள் வைப்பு.

7. (இ-ள்.) தருமம் தளிர்க்கவும், பிறசமயங்கள் தலைசாய்ந்து ஒதுங்கவும், அக்கினியாற் செய்யப்படும் யாகத்தையுடையவர்களான அந்தணர்களது கருமங்கள் செழிப்படையவும், பாகவதக் கூட்டத்தார்களது உள்ளம் களிகூரவும், பெரிய மங்களத்தையுடைய சித்திரை மாசத்தில் விளங்கும் திருவாதிரை நக்ஷத்திரத்தில், தனது திருமேனி மேகத்துக்குச் சமானமான பெருமான் அறிதுயிலமரும் கடல்சூழ்ந்த உலகத்திலுள்ளவர்கள் வாழும்படி, அவதரித்தனர்.

பரசமயம்—வைணவமல்லாத இதர மதங்கள். பாகவதர்—பகவத் ஸம்பந்தமுடையோர். (சேடப்பேர் படைத்துயர்ந்தோன்) உதித்தனன் என்க.

8. (இ-ள்.) நாமகரணம் சௌளம் உபநயனம் இவைகளைச் சாஸ்திரம் சொல்லும் முறைப்படியே முடித்து, அதன்பின் இன்பந்தரும் நான்கு

வேதங்களையு மோதி, மதில்சூழ்ந்த திருக்கச்சியிலிருக்கும் யாதவப்பிரகாச ராகிய குற்றம் வந்து சேராத யதியாகிய ஆசாரியரது இரண்டு பாதங்களை வணங்கி, வேதாந்த சாஸ்திரத்தை, அழகுடையவனான கண்ணனெம்பெருமான் சாந்தீபரிடத்து அப்பியசித்ததுபோல், எளிதாக அப்பியசித்தனர்.

**நாமகரணம்**—பெயரிடல். **சவுளம்**—மயிர் கழித்தல். **உபநயநம்**—பூணூல் தரித்தல். **யாதவன்**—யாதவப்பிரகாசர், ஏகதண்ட சந்நியாசி, சங்கராசார்யர் சிஷ்யர்களில் ஒருவர். **எதி**—யதி, சந்நியாசி. **சாந்தீபன்**—கண்ணபிரானுக்குச் சாஸ்திராப்பியாஸஞ் செய்வித்து, குருதக்ஷிணைக்காக முன்னொரு காலத்தில் கடலில் தீர்த்தமாடப்போய் இறந்த தன் புத்திரனைக் கொண்டுவந்து தருகவென வேண்டி, அவ்வாறே கண்ணன் சென்று, மீனுருக்கொண்டிருந்து அப்புத்திரனை விழுங்கிய பஞ்சஜனென்னும் அசுரனைக் கொன்று, அப்புத்திரனை மீட்டுக்கொண்டு வந்து கொடுக்கப்பெற்றவர். "மாதவத்தோன் புத்திரன்போய் மறிகடலில் மாண்டானை, ஓதுவித்த தக்கணையா யுருவுருவே கொடுத்தான்" என்பது பெரியாழ்வார் அருளிச் செயல். **ஆந்த**—உவமையுருபு. 'கண்ணன் சாந்திபன்பால் வடித்தாங்கு' என்றதனால் யாவுமுணர்ந்த கண்ணன், உலகமரியாதைப்படி சாந்தீபமுனிவரிடத்துப் பயின்றதுபோல, இராமாநுசரும், யாவுமுணர்ந்தாராயினும், உலகமரியாதைப்படி யாதவரிடத்துப் பயின்றனரென்பது தோன்றுதல் காண்க. **எண்மை**—எளிமை.

## [இராமாநுசரும் யாதவப் பிரகாசரும்.]

[இராமாநுசர் வாசிக்குங்காலே, அவரது சிறிய தாயார் திருக்குமாரரான கோவிந்தபட்டரும் கூடவிருந்து வாசித்தனர். சிலபொழுது யாதவப்பிரகாசர், வேதவாக்கியங்களுக்கு அத்வைதபரமாகப் பொருள்கூற, இராமாநுசர் அதனை மறுத்து விசிஷ்டாத்வைத பரமாகப் பொருள்கூறி வருவர். இதனாலே யாதவப்பிரகாசர், இராமாநுசரைக் கொல்ல எண்ணி, அது செய்யிற் றீங்கணுகாமல், கொன்றார்க்கும் கொல்லப்பட்டார்க்கும் நற்கதி யருளுவதான காசியின் கண்ணுள்ள கங்கைக்கரையில் மணிகர்ணிகா கட்டத்திற் செய்வதுவே தக்கதெனச் சில மாணாக்கருடன் யோசித்துத் துணிவுகொண்டு, கங்காயாத்திரை செய்தனர். ஒருநாள் மாலைப்பொழுதில் விந்தியாடவியிற் செல்லுகையில், இதுகாறும் ஒருவரோடொருவர் சந்தியாமே வந்த இராமாநுசரும் கோவிந்தபட்டரும் சந்தித்துப் பேச நேர்ந்தபோது, யாதவப்பிரகாசர் செய்துவரும் சங்கேதத்தை, கோவிந்தபட்டர் இராமாநுசருக்குக் கூறினர். கேட்ட இராமாநுசர், அவர்களை விட்டுத் தனிவழியே நடந்து, இராப்பொழுது வந்ததும் "ஆவாரார்துணை" யென்று வழி திகைத்தலமருகையில், பேரருளாளப் பெருமானும் பெருந்தேவித் தாயாரும், வேடனும் வேடிச்சியுமாக வந்து, இராமாநுசரைச் சந்தித்து இன்சொல் பகர்ந்தனர். இராமாநுசர் களிகூர்ந்து, அவ்விரவு அவர்களுடன் ஓர் அரசமரத்தடியிற் றங்கியிருந்தனர். மறுநாள் காலைப்பொழுதில் துயிலுணர்ந்து தமக்குத் துணையாக வந்திருந்தவர்களைக் காணாது சிறிதுதூரம் நடந்து, சோலையும் ஊருந் தோன்றக்கண்டு, அங்கு நின்றவர்களை நோக்கி, இஃதெவ்வூரென்று கேட்க, அவர்கள் காஞ்சீபுரமென் றுரைத்ததும், தம்மை மறந்த பெருவியப்பினராய், தமக்குத் துணையாக வந்தோர் பேரருளாளனும் பெருந்தேவித் தாயாருமெனத் துணிந்து, அவர்கள் திருவருளிருந்த படியை

நினைந்து நினைந்து பலவாறு துதித்து, முன்னுளிரவில் வேடுவிச்சி யுருவங் கொண்டுவந்த தாயார், நடுயாமத்தில் தண்ணீர் கேட்டபோது தாம் அளிப்பதற் கியலாதிருந்த குறைதீரச் சாலைக் கிணற்றுத் தீர்த்தத்தைத் திருமஞ்சனாதிகளுக் குபயோகமாகச் சமர்ப்பித்து வந்தனர்

யாதவப்பிரகாசர், இராமாநுசரைத் தேடிக்காணாது, கோவிந்தபட்டர் முதலிய மாணாக்கருடன் கங்கைக்குச் சென்று தீர்த்தமாடுகையில், தமது மந்திர சக்தியால் கோவிந்தபட்டர் கையில் ஓரிலிங்கம் வந்து சேரும்படி செய்து, தாமுந் தமது மாணாக்கரும், உள்ளங்கை கொணர்ந்த நயினாரென்று அவரைப் புகழ்ந்தனர். பின்னர், இவர்கள் மீண்டுவருகையில், நயினார் அந்த லிங்கத்தைத் தக்கதோரிடத்தில் ஸ்தாபித்துவிட்டு வருகிறேனென்று கூறி விடைபெற்றுச் சென்று, தமது ஜந்ம பூமியான மழலைமங்கலமடைந்து அங்கு அவ்விலிங்கத்தைப் பிரதிஷ்டைசெய்து வைத்தனர். அதன் பின்னர், காளத்திநாதன் தமது சொப்பனத்தில் வந்து சொன்னபடி காளத்திக்கு வந்து, அங்குள்ள பலராலும் ஆதரிக்கப்பெற்று, ஆலயத்துச் சகலாதிகாரமும் வகித்திருந்தனர். யாதவப்பிரகாசர், காஞ்சீபுரத்துக்கு வந்து, இராமாநுசரைக் கண்டு, நடந்த விர்த்தாந்தங்களைக் கேள்வியுற்று, முன்போலவே வேதபாடம் நடத்திவந்தனர்.]

9. (இ-ள்.) அப்பியசிக்குங்காலத்தில், அத்துவைதத்தைச் சொல்லும் யாதவப்பிரகாசரும் உள்ளம் திகைக்கும்படி, வடித்துரைக்கும் வேதார்த்தங்களைத் துவித முறைப்படி அருளிச்செய்து மறுப்பதையெல்லாம், முடிக்கும் திருத்துழாய் மாலையையுடைய மேகம்போன்ற பெருமானது திருவரங்கத்தி லெழுந்தருளியிருக்கும் யாமுநாசாரியரென்னுந் திருநாமமுடைய மநநசீலர் கேள்விப்பட்டு, கொடிகளையுடைய கோபுரங்களும் பெரிய மதில்களையுடைய மாடங்களின் கூட்டங்களும் சூழ்ந்த திருக்கச்சியை யடைந்தனர்.

வடித்துரைத்தலாவது பல நியாயங்களைக்கொண்டு தெளிவுபெற வுரைத்தலாம்.

**அத்துவிதம்:** ஸஜாதீய விஜாதீய ஸ்வகதபேத ரஹிதமாய் ஞானமாத்திரமாயிருப்பது பரப்பிரமம். (ஸஜாதீயம்) ஒரு மாமரத்துக்கு அதன் ஜாதீயமான வேறுவகை மரங்கள்போல, பரப்பிரமத்துக்குத் தன் ஜாதீயமாய் ஞானமுடைய ஆன்மா. (விஜாதீயம்) மாமரத்தின் ஜாதீயமல்லாத மலை முதலியவைபோல, பரப்பிரமத்துக்குத் தன் ஜாதீயமல்லாததாய் ஞான சூனியமான பிரகிருதி. (ஸ்வகதபேதம்) மாமரத்துக்குத் தன்னிடத்திலுள்ள பூ–காய்–கனிபோல பரப்பிரமத்துக்குக் குணங்குறிகள். (ரஹிதம்) இவ்வாறு சொல்லப்பட்ட விசேஷங்களின்றியே யிருப்பது. இவ்விருப்பே நிர்விசேஷ மெனப்படும். (ஞானமாத்திரம்) தான் ஞானமுடையதாகாமல் ஞானமொன்றுமே யாயிருத்தல். பலவகைப்பட்ட விசேஷங்களுடன் கூடித்தோன்றும் பிரபஞ்சம், மாயாகற்பனையால் கானலில் நீர்போலவும், கிளிஞ்சலில் வெள்ளிபோலவும், கயிற்றில் சர்ப்பம்போலவும், தோன்றுதலால் பொய்யேயாம். மாயையாலே பரப்பிரமம் ஜீவத்தன்மை யடைந்திருத்தலால் அவ்விரண்டும் அபேதமேயாகும். மாயையாலுண்டான பேத ஞானத்தை யொழித்து, அந்தப் பரப்பிரமமே தான் எனத் தெளிந்து பரப்பிரமத்துடன் ஐக்கியமாவதே மோக்ஷமென்பதாம்.

**விசிஷ்டாத்வைதம்:** பரப்பிரமமும் ஆன்மாவும் பிரகிருதியும் (நித்தியம்) என்றுமுள்ளவைகளே. ஆன்மாவும் பிரகிருதியும் ஈசுவரனால் வியாபிக்கப்பட்டு அவனுக்குச் சரீரங்களாய் அவன் சக்திக்குட்பட்டிருப்பதனால், ஒருவன் நான் என்று ஆன்மாவையும், என் உடம்பு இளைத்தது பருத்தது என்று சரீரத்தையும் பிரித்துச் சொல்லுமவனாயிருந்தும், நான் இளைத்தேன், பருத்தேன் என்று ஆன்மாவுக்கும் சரீரத்துக்குமுள்ள ஒற்றுமை நயத்தால் ஒன்றாகச் சொல்லுவதுபோல மூன்றும் அபேதமாகும். ஈசுவரன், குறைவுபடாத ஞானாநந்த ஸ்வரூபனாய் ஸர்வ வியாபகத்துவாதிகளுடையனாந் தன்மையாலும், ஆன்மா, ஞானமுடையனாயினும் அது தானும் சுருங்குதல் வளர்தலுடையனாய் அணுவாயிருத்தல் முதலியவைகளால் ஈசுவரனிலும் வேறுபட்ட தன்மையினாலும், பிரகிருதி ஞானசூனியமாய் விகாரமடைதல் முதலியவைகளால் ஈசுவரனிலும் ஆன்மாவிலும் வேறுபட்ட தன்மையினாலும் வேற்றுமைநயத்தின் வேறாயிருத்தலால் மூன்றுக்கும் பேதமாகும். ஆன்மாக்கள் பிரகிருதி சம்பந்தத்தாலே ஞானங்குறைந்து, தீயநெறியிற் செல்லுத லொழித்து, சாஸ்திர ஞானத்தாலேயாதல் ஆசாரியன் உபதேசத்தாலேயாதல் நல்லனவான ஞானவொழுக்கங்களுடன் கருமம்—ஞானம்—பக்தி—பிரபத்தி ஆகிய உபாயங்களைக் கடைப்பிடித்து ஈசுவரனது அநுக்கிரகத்தைப் பெற்று, மோக்ஷஸ்தானமான பரமபதமடைந்து, நித்திய இன்பனாய் ஈசுவர சாம்மியத்தைப் பெறுவன் என்பதாம்.

வேதத்தைப் பிரமாணமாகக்கொண்ட அத்வைத விசிஷ்டாத்வைதங்களிரண்டும் அவ்வேத வசநங்களைக்கொண்டே பரப்பிரமத்துக்கு விசேஷங்களின்றென்றும், உண்டென்றுங் கூறி மாறுபடுவது எங்ஙனமெனின், "பரப்பிரமம் ஒன்றாய் இரண்டாவ தின்றியிருப்பது" என்னும் சுருதி வசநத்துக்கு, பரப்பிரமம், ஆன்மாவும் பிரகிருதியும் இன்றித் தன்னந்தனியேயிருப்பதென்று அத்வைதிகள் கூறுவர். "ராஜா அத்விதீயன்" என்பதற்கு அரசன் தன் பரிவாரங்களுடனும் சம்பத்துடனும் தயை முதலிய குணங்களுடனும், எவரையும் அடக்கியாளும் சக்தியுடனும், இப்படிப்பட்ட விசேஷங்களுடன் கூடித் தனக்கிரண்டாவதாகச் சொல்வதற்கு வேறொரு அரசனின்றி யிருப்பனென் றுரைப்பதுபோல,—பரப்பிரமம் தனக்குச் சேஷபூதர்களான ஆன்மாக்களும், தன் விபூதியான பிரகிருதியும் தயாதி மங்கள குணங்களும் ஸர்வசக்திகளும் உடையதாய், இவ்வாறு விசேஷங்களுடைய வேறொரு பரப்பிரமம் தனக்கு இரண்டாவதாகச் சொல்வதற்கின்றி யிருப்பதென்று விசிஷ்டாத்வைதிகளுரைப்பர். ஏனைய சுருதி வசநங்களில், பரப்பிரமத்துக்குக் குணமுதலிய விசேஷங்களுரைத்திருப்பது மாயாகற்பிதமென்றும் பொய்யென்றும் அத்வைதிகள் கொள்கை. அக்குணமுதலிய விசேஷங்கள் பரப்பிரமத்துக்கு உண்மையா யிருப்பவைகளேயென்று விசிஷ்டாத்வைதிகள் கொள்கை. மோக்ஷத்தில், "பரப்பிரமமும் ஆன்மாவும் ஒன்றாயிருக்கும்" என்பதற்கு, அத்வைதிகள், ஆன்மா பரப்பிரமமாய்விடும் என்பர். விசிஷ்டாத்வைதிகள், "ராமஸுக்ரீவ யோரைக்யம்" இராமனும் சுக்கிரீவனும் ஐக்கியமாயிருந்தார்கள் என்பதுபோல பரப்பிரமமும் ஆன்மாவும் கூடியிருக்குமென்பர். யாதவப்பிரகாசர், சங்கராசார்யர் சிஷ்யரேயாயினும், ஆன்மாவும் பிரகிருதியும் மாயா கற்பனையாலன்றி பரப்பிரமமே அவ்விரண்டுமாய்ப் பரிணமித்திருக்கிறதென்பது யாதவப்பிரகாச மதத்தின் கொள்கையாகும். இன்ன பலவிதமான பேதக்

கொள்கைகளாலே இராமாநுசர் யாதவப்பிரகாசரிடம் வேதாந்தம் படிக்கும் போது மாறுபட்டனரெனத் தெளிக.

புயல்—உவமையாகுபெயர். யாமுநர் வரலாறு: நம்மாழ்வாருக்குச் சிஷ்யரான ஸ்ரீமந்நாதமுனிகள், வடதேசயாத்திரை சென்று யமுனையாற்றின் கரையி லெழுந்தருளியிருக்கும் யமுனைத்துறைவன் என்னும் பெருமானைச் சேவித்துத் தமது திருக்குமாரரான ஈசுவரமுனிகளுக்குப் புத்திரருண்டாயின் அவருக்கு அப்பெருமானது திருநாமமே யிடவேண்டுமெனத் திருவுளம்பற்றி, அதனைத் தமது சிஷ்யரான மணக்கால்நம்பிக்கு நியமித்தனர். அவரும் தமக்குச் சிஷ்யரான உய்யக்கொண்டாருக்கு நியமித்தனர். ஈசுவரமுனிகளுக்குப் புத்திரர் உதித்தபோது, மணக்கால்நம்பி அங்கு எழுந்தருளி, தமது ஆசாரியர் பரமாசாரியர் நியமித்தபடி அப்புத்திரருக்கு யமுனைத்துறைவரெனத் திருநாமஞ் சாத்தினர். அப்புத்திரர் மஹாபாஷ்யபட்டரென்போரிடத்து ஓதிவருகையில், அந்நாட்டரசனது புரோகிதரான ஆக்கியாழ்வான் என்பவர், அங்குள்ள மற்றைப் பண்டிதரிடத்துத் திறைகொள்வதுபோலவே மஹாபாஷ்யபட்டரிடத்துந் திறைகொள்வான் தரகு ஓலை யனுப்பினர். யமுனைத்துறைவர், அவ்வோலையைக் கிழித்தெறிந்து, வாதஞ்செய்து வெற்றிபெறுவோமெனச் சொல்லியனுப்பினர். கேட்ட அரசனும் புரோகிதரும் யமுனைத்துறைவரை அழைப்பிக்க, இவர் அங்கு சென்று, ஒரு மண்டபத்தில் வீற்றிருந்தபோது, அரசன், புரோகிதரே வெற்றிபெறுவர் என்றனன். அரசன் மனைவி, யமுனைத்துறைவரே வெற்றி பெறுவரென்றனள். அரசன், யமுனைத்துறைவர் வெற்றிபெறுவராயின், தனது பாதிராச்சியத்தை அவருக்கு அளிப்பே னென்றனன். அரசன் மனைவி, புரோகிதர் வெற்றிபெறுவராயின், நின் அடிமைக்கு அடிமையாயிருந்து, தொண்டுசெய்வே னென்றனள். பின்னர் யமுனைத்துறைவர் புரோகிதரை வாதத்தில் தோற்பித்து வெற்றிபெற்றனராக, அரசன் மனைவி, "என்னை யாளவந்தாரோ" என்றுரைத்து யமுனைத்துறைவரை எடுத்தணைத்துக்கொண்டனள். அரசன், தான் கூறியபடியே தனது ராச்சியத்தில் பாதியை யளித்தனன். யமுனைத்துறைவர், "ஆளவந்தார்" என்னுந் திருநாமமும் பாதி ராச்சியமும் பெற்று ராசபோகத்தில் சுகமேயிருந்தனர். இவர் இருப்பு கட்டுங் காவலுமாயிருந்ததனால், மணக்கால்நம்பி தமது ஆசாரியர் பரமாசாரியர்களுடைய நியமனத்தின்படி, ஆளவந்தாருக்குத் தத்துவோபதேசஞ் செய்தற்கிடனின்றி அவருக்குப் போனகஞ் சமைப்போரிடத்துச் சென்று, அவர் விரும்பி யமுதுசெய்யும் பதார்த்தம் யாது எனக் கேட்க, அவர் தூதுளங்கீரை யென்றனர். நம்பி, ஆறுமாதகாலம் நாடோறும் அக்கீரையைக் கொண்டுவந்து கொடுத்து, ஒருநாள் கொடாமே தவிர்ந்தனர். அன்று, ஆளவந்தார் தூதுளங்கீரை தவிர்ந்தது என்னென்று கேட்க, அவர் "ஒரு விருத்தபிராமணர் நாடோறுங் கொண்டுவந்து கொடுப்பர்; இன்று தவிர்ந்தன" ரென்றனர். ஆளவந்தார், இனி அவ்விருத்தபிராமணர் வருவராயின், அவரைத் தம்மிடத்துக்கு அழைத்துவரக் கட்டளையிட்டனர். மறுநாள், நம்பி, தூதுளங்கீரை கொண்டு செல்லவே, போனக மமைப்போர் அவரை ஆளவந்தாரிடத்துக் கொண்டு போய் விட்டனர். நம்பி, தமது ஆசாரியர் பரமாசாரியர்களைச் சிந்தித்துக் கொண்டு ஆளவந்தார் முன்னே நிற்க, ஆளவந்தார் நம்பியை நோக்கி, இங்ஙனஞ் செய்தது யாதுவேண்டி யென்று கேட்டனர். நம்பி, "எம்மிடத்து

உமது மூதாதையர் உமக்கென்று வைத்துள்ள மாநிதியுண்டு; அதனைப் பெற்றுக்கொள்ளவேண்டும்; அதற்காக நாம் தினந்தோறும் வந்து சொல்லு வதைக் கேட்கவேண்டு" மென்றனர். அவ்வாறே ஆளவந்தார் இசைந்தனர். நம்பி, தினந்தோறுஞ் சென்று பகவத்கீதையின் செம்மைப்பொருளை அரு ளிச்செய்துவந்து, சரமசுலோகார்த்தத்தில் ஆளவந்தாருக்குப் பரிபக்குவ நிலையுண்டானதைத் தெரிந்து, திருவரங்கத் திருப்பதிக்கு அழைத்துவந்து, பிரணவாகார விமானத்தில் வாளராப்பெட்டகத்தில் கண்வளரும் வைத்த மாநிதியான அரங்கத்தம்மானைக் காட்டி இதுவே உமது மூதாதையர் உமக்கென்று வைத்திட்ட மாநிதியாகு மென்றனர். ஆளவந்தார், அவ்வெம் பெருமானைச் சேவித்து, "பழுதே பலபகலும் போயின" என்றிரங்கி, "என்னமுதனைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே" என்று அச்சேவையில் ஈடுபட்டு ராச்சியாதி சகல போகங்களையுந் துறந்து, சந்நியா சத்தைக் கைக்கொண்டு, யாமுனாசாரியரென்னுந் திருநாமத்துடன் திருவ ரங்கத்தில் எழுந்தருளியிருந்தனர்.

10. (இ-ள்.) காணுதல் விரும்பிவருமவரான ஸ்ரீ ஆளவந்தாரைத் திருக் கச்சிநம்பிகள் திருவுள்ளத்தில் சந்தோஷம் தாண்ட எதிர்கொண்டு சென்று அவரது திருவடிகளை வணங்கித் துதித்தனர். தேனையுடைய அழகிய திருத் துழாய் மாலையையணியும் நீண்டவனை பெருமா னெழுந்தருளியிருக்கும் அஸ்திகிரியை வலஞ்செய்து வணங்கி, நிறைந்த அறிவு ஒழுக்கங்கள் பூண்ட ஸ்ரீ ஆளவந்தாரும், திருவடிக்குப் பாங்காக ஒரு மண்டபத்திற் பிரவேசித் தெழுந்தருளி யிருந்தனர்.

**திருக்கச்சிநம்பி** வரலாறு: பூவிருந்தவல்லியில் உதித்து, இளமையிலேயே சாதுசன சகவாசமுடையராய், தமது முன்னோர் தேடிவைத்த பொருள் களில் நசையற்று, ஆளவந்தார் திருவடிகளில் ஆசிரயித்து, திருக்கச்சி தேவராசப் பெருமானுக்குத் திருமாலை கைங்கரியமும் திருவாலவட்ட கைங் கரியமும் செய்துவந்தவர். இவர் பெருமானுடன் வார்த்தையாடுவதை இச்சருக்கம் 29–வது, 39–வது செய்யுட்களாலறிக. ஒருநாள், இவர் எம் பெருமானுடன் வார்த்தையாடிக்கொண்டிருக்கையில், இவருக்கு இரவில் விளக்கேந்திக்கொண்டு முன்னே செல்லுமவனை அருளாளனென்போன், உறங்கிவிட்டனன். நம்பிகள் வெளியேவந்து, அவனைக் காணாது அரு ளாளா! என்றழைக்க, எம்பெருமான், அவன்போல வந்து விளக்கேந்திக் கொண்டு முன்னே நடந்து, நாடோறும் அவன் வைக்குமிடத்தே விளக் கை வைத்துச் சென்றனன். மறுநாள் காலையில் வந்த விளக்கேந்துமவனால் எம்பெருமான் செய்த காரியத்தை யுணர்ந்து, நம்பி மிகச் சோகித்தனரென் பர். இவைகளை, "வேகவதி தீரத்தில் வந்த பெருமாள் பிரமன் வேள் விக் குகந்த பெருமாள், வீறிய திருக்கச்சி நம்பியொடு வாசகம் விளம்பு பெரு மாள்" எனவும், "நின் சந்நிதியி லாலவட்டம், வீசோர் திருக்கச்சிநம்பிக் கொராளாகி வேலைசெய்தனை யாதலால் வீறுடனுனக்காகு மருளாளனெனு நாமம் வேறு தேவர்க்காகுமோ" எனவும் முத்தமிழ்க்கவி வீரராகவமுதலி யார் உரைத்ததனாலு முணர்க. நீண்ட திருமால் என்றது "நிலங்கடந்த நெடுமுடியண்ண" லாதலின்.

11. (இ-ள்.) இப்படி யிருக்கும்போது, யாதவப்பிரகாசரென்னும் பெய ரையுடைய எதியானவர், தமது மாணக்கர் கூட்டங்கள் சூழும்படி, சூரி

யனையொத்திருக்கும் சக்கரப்படையையுடைய தேவராசப்பெருமானைப் பணிவதற்காக வரக்கண்டு, ஸ்ரீ ஆளவந்தார், "திருக்கச்சிநம்பிகளே! அதி கரித்திருக்கும் கூட்டத்தில் இராமாநுசர் யார் சொல்லுவீராக" என்ன, "உருக்கும் பொன்னைப்போலப் பிரகாசிக்கும் திருமேனியோடு உயர்ந்த வராயிருக்கும் அவரே" என்று திருக்கச்சிநம்பிகள் அருளிச்செய்தனர்.

**படை** 'அருக்கன் பொருவும்' என்றதனாலும் பின்னால் 'மால்' என வருதலாலும் சக்கரப்படை யென்க. **பணிவான்**—வானீற்று வினையெச்சம். **கச்சிநம்பி**—அண்மைவிளி.

**12.** (இ-ள்.) ஸ்ரீ ஆளவந்தார் கண்டு திருவுள்ளமகிழ்ந்து, பேரருளாளப் பெருமானது திருவடிகளாகிற தாமரைகளுக்குத் தமது திருக்கண்களை அழ குடைய வண்டுகளாகச் செய்து வணங்கித் தோத்திரஞ்செய்து, "தேவரீரிடத் தில் அடியேனுக்கு வேண்டிய வரமொன்றுண்டு; அதாவது இராமாநுசரை எனது சீடனாகத் தருக" என்று அருளிச்செய்து முன்புபோல நம்பெருமான் அறிதுயிலமரும் திருவரங்கத் திருப்பதியை யடைந்தனர்.

"அருளாளன் கழற்றாமரைக்கு..................விழியாக்கி" **உருவகம்.** அருளாளன் கழற்றாமரைக்குத் தனது விழி (யை) கவினார்ந்த வண்டாக்கி. தாமரையில் வண்டு பொருந்துவதுபோல கழலில் விழி பொருந்தச்செய்து, திருவடிகளை உற்றுச் சேவித்து என்பதாம். இதனால் அடியார்க்குற்றது எம்பெருமானுடைய திருவடிகளே யென்றபடியாம். "வண்புகழ் நாரணன், திண்கழல் சேரே" யென்பது நம்மாழ்வா ரருளிச்செயல்.

13. (இ-ள்.) அக்காலத்தில் சோழராசனது குமாரனை முனியொன்று பிடித்துக்கொள்ள, அதை நீக்குவதற்குத் தகுந்தவர்கள் யாரென்று விசாரித்த போது, (சிலர்) அறிவு நிறைந்த யாதவப்பிரகாசரென்னும் பேரையுடைய தவமுனிவர் (இதனை நீக்கக்கூடிய தந்திரமந்திரங்களில்) உயர்ந்தவர் என்று சொன்னார்கள். அரசனும் (அவரைக்) கொண்டுவாருங்களென்று சொல்ல, (அவ்வாறே) வேதியரான யாதவப்பிரகாசரும் (அப்பேயின்) முன்பே போய் அதைப் பார்த்துப் போவாயாக வென்று சொல்ல, (அந்தப்) பேய் சிரித்துக் கைகள் தட்டிப் பெருங்கோபங்கொண்டு,

**முனி**—பிரமராக்ஷஸன். இவன் வரலாறு 16–ம் செய்யுளிற் காண்க. **ஆய்ந்தளவில்**—ஆய்ந்த+அளவில். **சொற்றனர்**—சொல்–பகுதி. **போகேன**—போக+என. **உரறு**—செய்யாவென் வினையெச்சம், உரறு–பகுதி, உரறல்—பெருங்கோபம். இதுவும் அடுத்த செய்யுளும் குளகம்.

14. (இ-ள்.) "என்னைப்போக்கும் பெருமையையுடைய முனிவன் நீதானோ? போகவேண்டியவனான நான் எளியவனாவேனோ? மின்னையொத் திருக்கும் சடையையுடைய சிவபிரானும் என்னைப் போவென்று நீக்குவா ரோ? நீ உன்னை முற்பிறப்பில் இப்படிப்பட்டவனென்று அறியாய்; அந்த விதத்தைக் கேட்பாயாக; (அதை) நானறிவேன்" என்று அறிவுநிறைந்த யா தவப்பிரகாசர் முன்னே இவற்றைச் சொல்லத் தொடங்கிற்று.

**துரக்கும்**—துர–பகுதி. நீயே, எளியேனே, விலக்குவனே என்பவை களில் ஏ—எதிர்மறை. **மின்** (மின்னல்) முதனிலைத் தொழிலாகுபெயர். **அறிவல்**—எதிர்காலத்தன்மை யொருமைமுற்று. இயல்பால் இறந்தகாலம் எதிர்காலமாக வந்தது.

15. (இ-ள்.) "நீ, புஷ்பங்கள் நிறைந்த சோலைகள் சூழ்ந்த மதுராந்தகத்தில் குளிர்ச்சியையுடைய ஏரியின் புறத்துள்ள புற்றில் உடும்பாயிருந்து, வடக்கின் கண்ணுள்ள திருவேங்கடத்தி லெழுந்தருளியிருக்கும் பெருமானது சிகரத்தையுடையதாய் விசாலமாய்க் கொடிகள் பூண்டதான தேர்த்திருவிழாவுக்குப் போகுமவராய் யாவருஞ் சொல்லும் கடல்சூழ்ந்த பூமியிலுள்ள ஸ்ரீ வைஷ்ணவர்கள் அந்த ஏரியினிடத்தில் அமுதுசெய்து ஒழித்த சேஷத்தை அந்த ஏரிநீரில் தோய்ந்து உண்டபடியினாலே, இந்தக் கல்வியில் வல்லவனாய்த் தலைவனாகக்கூடிய பெருமைபொருந்திய சரீரத்தையும் அநுஷ்டானத்தையும் பெற்றாய்."

**போதா** என்பது வடசொல்; உடும்பு. நீதான் கோதா: மிச்சம் அயின்று, இம்மாணுருவமும் நெறியும் படைத்தாய் என்க. **ஓது**—வினைத்தொகைவினை. **ஆர்கலி**—(மிக்க ஓசை: மிக்க ஓசையுடைய கடல்) வினைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. ஓதம் என்று கடலாய் ஓதார்கலி என்பது இருபெயரொட்டாகவுமாம். ஓதை என்று பேரொலியாய் ஓதையுள்ள ஆர்கலி யெனவுமாம். போதுறுவோராகிய வைணவர் என்க. **தான்**—இடைச்சொல்; கட்டுரைச் சுவைபட நின்றது. **அயின்று**—அயில்—பகுதி.

16. (இ-ள்.) "மனத்தில் துக்கமடையும் எனது முற்பிறப்பைக் கேட்பாயாக, அதாவது பிராமணனான நான் செய்த யாகத்தில் யாகத்துக்குரிய பொருள் மந்திரம் கருமம் இவைகள் தவறிப்போகவே, அந்தச் சரீரமொழிந்து இப்போது பேயாக உழலுகின்றேன்; இராமாநுசர் வந்து என்னைப் பார்த்து 'இப்பூமியில் உனது தோஷத்தை நீக்கிவிட்டேன் போவாயாக' வென்றால், நான் போவேன்" என்ன; இராமாநுசர் அவ்வாறே அங்கெழுந்தருளினர்.

**தொன்மையது**—தொன்மை, பழமை; பண்பாகுபெயராய் முற்பிறப்பையுணர்த்தியது. அது—சாரியை. தொன்மையது—குறிப்புவினையாலணையும் பெயராய் முற்பிறப்பை யுணர்த்தி நின்றதாகவுங் கொள்ளலாம். **கடி**—பேய். **அகற்றினன்**—தன்மை யொருமை முற்று. இதனைப் படர்க்கை யாண்பால் முற்றாய் அகற்றினவனாய்ப் போக எனில், என்று வினையெச்ச முற்றாகக் கொள்ளுதலும் பொருந்தும்.

17. (இ-ள்.) "இதை நீவிர் செய்யவேண்டும்" என்று வந்த இராமாநுசர் திருவடிகளை அரசன் வணங்க, பொதுவான சௌலப்பியமுடைய இராமாநுசரும், பேயைப் போவாயாகவென்று கூற, (அது அவரது) திருவடிகளை வணங்கிப் புகழ்ந்து, "அடியேன் பழையதாய் உயர்ந்திருக்கும் அரசமரத்தை முறித்துக்கொண்டு போகின்றேன்" என்று சொல்லி, அம்முறையே போக, அதனைப் பூமியையாளும் அரசனும் பார்த்து இராமாநுசர் திருவடிகளைத் துதித்து,

**இறை**—(எங்குந் தங்கியிருப்பவன் என்பது பொருள். இறு—பகுதி. ஐ—வினைமுதற் பொருண்மை விகுதி; கடவுள் என்பதாம்.) உலக பாலகருருவாய் நின்று உலகங் காத்தலின் அரசனுக்கு இறை என்பது பெயராயிற்று. "திருவுடை மன்னரைக் காணிற் றிருமாலைக் கண்டேனேயென்னும்" என்று மேற்கோள் காட்டிப் பரிமேலழகர் இங்ஙனம் விளக்கியிருக்கின்றனர். இந்தச் செய்யுளும் வருஞ் செய்யுளுங் குளகம்.

18. (இ-ள்.) கணக்கிடுவதற்கரிய பொன்னைக் கொடுத்தனன். இராமாநுசரும் அதனை யாதவப்பிரகாசரென்னும் பெயரையுடைய பெருமையுடையோருக்குக் குருதக்ஷிணையாகக் கொடுத்து, அவர் பாதங்களை வணங்கினர். வேறொருநாள், பெறுவதற்கரிய சீரையுடைய யாதவப்பிரகாசரும் தாம் சொல்லும் வேதாந்தவாக்கியத்தின் நல்ல அர்த்தத்தைக் கண்ணனெம் பெருமானுக்குப் பெரிய பரிபவமாகும்படி சாஸ்திரஞானமுடைய வேதியரான இராமாநுசருக்குச் சொல்லினர்.

நிகழ்ந்த வேதாந்த வாக்யமாவது "தஸ்யயதாகப்யாஸம் புண்டரீக மேவமக்ஷிணீ" என்பதாம். இதற்கு யாதவப்பிரகாசர் கூறிய பொருள், "பரம புருஷன், குரங்கின் பின்புறம்போலச் சிவந்த கண்களுடையவன்" என்பதாம். இராமாநுசர் பகர்ந்த பொருள், "நீரைக் கவரும் சூரியனு லலர்த்தப்பட்ட தாமரையைப்போலக் கண்களுடையவன் புருஷோத்தமன்" என்பதாம்.

ஆந்து—அசைநிலை. வேதாந்தம்—வேதமுடிவு, உபநிஷதங்கள். இங்கு வேதாந்த வசநத்தை வேதாந்தமென்றார். கண்ணன்—உலகத்துக்குக் கண்ணானவன். "கண்ணாவானென்றும் மண்ணோர் விண்ணோர்க்கு," "கண்ணையேழுலகுக் குயிராயஎங் கார்வண்ணன்" என்பவை ஆழ்வார்கள் அருளிச்செயல்கள். பரிபவம்—இழிவு, அல்லது வியாகுலம். கண்ணற்கரிய பரிபவம்—(கண்ணல்—கருதல்.) கருதற்கரிய பரிபவம் என்றுரைப்பதும் பொருந்தும். கட்டுரைத்தான்—கட்டுரை—பகுதி.

19. (இ-ள்.) யாதவப்பிரகாசருக்கு எண்ணெய் தேய்க்கும் விசாலமான தோள்களையுடைய இராமாநுசரது செவிகளில் தோஷமுண்டாகும்படி சொல்லும் பொருளானது நாராசம்போற்படவே, அவர் பதைபதைத்து, அறிதுயிலமர்ந்த அந்தத் திருமாலைச் சிந்தித்துத் திருக்கண்களில் முத்துதிர்க்க, அந்தத் துளி, காய்ந்த வேலைப்போல் யாதவப்பிரகாசர் முதுகில் விழ, அவரும் அச்சப்பட்டு மனமழுங்கி,

தைலம்—தயிலமென வந்தது போலி. திலசம்பந்தமுடையதென்பது பொருள். திலம்—எள். செவிக்கு—உருபுமயக்கம். அந்திருமால்—அ—பண்டறி சுட்டு. இதுவும் அடுத்த செய்யுளுங் குளகம்.

20. (இ-ள்.) "நீ இனி என்னைப் பின்பற்றிச் செல்லவேண்டா, குற்றமாகும்; அஸ்திகிரியி லெழுந்தருளிய எம்பெருமானைப் பின்பற்றிச் செல்லுவாயாக; இங்கு நில்லாமல் போவாயாக" என்று சொல்ல, இராமாநுசரும் நீங்கி, தமது திருமாளிகையை யடைந்து அவ்விஷயத்தைத் தமது திருத்தாயாருக் கருளிச்செய்ய, அவ்வம்மையாரும் "பெருமானது திருவடிகளை வழுத்துவாயாக" என்று நியமிக்க, ஸர்வஜ்ஞரான இராமாநுசர் திருக்கச்சிநம்பிகளது திருவடிகளை வணங்கி "ஓர் கைங்கரியம் நியமிப்பீராக" என்றனர்.

சேறல், செல்—பகுதி. சேறி—செல்—பகுதி, ஏவலொருமை. தணந்து—தண—பகுதி. அனை—அ (ன்) ஐ. மாறன்—மால்+தாள்.

21. (இ-ள்.) திருக்கச்சிநம்பிகள் நாடோறும் எம்பெருமானுக்குத் திருமஞ்சந தீர்த்தம் ஸமர்ப்பித்துக்கொண்டு வரும்படி நியமிக்க, இராமாநுசர் அவ்விதமே செய்தருள, தருமத்தைப்போன்ற யாமுநாசாரியர், அவ்விதத்

தைக் கேள்வியுற்றுச் சந்தோஷ மதிகரித்து, அருளோடு கூடினவராய் அரிய மந்திரத்தையும் சாஸ்திரத்தையு முணர்ந்த பெரியநம்பிகளை யழைத்து, ''நீவிர் சென்று காஞ்சீபுரத்திலிருக்கும் அன்போடுகூடிய இராமாநுசரை நம் மிடத்திற் கொண்டுவருவீராக" என்று அருளிச்செய்ய, அவரும்,

**திருமஞ்சனம்**—(மஞ்சனம்—அபிஷேகம்) அபிஷேகம் செய்தற்குரிய தீர்த் தம். **கூடீ**—ய்—இறந்தகால முணர்த்தும் வினையெச்ச விகுதி. மற்று—அசை. இதுவும் அடுத்த செய்யுளும் குளகம்.

**22.** (இ-ள்.) ''அவரைக் கொண்டுவருவது எப்படி" என்று விண்ணப் பிக்க, யாமுநாசாரியரும், ' ''யாவனொருவன் சிவந்த தாமரைப்பூவிலிருக்கும் பிரமன் சிவன் இந்திரன் முதலான தேவக்கூட்டங்கள் தனக்குச் சிறிது மொப்பாகாமல் (இவர்களைத்) தனது வைபவமாகிய சாகரத்தில் துளிக்கூட் டங்களாக வுடையவன்" என்று அந்த வேதம் பிரதிபாதிக்கும் பெருமானது ஸ்தோத்திரத்தை அவர் கேட்கும்படி சொல்லி அழைத்துவாரும்' என்றரு ளிச்செய்தனர்.

**கொணர்வது**—எதிர்காலத் தொழிற்பெயர். **வாரிசம்**—(வாரி—நீர்.) நீரில் சனிப்பது: தாமரை. **சொற்று**—சொல்+ற்+உ: இறந்தகால வினையெச்சம்.

**23.** (இ-ள்.) என்று அருளிச்செய்த ஸ்தோத்திர ரத்தினத்தைக் குற்றமில் லாதவரான பெரிய நம்பிகள் திருவுள்ளத்திற்கொண்டு, பிரயாணகதியில் திருக்கச்சியை யடைந்து, சீலத்தையுடைய இராமாநுசரது திருச்செவியிற் படும்படி நின்று அதனை அருளிச்செய்ய, பெருமையோரான இராமா நுசர் ''உமக்கு இந்த ஸ்தோத்திரத்தை யருளிச்செய்தார் யாவர்" என்று கேட்டருள, ''நன்மையை யுணர்ந்த யாமுநாசாரியர் அருளிச்செய்து உம் மைத் திருவரங்கத்துக்கு அழைத்தனர்; நீவிர் நடப்பீராக" என்றனர்.

**தவமணி** — (தவம்—ஸ்தவம்—ஸ்தோத்ரம்) ஸ்தோத்ர ரத்நம். இது யாமு நாசாரியார் அருளிச்செய்த ஸ்தோத்ர ரூபமான வடமொழி நூல். **தேக்கி**—தேங்கி என்பதன் பிறவினை.

**24.** (இ-ள்.) பிரீதியோடு பெரியநம்பிகள் பின்னே நடந்து சென்று, திரு வரங்கத்தைச் சேருமுன்னே, யாமுநாசாரியர், எம்பெருமானைக் காட்டிய ஞானமுத்திரையையுடைய திருக்கையை விடாமல்திருநாட்டுக் கெழுந்தருள, அவ்விருப்பைச் சேவித்து, ''நீவிரே நமது மதத்தைப் பிரவர்த்தனஞ் செய்யத் தாமுடையீர்; அதனை உமக்குக் கொடுத்தோம்" என்பதுபோல முத்திரைத் திருக்கை நீங்கி விடவே, அவர் விருப்பத்தை யெண்ணி அதனையே உபதே சமாகத் திருவுள்ளத்திற் கொண்டனர்.

இராமாநுசர், ஸ்ரீ ஆளவந்தாரது விமல சரம விக்கிரகத்தைப் பா தாதி கேசாந்தமாகச் சேவித்தபோது அவரது திருக்கையில் மூன்று விரல் கள் மடங்கியிருக்கக் கண்டு அங்குள்ளாரை நோக்கி, இவர்க்குத் திருவுள் ளத்தி லேதேனுங் குறையுண்டோ? என்று கேட்க, அவர்கள் ''முன்பு வ்யாக்யாந ஸமயத்தில், (1) வ்யாஸபராசரரிடத்தில் உபகார ஸ்மிருதியும், (2) நம்மாழ்வாரிடத்தில் பிரேமாதிசயமும், (3) ப்ரஹ்மஸூத்ரத்துக்கு விசிஷ்டாத்வைதபரமான வ்யாக்யாநஞ் செய்யவுமாக மூன்று வாஞ்சை தமக் குண்டென்று பலகாலு மருளிச்செய்வர்" என்றுரைத்தனர். இராமாநுசர்,

"இச்சரீரம் திடமாய் இவர் கிருபையும் அடியேனிடத்துப் பரிபூர்ணமாய் பகவான் அடியேனெண்ணியபடி முடித்துத் தந்தால் இம்மூன்று குறையை யுந் தீர்க்கக்கடவேன்" என்று ஒவ்வொன்ரு யுரைத்து வருந்தோறும் மடங்கி யிருந்த ஆளவந்தாரது திருவிரல்கள் முறையே நிமிர்ந்து திருக்கண் மலர் களும் மூடினவாம். இதுகாரணமாகவே இராமாநுசர், கூரத்தாழ்வானது திருக்குமார ரிருவருக்கும் வ்யாஸபட்டர் பராசரபட்டர் எனத் திருநாமஞ் சாத்தி முதற்குறையையும், பிள்ளான் என்பார்க்குத் திருக்குருகைப்பிரான் பிள்ளான் எனத் திருநாமஞ்சாத்தி அவரைக்கொண்டு திருவாய்மொழிக்கு பகவத்விஷயம் என்னும் ஆருயிரப்படி வ்யாக்யாநஞ் செய்வித்தும், சிறிய கோவிந்தபட்டர் திருக்குமாரருக்குப் பராங்குசநம்பி யெனத் திருநாமமிட் டும் இரண்டாங் குறையையும், ப்ரஹ்மஸூத்ரத்துக்கு வ்யாக்யாநமாக ஸ்ரீ பாஷ்ய மருளிச்செய்து மூன்ருங் குறையையும் நீக்கினர். இதனுல் ஸ்ரீ ஆளவந்தார் நியமநத்தின்படி, இராமாநுசர், ஸ்ரீபாஷ்ய பகவத்விஷயங்க ளால் கீர்வாணவேதம் திராவிடவேதம் என்னும் உபயவேதங்களுக்கும் பிர வர்த்தகராயினரென்பது விளங்குதல் காண்க.

**சீதரான்**—ஸ்ரீதரான். இலக்குமியை மார்பில் தரித்திருப்பவன். **ஞானமுத் திரை**—சின்முத்திரை. "சீதரத்தான்.. .... அளித்தேம்." நீ நம் மதத்திற்குத் தரத் தான் (ஆகையால் அதனை) உனக்கு அளித்தேம். **தரத்தான்**—தரமுடைய வன். **காதரம்**—விருப்பம்.

25. (இ-ள்.) ஏழுலகங்களிலும் ஒருவரும் தமக்கு ஒப்பில்லாதவரான இராமாநுசர் வணங்கி, "பெருமானது சமயமாகிய கொடியானது படர்ந்து ஓங்கி எட்டுத்திக்கையும் போர்த்து நிறையும்படி ஒரு கொழுகொம்பாகி நின்று உலகத்துள்ளாரை வாழச்செய்தீர்! ஒப்பில்லாதீர்! சொல்லுவதற்கரிய கீர்த்தியையுடைய பெருமையிற் சிறந்தீர்!" என்று துதித்துத் துக்கத்தை யாற் றமாட்டாதவராகி அந்தத் திருவரங்கத்தில் ஒருதினமும் தங்காமல்,

**இறைஞ்சினன்**—வினையெச்சமுற்று. **மாறேரிசனம்**—திருமால் தரிசனம், வைஷ்ணவ சமயம். **இலதை**—லதா என்னும் வடசொல், படர்கொடி. **ஆற்றன், உறைந்திலன்**: இரண்டும் வினையெச்ச முற்றுக்கள். **கொழு கொம்பு**—கொடிபடர்வதற்கென்று நிறுத்தும் சுள்ளிக்கால். இதுவும் அடுத்த இரண்டு செய்யுளும் ஒன்ருேடொன்று தொடர்புடையன.

26. (இ-ள்.) "ஆசாரியன் எனக்கு உபதேசமளிக்குமுன்னே அவரை இங்கு நின்றும் நீக்கிப் பரமபதத்திற்குக் கொண்டுபோய் விட்டனையாகை யால் நீ கொடியவன்" என்று அரவணையின்மீது அறிதுயிலமர்ந்த திருவரங்க நகரப்பனைச் சேவிக்காமல், மதில்சூழ்ந்த காஞ்சீபுரத்தை யடைந்து, மேலா ஞேர் வணங்கும் திருக்கச்சிநம்பிகளை யடைந்து அவர் திருவடிகளை வணங்கித் துதித்து, "பெருமானே! என்னை யடிமைகொள்ள வேண்டும்" என்று விண்ணப்பிக்க அவரும் சந்தோஷித்துக் கடாக்ஷித்து,

**உரவகத்தாய்** என்றது திடமான திருவுள்ளமுடையீர் என்றபடி. **ஆங்கு**—அசைநிலை. ஆட்கொள்ளலாவது: சங்க சக்ராங்கநம், ஊர்த்துவபுண் டரம், தாஸ்யநாமம், மந்திரம், திருவாராதநம் ஆகிய பஞ்ச ஸம்ஸ்காரங்களை யளித்தல். எனவே இராமாநுசர், திருக்கச்சிநம்பிகளை ஆசாரியராகப் பிரார்த்தித்தன ரென்றபடி.

**27.** (இ-ள்.) "உலகத்துக்கும் உயிர்க்கும் நாயகனான பெருமானை யுள்ள படி யறிந்திருக்கும் மகாசீலர்களை இழிவென்றும் உயர்வென்றும் விசாரித்து அவர்களது குலம் ஆராயக்கூடியதன்று; அவர்கள் எக்குலத்திலும் தோன் றுதலால் என்று நீர் துணிந்து, குற்றமற்ற நன்மையையுடைய பரமவைதி கத்தின் முறைமையை யெண்ணி (என்னை ஆசிரயிப்பதாகிய) இதனைச் செய்ய விரும்பினீரேயாயினும், பரவிய உலகமரியாதை கெடும்படி செய் யும் இந்தத் தொழிலை ஒழிவீராக" என்று திருக்கச்சிநம்பிக ளருளிச்செய் தனர்.

**ஓர்ந்து**—ஓர்—பகுதி. யோகியர் எக்குலத்தினுந் தோன்றலின் அவரை இழிபு என்று உயர்பு என்று ஓர்ந்து, (அவர்களது) குலம் நினைப்பது அன்று என்க. **நல**—ந(ல்)ல. **ஏனும்**-எனினும். ஆங்கு அவனும் (26) ஈது ஒழிகவென அறைந்தானம்பி (27)—நம்பி (யான) அவனும்........ அறைந் தான் என இயைத்துக்கொள்க.

**28.** (இ-ள்.) இவ்விதமாக உயர்ந்த திருக்கச்சிநம்பிகள் விலக்குதலும், அங்கு அவரது இரண்டு திருவடிகளையும் வணங்கித் துதித்து, மீண்டும் பிரீதி யோடு இராமாநுசரும், "திருத்துழாய் மாலையணிந்த தேவப்பெருமாளி டத்தில் என் எண்ணத்தை யருளிச்செய்து அவ்வருளாளன் அருளிச்செய் யும் மறுமொழியைக் கேட்டு அவ்விதத்தை அடியேனுக்கு அருளிச்செய்தா வது உமது திருவருள் கொடுத்து என்னை யாட்கொண்டருள்வீராக" என்று அருளிச்செய்ய, அதைச் செய்ய உடன்பட்டவராகி,

**விலக்கலும்**—உம்மீற்று வினையெச்சம். **ஆங்கு**—இடப்பொருளது. **தேப் பெருமாள்** தேவப்பெருமாள், தேவராசப் பெருமான். **புரிவான்**—வானீற்று வினையெச்சம். இதுவும் பின்வருகிற இரண்டு செய்யுளும் ஒரு தொடர்.

இதுவேயன்றி, இராமாநுசர், திருக்கச்சிநம்பிகள் அமுதுசெய்த சேஷத்தைத் தாம் ஏற்றுக்கொள்ள விரும்பினராய், ஒருநாள் நம்பிகளைச் சேவித்து, அவரைத் தம் திருமாளிகையில் அமுதுசெய்ய வேண்டினர். நம்பி அது தமக்குப் பெரும்பேறென மகிழ்ந்து, இன்னதினத்தில் வந்து அமுது செய்வோமெனச் சொல்லியருளினர். அத்தினத்தில் இராமாநுசர் தக்க போனக மமைத்துவைத்து, நம்பிகள் வரவை எதிர்பார்த்திருந்தனர். நம்பிகள், அதனைத் தேவராசப் பெருமானிடத்து விண்ணப்பித்தனராக, எம்பெருமான், நம்பிகளை நோக்கி, நீவிர் அமுதுசெய்த சேஷத்தை இரா மாநுசர், ஏற்றுக்கொள்ள விரும்பியுள்ளார்; அது தக்கதன்று. நீவிர் இங்கு சிறிதுபொழுது தங்கி யிருப்பீராயின், இராமாநுசர், உம்மைத் தேடி வருவர். அப்போது நீவிர் சென்று அவர் தேவியாரைக் கேட்டு அமுதுசெய்து, தளிகை யிலையையும் தூரத்தே யெறிந்துவிட்டு வருவீராகவென நியமித்த னன். அவ்வாறே நம்பிகள், ஏற்றவேளைக்குப் போகாது அங்கே சிறி துபொழுது தாமதித்திருந்தனர். இராமாநுசரும் அவரைத் தேடிவந்தனர். அச்சமயத்தில் நம்பிகள் வேறு வழியாகச் சென்று இராமாநுசர் திருமாளி கையிற் போந்து, தமக்கு மிகப் பசியாயிருப்பதால் தளிகை படைக்கும் படி கேட்டு, அமுதுசெய்து, தளிகையிலையை ஒருவருங் காணாமே தூரத்தே யெறிந்து, அவ்விடத்தையும் சாணங்கொண்டு சுத்தஞ்செய்து, திருவாலவட்ட கைங்கரியத்தின்பொருட்டு விரைந்து போகிறேனெனச் சொல்லி யெழுந்தருளினர். இராமாநுசர், நம்பிகளைக் காணாது மீண்டு

வந்து தேவியாரைக் கேட்க, அவ்வம்மையார், நடந்ததை விண்ணப்பித்தனர்; இராமாநுசர் மிக மனம் வருந்தினர். இதனால் எக்குலத்தில் யாவரே யாயினும் ஞானவான்கள் பலவகையாலும் ஆராதிக்கத் தக்கவரெனவும், அது செய்யுமிடத்து, உலக இயலுக்கு மாறுபடுதல் கூடாதெனவுங் குறிப்பித்த படியாம்.

29. (இ-ள்.) திருக்கச்சிநம்பிகளும் தேவப்பெருமானை ஏகாந்தத்தில் திருவடிகள் வணங்கி, "தாமரைக்காடு பூத்த நீலமலைபோலும் திருமேனி யையுடைய பெருமானே! இராமாநுசரது மிக்க பக்தியைக் கண்டு, புழு வைப் புதுமையுடைய தன்னுருவாகச் செய்யும் குளவிபோல் மாட்சிமை செய்து, பிறவிக்கடலுக்குத் தெப்பமாகும் ஆசாரியர் யாவர்? அருளிச் செய்க" எனத் தேவப்பெருமானும்,

இதுவும் அடுத்த செய்யுளும் குளகம். இங்கு இராமாநுசர் பல நினை வுகள் நினைத்திருந்தும் நம்பிகள் ஆசாரிய விஷயத்தையே குறித்தருளிச் செய்தது யாதுக்கெனின், தம்மிடம் ஆசாரிய விஷயமொன்றைபற்றியே விண்ணப்பித்ததைப் பெருமானிடம் விண்ணப்பித்தபடியாம்.

**பம்பிய**—பம்பு—பகுதி. **வேட்டுவனின்**— ஐந்தாம் வேற்றுமை ஒப்புப் பொருள். இன்—சாரியையாய் ஆறும் வேற்றுமைத் தொகையாகவுமாம். **வேட்டுவன்**—குளவி. **மாட்சி**—மகிமை, மாண்—பகுதி. 'கீடத்தினைத் தன் னுருவிளைக்கும் வேட்டுவன்' என்பதை **பிருங்ககீட நியாயம்** என வழங்கு வதனாலு மறிக.

30. (இ-ள்.) "வேதமும் வேதாந்தங்களின் முடிவும் உபப்பிரும்மண விசாரணையாலுண்டாகும் உண்மைபொருளும் பிரமதேவனும் அறியும் காரணபூதமான வஸ்துவும் அருமையான ரஹஸ்யங்களும் நம்முடைய அரு ளினாலே அவர் அறிவர். நாமே பரத்துவம்; சீரையுடைய மதம் பேதமே; இன்னும் அவரறியாதது இல்லையாயினும் தெரிவிக்குமிடத்தில் பெருமை பொருந்திய பூர்ணாசாரியரான பெரிய நம்பிகள் ஆசாரியர்" என்று பெரு மான் அருளிச்செய்ய, அவ்விதமாகவே திருக்கச்சிநம்பிகள் இராமாநுசருக்கு அருளிச்செய்தனர்.

பேரருளாளப்பெருமா னருளிச்செய்த ஆறு வார்த்தைகள்:—

(1) **பரத்வம் நாமே.** (ஜகத்துக்குப் பரமகாரணமென்று வேதாந்தங்க ளாற் சொல்லப்படும் பரப்ரஹ்மம் நாமே.)

(2) **தர்சநம் பேதமே.** (சித்தாந்தத்திற் சொல்லப்படும் சித் அசித் ஈசு வரன் என்னும் தத்துவங்கள் மூன்றும் ஸ்வரூப ஸ்வபாவங்களால் பேதப் பட்டிருப்பவைகளே யன்றி ஒன்றன்று.)

(3) **உபாயம் ப்ரபத்தியே.** (ஆத்ம ஸ்வரூபத்திற்கு ஏற்ற உபாயம் ப்ர பத்தியே. ப்ரபத்தி என்பது: நூல்களிற் சொல்லப்படும் கர்மம், ஜ்ஞாநம், பக்தி என்ற பலவகைப்பட்ட உபாயங்களை விட்டு ஈசுவரனொருவனையே ரக்ஷகனெனப்பற்றி எல்லாம் அவனிட்ட வழக்கென்று துணிந்திருத்தலாம்.)

(4) **அந்திம ஸ்மிருதி வேண்டா.** (சரீரமுடிவில் ஈசுவரனை ஸ்மரிக்க வேண்டு மென்பதில்லை. எனவே முன் கூறியபடி தன்னையே யடைந்த சேதநனை ஈசுவரன் கைவிடாது சிந்தித்துக் காப்பனென்றபடி.)

(5) **சரீராவஸாநத்திலே மோக்ஷம்.** (ஈசுவரனைப்பற்றின அச்சேத நனுக்குச் சரீரத்தின் முடிவில் மோக்ஷமுண்டாம்.)

(6) **பெரியநம்பிகளை ஆசிரயிப்பது.** (பெரியநம்பிகளை ஆசாரியராகக் கொள்க) என்பனவாம்.

**அறியாதிலே**—அறியா(த)தில்லை, தொகுத்தல். **நேரிக்கும்**—தெரியும் என்பதன் பிறவினை.

31. (இ-ள்.) இதைக்கேட்ட இராமாநுசரும், பெருமையாலுயர்ந்த மதுராந்தகத்தில், ஏரிகாத்த பெருமான் திருக்கோயிலிடம், அழகு மிகுந்த வாளைப் போன்ற விசாலமான கண்களையுடைய தமது தேவியாருடன் வந்து எழுந்தருளியிருக்கும், நாளமும் பெருமையுமுடைய தாமரைமாலையணிந்த பெரிய நம்பிகளைச் சேவித்து, "அடியேனுக்குத் தேவரீருடைய திருவடிகளைத் தந்தருள்வீராகவென்று விரும்பி யாசிரயித்தேன்" என்று அருளிச்செய்ய, பெரியநம்பிகளும் "திருக்கச்சிக்குச் சென்று அங்கு உபதேசிக்கிறோம்" என்றருளிச்செய்ய, அவர் திருவடிகளை இராமாநுசர் நமஸ்கரித்துத் தோத்திரஞ்செய்து,

இதுவும் அடுத்த இரண்டு செய்யுளும் ஒரு தொடர். **கெழுமி**—கெழுமு (பொருந்து)—பகுதி. **கேழ்**—நிறம். **தடாக நாயகன்**—ஏரிகாத்த பெருமான்: மதுராந்தகத்தில் அர்ச்சாரூபங்கொண்டு எழுந்தருளியிருக்கும் பெருமான் **உன் அடி தருவாய் என வேட்டு அடைந்தேன்**—அடியேன் உமது திருவடி சம்பந்தம் பெற விரும்பிவந்தேன்; என்னைச் சிஷ்யனாகக் கொள்ளவேண்டுமென்றபடி. **கூறுதும்**—சொல்வோம்: மந்திரோபதேசஞ் செய்வோம்: தனித் தன்மைப் பன்மை. 'மதுராந்தகம் தடாகநாயகன் கோயில் வந்து தேவியொடும் வைகும் பெரிய நம்பியைக் கண்டு' என்று அந்வயிக்க. தாட்டடந்தாமரைப் பெரிய நம்பி—தடந்தாமரைபோன்ற (தாள்) திருவடிகளையுடைய பெரியநம்பிகள் என்பதும் பொருந்தும். இங்கு நம்பி திருவடிகளை விசேடித்துரைத்தது, அவரை ஆசிரயிக்கவந்த இராமாநுசருக்கு அத்திருவடிகள் உத்தேசமாதலை நோக்கி யென்க.

32. (இ-ள்.) "ஞானோபதேசஞ் செய்யும் யாமுநாசார்யரால் சரீரம் நிலையில்லாமையைக் கண்டு தெளிந்தோமே; மின்னலைப் போன்று மருட்சி கொடுக்கும் சரீரம் நிலையுள்ளதல்லவே; இந்த க்ஷணமே உபதேச மளித்தருளவேண்டும்" என்று கூற, அருள்கொடுக்கும் பெருமைபொருந்திய பெரியநம்பிகளும் மகிழ்ச்சியடைந்து, யாமுநாசார்யரது திருவடிகளைச் சிந்தித்து, முதன்மையான அர்த்தபஞ்சக பிரதிபாத்தியமான திருமந்திரமும் துவயமும் குருபரம்பரா பூர்வகமாக அருளிச்செய்து, பின்னும்,

"மின்னினிலையில, மன்னுயிராக்கைகள், என்னுமிடத்திறை, உன்னுமினீரே" என்னும் அருளிச்செயலுக் கிணங்க, 'மின்போல் மருடருமெய் நிலையன்றே' என்றார். இராமாநுசர், தம்மைக் கொணர்விக்கப் பெரிய நம்பிகளை அனுப்பியும் தாம் சென்றடைவதற்குள்ளாக யாமுநாசார்யர் திருநாடலங்கரித்தமையால், 'தெருடரு யாமுநனுனே யாக்கை நிலையாமை கண்டு தெளிந்தாம்' என்றனர். மந்திரம், துவயம் என்பன ஆசாரியரிடம் அறியத்தக்கன: இங்கு விளக்குவது அஸம்பிரதாயம்.

33. (இ-ள்.) "வனத்துக்குச் செல்லும் இராமபிரான், தன் பிரிவால் வருந்தும் பூமியிலுள்ளோருக்காகப் பாதாழ்வானிடத்தில் தமது திருவடிகளை வைத்தனர். அதுபோல, பெருமையையுடைய யாமுநாசார்யரும் உமக்காகத் தமது திருவடிகளை என்னிடத்தில் வைத்தனர். உமக்கு அவர் கொடுத்தருளின பொருளை நாம் கச்சிநகரத்திற் காட்டக்கடவோம்" என்று அவரைத் தம்முடனே கொண்டெழுந்தருளி மிக்க பெருமையையுடைய பேரருளாளப் பெருமானைக் காட்டி "(யாமுநாசார்யர் என்னிடம் கொடுத்து வைத்த) பொருள் இப்பெருமானே; நீவிர் கண்டுகொள்வீராக" என்றனர்.

இனை—வினைத்தொகை வினை. என—உவமவுருபு. பொருள் இவன் என்பது வழுவா? வழுவமைதியா? எங்ஙனம்?

34. (இ-ள்.) இவ்விதத்தைத் தெரிந்து அவருடன் வாசம் பண்ணிக் கொண்டு வருநாளில், குளத்துக்கு இருவரது தேவிகளும் சென்று நல்ல தீர்த்தத்தைக் கையிலுள்ள தோண்டிகொண்டு மொள்ளும்போது ஒன்றோடொன்று தாக்குதலும் ஒருவரோடொருவர் மிக விரோதமாகி, சொல்லப்படும் நற்குணமும் பெருமையுமுடைய ஆசாரியரது தேவிகளைத் தமது தேவிகள் சொன்ன குற்றத்தைக் கேள்விப்பட்டு, அந்தத் தன்மைக்குத் திருவுள்ளம் நடுக்கமடைந்து ஹரிஹரீ என்றருளிச்செய்து தேவிகளைப் பார்த்துக் கோபித்துச் சொல்லுவாராயினர்.

இருவர் மனைவியர்—பெரியநம்பிகள் தேவிகளும் இராமாநுசர் தேவிகளும். கன்னல்—கரகம், தோண்டி. முகக்தும்—முக—பகுதி. தாக்குதலும்—இஃதென்ன சொல்? பதச்சேதம் செய்து காட்டுக. சொல்வான் என எதிர்காலத்தில் வந்ததை வழுவமைக்குமாறென்ன?

35. (இ-ள்) "தருமங் கெடும்படி அக்கினிமயமான நரகத்தை யெனக்கமைத்தாய்; நீ மிகவும் கொடியவள்; அந்தோ! அந்தோ! சிறந்தவரான ஆசாரியர் தேவியுடன் எதிர்த்தாய்; உன்னை இனி நான் தீண்டுதல் பாவமாகும்; ஆகையால் நீ பிறந்த அகத்துக்குச் செல்லுவாயாக" என்று அனுப்பிவிட்டு, "எனது மருமகனை முதலியாண்டானல்லாமல் மற்றெவரையும் துறந்தேன்" என்று சபதங்கூறி, தூயவரான இராமாநுசர் முற்றத் துறந்தனர்.

இதுவேயன்றிப் பசித்துவந்த பாகவதரொருவர்க்கு அன்னமிடுகவென்று நியமிக்க, அன்னமிருந்தும் இல்லையென்றதொன்றும், திருக்கச்சிநம்பிகளைப் பரம பாவநரென் றெண்ணாது தாழ்வாயெண்ணின தொன்றுமாக இரண்டு குற்றங்கள் இதற்கு முன்னரே தேவிகளிடத் துண்டென்றும், இங்கு கூறியது மூன்றாங்குற்றமென்றும் சொல்லப்படும்.

இங்கு முதலியாண்டானன்றி மற்றெவரையு மென்றது தேகபந்துக்களை.

தவ—செயவெனெச்சம், தவு—பகுதி. (தவு—குன்று, குறைபடு, கெடு.) அந்தோ—திசைச்சொல். பிறந்தகம்—பிறந்த அகம்: பிறந்த வீடு, தாய் வீடு. தூவா—(தூ—பகுதி.) தூத்தி. மருகன்—மருமகன். தாசரதிப்பெயரோன்—முதலியாண்டான். சபதம்—ஆணைச்சொல், பிரதிக்ஞை. துறந்தனன், துறந்தான் என்பவை என்ன இடம்?

36. (இ-ள்.) கடல்நிறமுடைய பேரருளாளப் பெருமானை ஆசாரியனாகக்கொண்டு காஷாய வஸ்திரத்தை விளங்கும்படி யணிந்து, மடமொன்று

நிர்மித்து, சிகையுடன் முப்புரிநூலானது விளங்கும்படி முக்கோலும் மலர் போன்ற திருக்கையில் ஏந்தி, வைராக்கியசித்தராய் எழுந்தருளியிருக்கும் போது, சுப்ரதிஷ்டு என்பவரும் சருவசெந்தி யென்பவரும் பூமியிலவதரித்து முதலியாண்டான், புகழையுடைய கூரத்தாழ்வான் என்று சொல்லப்படும் திருநாமங்களை யுடையரானவர்கள்,

இதுவும் அடுத்த செய்யுளும் குளகம்.

கவின—கவின் என்னும் பண்படியாகப் பிறந்த வினையெச்சம். கவின் என்பது வினைப்பகுதியாய், கவின்ற, கவினுகிற, கவினும் என வருதல் காண்க. **சாந்தி**—சாந்து—பகுதி. **முக்கோல்**—திரிதண்டம். அத்துவித சந்நியாசிகள் பிடிப்பது ஏகதண்டம். விசிஷ்டாத்வைத சந்நியாசிகள் பிடிப்பது திரிதண்டம். சித்—அசித்—ஈசுவரம் என்ற தத்துவத்திரயங்களை யுணர்ந்தவர் என்னும் அறிகுறியாகப் பிடிப்பது. மண், பெண், பொன் ஆசைகளை யொழித்தவரெனக் கூறுவதுமுண்டு. "உரைசான்ற முக்கோலும்" (பாலைக்கலி) என்னுமிடத்தில், "அரி, அயன், அரன் என்னும் மூவரும் ஒருவரென்று சொல்லுதல் தன்னிடத்தே அமைந்த முக்கோல்" என்பர் நச்சினார்க்கினியர். திடமனம்—கலக்கமடையாத உள்ளம். **சுப்பிரதிட்டு, சருவசெந்தி**—பரமபதத்திலுள்ள நித்தியசூரிகள். (இவ்வரிசமயதீபம், பரமபதச்சருக்கம், 8, 9–செய்யுட்கள் "கருநிறக்களிற்றுனனன் பிருச்சினி கருப்பன், பொருவகற்றுகாளன் புண்டரீகனும் புனிதன், பெருமிதக்குமுதன் புகழ்வாமனும் பெரியோன், தெருளுடைச்செயச் சேனன்மெய்ச் **சுப்பிரதிட்டன்**. பொறுமை வாய்மைசேர் சுமுகனோடமானவ புருடன், **சருவசெந்தி**யே முதலினர் கருதருந்தகையோர், மறுவகன்றுயர் பரமபாகவதரே மணியார்ந், துறுவளந்திகழ் மனையினந் நகர்வயினுறைவோர்.") **நாசாதி**—முன் செய்யுளைப் பார்க்க. **கூரவற்சன்**—'ஸ்ரீவத்ஸாங்கர்' என்பது இவரது இயற்பெயர். அது 'வற்சன்' என்றாய், கூரம் என்பது இவரது ஜந்ம பூமியாகையால் 'கூரவற்சன்' என்னப்பட்டது. கூரத்தாழ்வான் என்பவரும் இவரே. இவர் இராமாநுசர், துறவறம் பூண்டதை யறிந்து, தமது செல்வமெல்லாம் பலருக்குங் கொடுத்துவிட்டு, தேவிகளுடன் திருவரங்க நோக்கிவருகையில், ஒரு அடவியில் தம் தேவியார், இங்கு கள்ளர் பயமுண்டோவெனக் கேட்டனர். ஆழ்வான், இங்கு கைப்பொருளில்லாத நமக்குக் கள்ளராற் பயமுண்டாகக் காரணமென் னென்றனர். தேவியார், அமுது செய்வதற்கு ஒரு பொன்வட்டில்மாத்திரம் எடுத்து வந்தே னென்றனர். ஆழ்வான் அவ்வட்டிலை வாங்கி, "நிர்ப்பயமாகச் செல்லு மெமக்குப் பயங் கொடுத்தீரே, அகன்றுபோம்" என்று எறிந்துவிட்டுச் சென்றன ரென்பர்.

37. (இ-ள்.) வந்து சேவித்து, "ஸ்வாமீ! எங்களை ரக்ஷித்தருள வேண்டும்" என்ன, வேதார்த்தங்களில் வல்லவரான இராமாநுசரும் முற்படும் கருணையினாலே அவர்களுக்கு உபதேசஞ்செய்ய, அவர்கள் அர்த்தபஞ்சக ஜ்ஞாநிகளாய் இராமாநுசருக்குத் தக்கபடி அடிமைபூண்டார்கள். அக்காலத்தில் யாதவப்பிரகாசரைப் பார்த்து அவரை யீன்ற தாய், "நீ விருத்தியாகுந் தவவேஷத்தை இராமாநுசரைப்போலத் தரித்தால் நல்லதாகும்" என்றனள்.

**அடிகள்**—படர்க்கை முன்னிலையில் வந்தது. **முந்து கருணை**—வினைத்தொகை. **அர்த்தபஞ்சகமாவன**: ஆத்மஸ்வரூபம், ஈசுவரஸ்வரூபம், புருஷார்த்தஸ்வரூபம், உபாயஸ்வரூபம், விரோதிஸ்வரூபம் என்பன.

38. (இ-ள்.) "சிகையுடன் முப்புரிநூலையும் இனிமேல் தரிப்பது தவமாகுமென்று அவற்றையே செய்ய எண்ணினால், பெருமை பெறும்படி பூமிப்பிரதக்ஷிணஞ் செய்யவேண்டும்; அது இல்லாவிடில் சரீரம் பரிசுத்தமாகமாட்டாது; உலகத்தில் நகைப்பும் உண்டாகும்" என்று சொல்லித் துயிலும்போது, சத்துருக்கள் மீது திருவடியாகிய புள்ளைச் செலுத்தும் பேரருளாளப்பெருமான் அவர் கனவில் கருணையினாலே தோன்றி அருளிச் செய்வானாயினன்:

**தூயிது**, **உளது**—குறிப்பு முற்றுக்கள். **தனு**—சரீரம். **உகை**—வினைத் தொகை வினை.

39. (இ-ள்.) "இராமாநுசரை வலம்வருதலே பூமிப்பிரதக்ஷிணஞ் செய்வதாகும்; அவரது தவமே உலகமெல்லாம் போற்றுந் தவமாகும்; அவரது மதமே எமக்கு மதமாகும்; அதுவே மாட்சிமையுடையதாகும்; கவலையடையவேண்டா. இவ்விதத்தை நீ செய்வாயாக" என்று கூற, அவரும் விழித்து, திருக்கச்சிநம்பிகளிடத்துச் சந்தோஷத்துடன் சொல்லி, இதைப் பற்றிப் பெருமானைக் கேட்டருள்வீராக வென்று கூற, திருக்கச்சிநம்பிகளும் பெருமானிடம் விண்ணப்பஞ்செய்யப் பெருமானும்,

**மற்று**—அசை. **உறேல்**—உறு—பகுதி, எல்—எவலொருமை விகுதி. இவ்விகுதி எதிர்மறையில் வரும். இதுவும் அடுத்த மூன்று செய்யுளும் ஒரு தொடர்.

40. (இ-ள்.) "நாம் கனவில் சொல்லியபடியே செய்யின் எமக்கு மனமகிழ்வாகும் என்று சொல்லுவீராக" என்றருளிச்செய்ய, தாமரை மலரிலிருக்கும் பிரமதேவனுக்குச் சமானமான யாதவப்பிரகாசருக்குத் திருக்கச்சிநம்பிகள் இதை அருளிச்செய்யக் கேட்டு, யாதவப்பிரகாசரும், அதை மனத்திற்கொண்டு, இராமாநுசரைப் பிரதக்ஷிணம்வந்து திருவடிகளை வணங்கி, "ஸ்வாமீ! தீங்கு நீங்கும்படி எனக்கு உமது அருள் பெறுதல்வேண்டும்" என்று கூற, மனமொழி மெய்களாற் செம்மை வாய்ந்த இராமாநுசரும்,

**கொடு**—கொ(ண்)டு—தொகுத்தல். **ஐய**—ஐயன் என்பது விளியில் ஈறு கெட்டது.

41. (இ-ள்.) ஆசாரியரைத் தியானித்துக்கொண்டு சிகையும் முப்புரி நூலும் முக்கோலும் கொடுத்தருளி, குற்றமற்ற ஞானம் விருத்தியாகும் உபதேசத்துடன் கோவிந்த தாசரென்னும் திருநாமத்தைப் பிரீதியோடு சாத்தி, ஆதிசேஷ சயநத்தில் அறிதுயிலமரும் பெருமானது தரிசனத்தின் முறைமைகளை யுணரும் அரிய நூல்களா யுள்ளனவற்றையெல்லாம் கையினிடத்துள்ள நெல்லிக்கனியைப்போல அருளிச்செய்து பெருமானைத் துதித்துக்கொண்டு உள்ளங்களித்து எழுந்தருளியிருக்கும்போது,

**உணர்தரும்**—உணர்தா—பகுதி. **கோவிந்ததாசப் பேர்**—தாஸ்யநாமம், பஞ்சஸம்ஸ்காரம் செய்யும்போது அடிமைபாவனையாக இடப்பட்ட பெயர். **கரதலநெல்லி**—கரதலாமலகம், உள்ளங்கை நெல்லிக்கனி.

42. (இ-ள்.) திருவரங்கப் பெருமாளரையரை மதில்சூழ்ந்த திருவரங்கத்தில் நித்தியவாசஞ் செய்யுமவர்கள் மகிழ்ச்சிகொண்டு நோக்கி, "திருப்பதிகளில் மிகவுயர்ந்த காஞ்சீபுரத்துக்குப் போய் வரதராசப் பெருமானைத்

திருவடி தொழுது, சங்கீத சாஸ்திர விதிமுறையினாலே திருவுள்ள மகிழச் செய்து இனியவரான இராமாநுசரைக் கேட்டு வேண்டி, பரமபதந்தரும் நமது திருவரங்கம் திருப்பதிக்குக் கொண்டுவருவீராக" என்று அருளிச் செய்ய, அவரும் விடைகொண்டு உயர்ந்த கச்சிமாநகரத்தைச் சார்ந்தனர்.

**திருவரங்கப்பெருமான்**—திருவரங்கப் பெருமாளரையர். இவர் இராமாநுசருக்கு ஆசிரியர்களுள் ஒருவரென்பதனை இச்சருக்கம் 79—வது செய்யுளிற் காண்க. பதிகளின் மிக்குயர் காஞ்சி யென்றது, அயோத்தி, மதுரை, மாயை, காசி, காஞ்சி, அவந்திகை, துவாரகை என்னும் சப்தபுரிகளில் ஒன்றானதை நோக்கி. **வரதன்**—வரந்தருபவன். **பழிச்சி**—பழிச்சு—பகுதி, இ—இறந்தகால வினையெச்ச விகுதி.

43. (இ-ள்.) (அப்படி வந்தவர்) பெருமான் சந்நிதியில் கந்தருவனைப் போலப் பாடுதலும், வரதராசப் பெருமான் திருவரங்கப் பெருமாளரையரை அருள் தழைக்கும்படி கடாக்ஷித்து, "என்ன பொருளைக் கேட்டாலும் நாம் கொடுக்கிறோம் கேட்பீராக" என்ன, அவரும் "எனது ஸ்வாமியே! நியாமகனே! தெற்கின் கண்ணுள்ள திருவரங்கத்தில் நித்தியவாசஞ் செய்யும்படி இராமாநுசரைக் கிருபை செய்தருளல்வேண்டும்" என்ன, பெருமான் உடன்படாதவராகி "இராமாநுசரல்லாத வேறெவற்றையேனும் கேட்பீராக" என்ன, "ஸத்யவானான நீ பொய்த்துப்போவையாயின் அழகாகுமன்றோ?"

**பாடலும்**—உம்மீற்று வினையெச்சம். **ஈதுவம்**—கு—சாரியை. **எந்தாய்**—என் தந்தை என்பது எந்தை யென மருவி, ஐ விளியில் ஆய் ஆயிற்று. **நேரான்**—வினையெச்ச முற்று. இதுவும் அடுத்த செய்யுளும் ஒரு தொடர்.

44. (இ-ள்.) என்று திருவரங்கப் பெருமாளரையர் சொல்லித் திருவடி வணங்கப் பேரருளாளப் பெருமான் "(நீர் கேட்டபடி இராமாநுசனை) கொடுத்தோம்" என்றனன். பிறகு அவரும் திருவுள்ளமகிழ்ந்து இராமாநுசரைப் "பெருமான் அருளப்பாடிட்டனர் வருவீராக" என்ன, சூரியன் வடதிசையினின்று தெற்குத்திசைக்கு நடந்து சென்றதுபோலச் சென்று, இராமாநுசரும், ஆதிசேஷ சயநத்தின்மீது துயிலமரும் பெருமானது திருவரங்க நகரத்தின் வடதிசையின் பக்கம் சேர்ந்தனர்.

தினகரன் என்பது நடந்தது என்னும் தொழிற்பெயரின் முதனிலையைக்கொண்டு முடிந்தது.

45. (இ-ள்.) பிரமதேவனைப்பெற்ற திருவரங்கநாதன் சேனைமுதலியாரைக் கடாக்ஷித்து, "அனைத்துக் கொத்திலுள்ளாரோடும் தமிழ்நூலும் வேதசாஸ்திரங்களும் தெரிந்தவரான இராமாநுசரை நீவிர் எதிர்கொண்டு போய்க் கொண்டுவருவீராக" என்றருளிச்செய்ய, அவர் ஜயர், விஜயர், சுநந்தர், நந்தர், வலிமையுள்ள திருவடி, தேவர்முதலிய அந்த ஸ்தலத்திலுள்ளவர்களோடும் மேகம்போன்ற திருவரங்கப் பெருமானது அருளப்பாடென்று எதிர்கொண்டு உபசாரஞ்சொல்லினர்.

**அனைவர்**—(அனை—அத்தனை.) — அத்தனைபேர், எல்லாரும். **புயலரங்கன்**—உவமைத்தொகை. **அருளப்பாடு**—கட்டளை. அருள்+அ—(சாரியை)+பாடு (தொழிற்பெயர் விகுதி.) **மாதோ**—அசை.

46. (இ-ள்.) திருவரங்கத்திலுள்ள பிரணவாகார விமானத்தைச் சேவித்து, பூமியில் விழுந்து வணங்கி, பெருமானுக்கு அலங்காரமாக விளங்கும் திருக்காவேரிநதியின் அலைகள் மிகுந்த நீரிற் படிந்து, நியமங்களை முடித்து, அழகிய நகரத்திற் பிரவேசித்து, குதிரை அழகிய தேர்கள் யானைகள் நெருங்கிய வீதிகள் பலவற்றையுங் கடந்து, பரிசுத்தம் நிறைந்த வரத்தைக் கொடுக்கும் தாமோதரப் பெருமான் நித்தியவாசஞ்செய்யும் அழகிய சிகரத்தையுடைய பொன்மயமான கோபுரவாசலில் வந்து,

**விமானம்**—பெருமான் அர்ச்சையுருவங்கொண்டு எழுந்தருளியிருக்கும் கர்ப்பக்ருஹத்தின் மேலிடம். **முகில்**—உவமையாகுபெயர். **தாமோதரன்**—தாம+உதரன்; (தாமம்—கயிறு, உதரம்—வயிறு.) கண்ணன். வெண்ணெய் களவு கண்டதற்காகக் கோபித்த யசோதை, தாம்புக்கயிற்றால் அவனைக் கட்டியதனால் இப்பெயர் வந்தது. இதுவும் அடுத்த செய்யுளும் குளகம்.

47. (இ-ள்.) தமது எட்டங்கங்களும் பூமியிற் படியவும், பக்தி திருவுள்ளத்தி லதிகரிக்கவும், திருக்கண்கள் ஆநந்த நீர் பொழியவும், திருமேனி புளகந்தரவும், சங்கு அழகிய சக்கரம் நாந்தகம் சார்ங்கம் கதாயுதம் இவைகள் கூடிய அழகிய தாமரைகள் பூத்ததுபோன்ற திருமேனியைத் திருவுள்ளத்திற்கொண்டு வணங்கினர்.

**அங்கமெட்டு**: கரங்களிரண்டு, பாதங்களிரண்டு, மார்பு ஒன்று, நெற்றியொன்று, புயங்களிரண்டு. இவைகள் பூமியிற் படிய வணங்குவது ஸாஷ்டாங்க நமஸ்கார மெனப்படும். **புளகம்**—மயிர் சிலிர்த்தல். சங்கு—பாஞ்சஜந்யம், திகிரி—சுதர்சநம், வாள்—நாந்தகம், சார்ங்கம்—வில், தண்டு—(கதாயுதம்) கௌமோதகி இவை பஞ்சாயுதம் எனப்படும். **பங்கயவடிவு**—தாமரை இலையும் மலரும்போன்ற வடிவம். இலை போல்வது—திருமேனி; மலர் போல்வது—அவயவங்கள். **பங்கயம்**—பங்கஜம்—(பங்கம்—சேறு, ஜம்—பிறப்பது.) சேற்றிற் பிறப்பது. உளம் கொடு—உ(ள்)ளம் கொ(ண்)டு — மனதிலெண்ணி.

48. (இ-ள்.) அழகிய முடியையுடைய கோபுரவாசலிற் பிரவேசித்து, ஒளியையுடைய அழகிய மணிகளிழைத்த ஏழு திருமதில்களைக் கடந்து, பிறவிப்பிணியை நீக்கும் பலிபீடத்தோடு கருடஸ்தம்பத்தையும் வணங்கித் துதித்தனர். **பணிபகை**-கருடன்.

**ஏழாரணம்**—ஸ்ரீரங்கத்தில் சந்நிதிக்கு அமைந்திருக்கும் ஏழு மதில்கள். **ஓரீஇ**—ஒருவி என்பது அளபெடுத்து வந்தது. **பலிபீடம்**—பலி செலுத்தும் பீடம். **கருடகம்பம்**—கருடாழ்வான் உருவை யமைத்திருக்கும் ஸ்தம்பம்

49. (இ-ள்.) பெருமைபொருந்திய பணிப்பெட்டகமான சந்நிதியை வலஞ்செய்து, மணிகளிழைத்த ஆபரணங்களணிந்த ஜயவிஜயர்களையுந் துதித்து, உயர்ந்த பிரமனும் சிவனும் தேவர்களும் காண்பதற்கரிய பொருளான திருவரங்கத் தெம்பெருமானையும் தமது திருக்கண்களாற் சேவித்தனர்.

**பணிப்பெட்டகம்**—திருவநந்தாழ்வானாகிய பெட்டி. **ஜயவிஜயர்**—எம்பெருமான் சந்நிதியின் வாசற்காவலாளர். **பதுமத்தன்**—(பதுமம்—தாமரை.) பெருமானது நாபீபதுமத்தில் தோன்றினவன், பிரமன். அடுத்த செய்யுளில் 'வேதனைத்தரு மூளரிநாபியும்' என வருதல் காண்க.

50. (இ-ள்.) இரண்டு திருவடிகளாகிய தாமரைகளும், பசுமையான பீதகவாடையும், முதன்மையுடைய பிரமதேவனைப்பெற்ற தாமரைத் திருநாபியும், நூறு இதழ்களையுடைய தாமரைமலர்போன்ற திருக்கரங்களும், திருப்புயங்களும், திருமாலையும், திருவதரமாகிற பவளமும், பெரிய பிராட்டியார் நித்தியவாசஞ்செய்யும் திருமார்பும்,

**யுகம்**—இரண்டு. **பதயுகக்கமலம்**—பாதங்களாகிய இரண்டு தாமரைகள், தாமரைபோன்ற இரண்டு திருவடிகள். **முதல**—குறிப்புப் பெயரெச்சம். **முளரிநாபி**—தாமரை பூத்த உந்தி. **சததளம்**—(சதம்—நூறு, தளம்—பத்திரம்.) நூறிதழ்களையுடைய தாமரை. இது சதபத்திரம் என்று வழங்கும். **அதரவித்துருமம்**—(அதரம்—உதடு, வித்துருமம்—பவளம்) உதடாகிய பவளம், பவளம்போன்ற உதடு.

51. (இ-ள்.) ஒளிவிடும் மகரகுண்டலங்களும், சிவந்த பிரகாசமுடைய திருவபிஷேகமும், நாசியும், சந்திரன்போன்ற திருமுகமும், புன்முறுவலும் மிகுதியும் தமது திருக்கண்களை அபகரிக்க, அவைகளுடன் திருவுள்ளமும் கூடியதினாலே பூமியின்மீது தரிக்காதவராகித் துதிக்கத் தொடங்கினார்.

**மகரகுண்டலம்**—மகரமீன் வடிவாகச் செய்யப்பட்ட காதணி. (மகரம்—சுறா.) **நெடிது**—வினையுரிச்சொல். **படிநீதிலன்**—வினையெச்ச முற்று.

52. (இ-ள்.) "அக்காலத்தில் அளவுபடாத அண்டங்களையும் உண்டு, ஒரு ஆலிலையில் சிறு குழவியாகித் துயின்றாய் என்பார்கள். (அங்ஙனம் துயின்றபோது) நீ பொருந்தியிருந்தவிடம் எவ்விடமென்று அறிகிலேன். உயர்ந்த திருத்துழாய்மாலையையுடைய பெருமானே! இதனை விளங்கும்படி அருளிச்செய்வாயாக.

ஆல் (1) வியப்பிடைச்சொல். (2) அசை. முதற்றிருவந்தாதியில் "பாலன் றனதுருவா யேழுலகுண் டாலிலையின், மேலன்று நீ வளர்ந்த மெய்யென்ப—ராலன்று, வேலைநீ ருள்ளதோ விண்ணதோ மண்ணதோ, சோலைசூழ் குன்றெடுத்தாய் சொல்" என வருவது காண்க.

53. (இ-ள்.) "ஆதிமூலப்பொருள் நீ யொருவனேயென்று வேதம் பிரதிபாதித்து மற்றெவையும் நீயென்றும் பிரதிபாதிக்கும்; இப்படியிருப்பதால், இவைகள் உன்னோடு பேதமாக்கப்படாத உருவங்கள்தானோ? அல்லது உன்னோடு பேதமாக வேறானவற்றையும் பெற்றிருக்கிறாயோ? நீதியானவனே! நான் இதனை அறிகின்றிலேன்; எனக்கு நீ அருளிச்செய்ய வேண்டும்.

**ஒருவனே**—ஏ—தேற்றம். **எவையு நீ**—இம்முடிபுக்கு இலக்கண மமைக்க. **ஆல்**—இரண்டும் அசை.

54. (இ-ள்.) "(கஜேந்திராழ்வான் ஆதி) மூலமே என்று வாயாற் சொல்ல, அப்போது வந்து தோன்றியது உனது திருக்கோலமே யென்று வேதம் சொல்லுவது உண்மையோ? அஃதன்றி, பூமியின்மீது பல சமய நூல்களும் சொன்ன உண்மையின் சீலந்தானோ? இவற்றைத் தெளியும்படி அருளிச்செய்வாயாக.

**மூலமே**—ஏ—விளி. ஏ—தேற்றமும், ஓ—வினாவுமென்க.

55. (இ-ள்.) "நீ உண்டருளின வெண்ணெயின்பொருட்டாக யசோதைப்பிராட்டி உன்னைக் கயிறுகொண்டு அடிக்குமாத்திரத்தில் நீ அழ, அப்போது உனது அழகிய வாயில் அண்டமும் அதிலுள்ள சராசரங்களனைத்தும் அப்பிராட்டி கண்டனளென்பது அடியேனது கருத்துக்கு ஐயமாகவேயுள்ளது.

**பொருட்டு**—நான்காவதன் சொல்லுருபு. **சராசரம்**—அசையும்பொருளும் அசையாப்பொருளும், இயங்குதிணைப்பொருளும் நிலைத்திணைப்பொருளும்.

56. (இ-ள்.) "நினது கொப்பூழிலுள்ள தாமரையில் உற்பத்தியான எட்டுக்கண்களையுடைய பிரமதேவனையும் அண்டத்தையும் அதிலுள்ள சராசரங்களையும் நீ உண்டாக்கும் விதத்தை இவ்விதமென்று எண்ணுகிலேன்; அழகு செய்யும் உனது திருவடித்தாமரை சிந்திய ஒரு துகளானது திரண்ட கல்லை அகலிகையாகச் செய்தபடியை அருளிச்செய்வாயாக."

**எண்ணலேன்**—அறிகின்றிலேன். **சரோருகம்** — தடாகத்திலுதிப்பது, தாமரை. எண்கணுனவன் தலமும் சராசரமும் தருந்தகைமையை எண்ணலேன் என்றுங்கொள்ளலாம். இங்ஙனங் கொள்வதில் அத்தகைமையை நான் ஒரு பொருட்டாக எண்ணேன் என்க. இதுமுதல் மூன்று செய்யுளும் ஒரு தொடர்.

57. (இ-ள்.) இவ்விதமாகத் துதித்து இராமாநுசரென்னும் திருநாமமுள்ள நிறைதவமுடையவர், புளகம் திருமேனி முழுதுமுண்டாக முதிர்ந்த பேரன்பினாலே பணிந்தபோது, அஷ்டாக்ஷரப் பிரதிபாத்தியனான பெருமானும் அருளிச்செய்வானாயினன்:

58. (இ-ள்.) "இந்தத் திருவரங்கம் முதலாக நாம் நித்திய வாசஞ்செய்யும் மெய்ம்மையான நூற்றெட்டுத் திருப்பதிகளின் முதன்மையும், சமயத்தின் மேன்மையும், சொல்லுவதற்குரிய உபயவிபூதி ஐசுவரியத்தின் நன்மையும், ஒப்பற்ற பெருமைநிறைந்த உமக்குக் கொடுத்தோம்."

**உபயவிபூதி**—லீலாவிபூதி, நித்யவிபூதி. விபூதி—ஐசுவரியம்.

**முதல**—குறிப்பு வினையாலணையும்பெயர். முதல மெய்ப்பதி(கள்)—இப்பதி முதலியனவாகிய யாமுறை நூற்றெட்டு மெய்ப்பதிகள் என இயைத்துக்கொள்க. **பதிகளின் முதன்மையாவது:** திருப்பதிகளில் இவர்க்குப் பிராதாந்யம். **சமயமேன்மை**—வைணவதர்சநத்துக்கு நிர்வாஹகராகிற சிறப்பு. **உபயவிபூதியின் சீர்மையாவது:** லீலாவிபூதியில் ஆத்மாக்களுக்கு உஜ்ஜீவனோபாயமாதலும் நித்தியவிபூதியில் தலைமை பெற்றிருக்கும் சிறப்பும்.

59. (இ-ள்.) என்று திருவருள் புரிந்து, பெருமான் விஷயத்தில் பரிவுடைய இக்ஷ்வாகு மகாராசருக்கு ஒப்பான முதலிகளும், அந்தத் தலத்திலுள்ள மற்றுள்ளவர்களும், மனத்தில் சந்தோஷ மதிகரித்து வணங்கி வாழ்த்தாநிற்க, நல்ல தினத்தில், இராமாநுசர், யாவருக்கும் ஆசாரியராகும் முதன்மையைச் செய்தருளினன்.

**நான்முனை**—நாலாகிய மூனை: இருபெயரொட்டு. **முதலிகள்**-திருவரங்க நகரப்பன் கைங்கரியங்களில் முதன்மை பெற்றிருப்பவர்கள். அவர் விவரம், "திருக்கலியனணுக்கர், திருப்பணி செய்யன்பர், சீரங்க நான்மறையோர், உள்ளூர்ச்செல்வர், தருக்குமிசைப் பிரான்மார், பாரளந்தார் பாதந்தாங் குவோர், திருக்கரகந்தரித்து நிற்போர், இருக்குமுதல் விண்ணப்பஞ்செய் வோர், வீரர்க்கிறையவர்கள், சீபுண்டரீகர், மற்றும் பெருக்கமுள்ள பரிகரங் கள் தொழுதாட்செய்யப் பிரமமாந் திருவரங்கராடிரூசல்" என்னும் திருவ ரங்கத்தூசற் செய்யுளாலுணர்க.

60. (இ-ள்.) ஆசாரியராதற்குத் தகுந்த இராமாநுசரும், குளிர்ந்த தேன் சிந்தும் புஷ்பங்களையுடைய சோலைகள் சூழ்ந்த திருவரங்கநாதனுக்கு ஆநந்தத்தினாலே அதிகமான அர்ச்சனைகளையும் உற்சவங்களையும் செய்து, வேதத்தின்மீது கூடிய தாமரை மலர்போன்ற அப்பெருமானது திருவடி களைத் துதித்து எழுந்தருளியிருக்கும்போது,

**ஓகை**-உவகை யென்பதன் மரூஉ. இதுமுதல் 6 செய்யுள் ஒரு தொடர்.

61. (இ-ள்.) தவத்தையுடைய பூர்ணாசாரியரான பெரியநம்பிகளது திருவடிகளைத் துதித்து, "தேவரீர் அடியேனை உவப்பினாலே ஆண்டருளி னீர்; ஸ்ரீ ஆளவந்தார் அருளிச்செய்துள்ள அர்த்தங்கள் யாவற்றையும், பிறவி நோய்க்கு மருந்துபோன்றவரே! அருளிச்செய்வீராக" என்ன, விருத்தியா கும் அரிய பொருள்களையெல்லாம் இராமாநுசருக்கு அருளிச்செய்து, பின்னர் அப்பெரிய நம்பிகளும்,

**பவப்பிணிமருந்து**-உருவகம். **ஆல்**-அசை.

62. (இ-ள்.) "நாம் அறிந்த அர்த்தங்களைச் சொல்லக் கேட்டீர்; யாமுநா சாரியரது ரஹஸ்யார்த்தங்களை இன்னும் கேட்பதற்கு விரும்பினீராயின் கற்றவர்களில் தலைமைபெற்ற மநநசீலரான திருக்கோட்டியூர் நம்பிகள், குற் றமில்லாதவரான திருமலைநம்பிகள்,

**காமுறின்**-காமுறு (காமம்+உறு) பகுதி. **கோமுனி**-கோவாகிய முனி, தலைமைபெற்ற மநநசீலர்.

63. (இ-ள்.) வரங்களாலுயர்ந்தவரான திருமாலையாண்டான், திருவரங் கப் பெருமாளரையர் ஆகிய இவர்கள் ஸ்ரீ ஆளவந்தாருக்கு அடிமையாயுள்ள வராவர்; இவர்களிடம் துன்புறாமல் நீவிர் சென்று கேட்பீராக" என்று வலிமையான சாஸ்திர ஞானத்தையுடைய பெரியநம்பிகள் அருளிச்செய்து, பின்னரும்

**இராங்கல்**—அல்லீற்று வியங்கோள். இங்கே வினையெச்சமுற்றாக வந்தது. **வயின்**-ஏழனுருபு. **கலா**-தற்சமம். முன் செய்யுளிலும் இச் செய்யுளிலும் சொல்லப்பட்ட 'நாம்' என்பதனாற் குறிக்கப்படும் பெரிய நம்பி, திருக்கோட்டியூர் நம்பி, திருமலை நம்பி, திருமாலையாண்டான், திரு வரங்கப் பெருமாளரையர் என்னு மைவரும் ஸ்ரீ ஆளவந்தாருக்குச் சிஷ்யர் களும் இராமாநுசருக்கு ஆசிரியருமாவர். பெரியநம்பி ஆசிரியராதலை 32-வது செய்யுளாலும், திருக்கோட்டியூர் நம்பி ஆசிரியராதலை 69-வது 74-வது செய்யுட்களாலும், திருமாலையாண்டானும் திருவரங்கப் பெருமா

ளரையரும் ஆசிரியராதலே 79-வது செய்யுளாலு மறிக. இன்னும் இராமாநுசர், காஷாயவஸ்திர மணிந்தபோது, பேரருளாளப் பெருமானையே ஆசாரியனாகக் கொண்டது 36-வது செய்யுளாலறிக.

64. (இ-ள்.) தமது திருக்குமாரரை இராமாநுசரது திருவடிகளை யாசிரயிப்பாயாகவென்று அன்போடு அவரது சிஷ்யராக்கினர். அதன்பிறகு முதலில் இராமாநுசரென்னும் திருநாமமுடைய உதாரியும் பெருமைபூண்ட திருக்கோட்டியூரிற் பிரவேசித்து,

போற்று-ஏவல். இலக்குவப்பெயர்கோள் வள்ளல் (இலக்குவன்-இராமன்தம்பி, இராமாநுசன்) இராமாநுசன் என்கிற திருநாமத்தை வகித்தவரான வள்ளல். ஆத்துமாக்களின் உஜ்ஜீவநார்த்தமாக உபகரித்தவராதலால் 'வள்ளல்' என்றார்.

65. (இ-ள்.) திருக்கோட்டியூர் நம்பிகளிடம் பொருந்திய பெருமையும் மணியொளியுமுடைய திருமாளிகை வாசலே யடைந்து, அவரது திருவடித் தாமரைகளை வணங்கித் துதித்து, "தாழ்வில்லாமல் தேடிய ரஹஸ்யார்த்தங்களை அருளிச்செய்து என்னை அடிமை கொள்வீராக" என்றனர்.

66. (இ-ள்.) இப்படிக் கேட்கவும், திருக்கோட்டியூர் நம்பிகளும் பதினேழு தினம்வரையில் ரஹஸ்யார்த்தங்களை அருளிச்செய்திலர். வேதமுணர்ந்த மேலோரான இராமாநுசர், திருவுள்ளம் மிகவுந் தளர்ந்தும், நம்பிகளைச் சிறிதும் விட்டு நீங்காதவராகியிருந்து, அவரது மாணாக்கர்களை நோக்கி, "எனது வருத்தத்தை நீக்கும்படிக்கு உயர்ந்த நம்பிகளுக்குச் சொல்லுவீராக" என்று சொல்லுதலும், அவர்கள் சென்று, "ஸ்வாமிகளான உமது திருவருளுக்கு இராமாநுசர் உரியவராவர்; அவரை அடிமைகொண்டு ரக்ஷித்தருள்வீராக" என்று கூறினர்.

மற்று-அசை. சொற்றிலன்-சொல்-பகுதி, அன்-விகுதி, ற்-இறந்தகால இடைநிலே; இல்-எதிர்மறை யிடைநிலே. ஏனைக்காலங்களில் எங்ஙனம் வரும்? இறை-பண்புப்பெயர். இதில் உம்மை, செய்யுள் விகாரத்தாற் றொக்கது. அளிக்குதி-கு-சாரியை.

67. (இ-ள்.) இப்படிச் சொன்ன அந்தச் சொல்லேக்கேட்டு அருள் பெருகுதலும், சொல்லிய மாணாக்கர்களை நோக்கி, இராமாநுசரைத் தமது தண்டம் பவித்திரமல்லாமல் மற்றவைகளை விட்டு இவ்விடத்துக்கு அழைப்பீர்களாக வென்றருளிச் செய்ய, அவர்கள் வருந்தியவரான மெய்த்தவத்தையுடைய இராமாநுசருக்கு அவ்விதத்தைச் சொல்லி, வருவீரென்று அழைத்தலும், இராமாநுசர் சந்தோஷ மதிகரித்து ஒப்பற்றவரான முதலியாண்டானோடும் கூரத்தாழ்வானோடும் எழுந்தருளிச் சேவித்தனர்.

புகல்-முதனிலேத் தொழிற்பெயர். தண்டம்-திரிதண்டம், முக்கோல். பவித்திரம்-திரிதண்டத்தின் நுனியிற் சேர்த்திருக்கும் துண்டுத்துணி. அல்லால்-குறிப்புவினை யெச்சம்.

68. (இ-ள்.) (திருக்கோட்டியூர் நம்பிகள், "நாம் சொன்னபடி) பவித்திரமும் தண்டமும் எங்கே" என்று கேட்க, இராமாநுசர் பணிந்து மலர் போன்ற கைகளைக் குவித்து, "இவர்களிருவரும் தேவரீர் அருளிச்செய்த தண்டபவித்திரங்கள்" என்று கூற, திருக்கோட்டியூர் நம்பிகளும் "பூமிக்கு

ஆபரணம் போன்றவரே! இவ்விருவருள் தண்டம் யார்? பவித்திரம் யார்? பகுத்துரைப்பீர்'' என்று அருளிச்செய்ய, தவத்தையுடைய இராமாநுசர், முதலியாண்டானைத் தண்டமாக வருளிச்செய்து, அழகிய பெருமையை யுடைய ஸ்ரீவத்ஸாங்கரான கூரத்தாழ்வானைப் பவித்திரமென் றருளிச்செய்தனர்.

**எவண** (எவண் வினாவடியாகப்பிறந்த இடப்பெயர்)-பலவின்பால் குறிப்பு வினைமுற்று அனையாய்-விளி. விளியேலாவிடத்து அனையான் என வரும்.

69. (இ-ள்.) திருக்கோட்டியூர் நம்பிகள், ''இவ்விருவரும் நீவிரும் உணர் வீர்களாக; மற்றெவர்க்கும் சொல்லவேண்டா'' என்று அருகிருத்தி, ''ஒருவரும் அறிவதற்கரிதாக அக்காலத்தில் யாமுநாசாரியர் அருளிச்செய்த மெய்ப் பொரு ளிதுவாகும்'' என்று அருளிச்செய்தனர். ஒப்பற்ற இராமாநுசரும், அந்தப் பொருளைப் பெருமானது திருக்கோட்டியூர் மஹோற்சவத்தில், (திருக்கோயிற் றிருமதிலின்மீதேறி யிருந்து) ''பயப்படும்படியாக வரும் யமனுக்கு இனி யாரும் அஞ்சாதேயுங்கள்; கேட்பீர்களாக'' என்று வெளிப் படும்படி விரித்துரைத்தனர்.

இங்கு நம்பிகள் அருளிச்செய்தது திருமந்திரார்த்தம்.

**புயல்** - உவமையாகுபெயர். **வெருவரும்**-வெருவா-பகுதி. **கேண்ம்**-(மகரக்குறுக்கம்) கேளும் என்பதில் விகுதி உகரம் தொகுத்தல்.

70. (இ-ள்.) ''ஆசாரியர் உபதேசித்ததை மறுத்து இப்படிச்செய்த கொடுமையாலே சொல்வதற்கரிய கொடியதான நரகமடைவீர்'' என்று திருக் கோட்டியூர் நம்பிகள் அருளிச்செய்தலும், (இராமாநுசர்) ''திருவரங்க நகரப் பனைப்போன்ற எனது ஆசாரியரே! (தேவரீர் திருவடிகளை முன்னிட்டு அடியேன் சொன்னதனால்) வேதப் பிரதிபாத்தியமாகும் பரகதிக்கு உலகத் திலுள்ளோர் அனைவரும் செல்லலாம்படி இதைச் சொன்ன பாதகத்தினாலே நான் நரகத்தை யடைந்தாலும் எனக்கு அழகேயாகும்.''

இதுவும் அடுத்த செய்யுளும் ஒரு தொடர்.

71. (இ-ள்.) என்றருளிச்செய்த இராமாநுசரைப் பெருந்தகையையுடைய திருக்கோட்டியூர் நம்பிகள் சந்தோஷ மதிகரித்ததினாலே திருக்கைகளாலே தழுவி ''உமக்குச் சமானமானவர்கள் யாவர்? உலகத்திலுள்ளவர்களெல் லாம் மோக்ஷமடைந்து உஜ்ஜீவிக்கும்படி வந்தவரோ நீவிர்?'' என்றருளிச் செய்து, ''நீரையுடைய சமுத்திரஞ்சூழ்ந்த பூமியில் இந்த மதமும் உமது திருநாமத்தால் வழங்கக்கடவது'' என்றருளிச்செய்து, தமக்குண்டான திருக் குமாரரையும் இராமாநுசருக்குச் சிஷ்யராகக் கொடுத்தருளினர்.

**கோல்**-ஐயம் **உன**-உன் என்பது அகரச்சாரியை பெற்று வந்தது. **மாணக்கன**-மாணக்கனு(க).

72. (இ-ள்.) பின்னரும் நம்பிகள், இராமாநுச முனிவரது திருமுகமண் டலத்தைக் கடாக்ஷித்து ''விருத்தியாகும் விருப்பத்தினாலே இன்னும் பரம மான பொருள்கள் சிலவற்றை உமக்கு இங்குச் சொல்ல எண்ணினோம்;

அதைச் சொல்வதற்கு முன்னே நீவிர் த்ருப்தராயினீர்" என்றருளிச்செய்ய, இராமாநுச முனிவரும் அவ்வர்த்தத்தில் அபிநிவேசம் அதிகரித்து அதனை யும் கேட்பதற்கு வருந்தி விருப்பமுற்றிருந்து,

இதுவும் அடுத்த செய்யுளும் ஒரு தொடர்.

73. (இ-ள்.) மறுமொழி யுரையாமலிருக்க, நம்பிகளும் "உமது மனத்தி லுள்ளது யாது சொல்லுவீராக" என்ன, இராமாநுசர் வணங்கி, "மேற் பட்ட பெருமையையுடைய முனிவரே! நீவிர் அருளிச்செய்த அர்த்தத் துக்கு மேற்பட்ட ஒன்று இருக்கிறதென்று கேட்பின், கேட்ட அர்த்தத் தில் ஊற்றமில்லாத உள்ளத்தவனுவேன்; கேளாமற் போவேனுயின் என் உள்ளத்தில் அவ்வுரைத்த பொருள் படிந்ததின்ருகும்; ஆகவே இன்று பெரு மையையுடைய தேவரீரே அருளிச்செய்வீரென்று நான் சொல்லும் வித மொன்றையும் அறியாமலிருந்தனன்" என்றனர்.

**மாற்றமாறு**—மாறு ஆகிய மாற்றம், மறுமொழி. மனத்தது—இடமடி யாகப் பிறந்த குறிப்புவினையாலணையும்பெயர். **ஆதுவன், இருந்தனன்** இவை என்ன இடம்?

74. (இ-ள்.) இதைக்கேட்ட திருக்கோட்டியூர் நம்பிகளும், "நீவிர் வருந் தவேண்டா; இன்று விடைகொண்டு இன்னுமொருதினம் இவ்விடத்துக்கு உம்மோடு சேர்ந்த கூட்டத்தை நீக்கி எம்மிடத்துக்கு வருவீராக" என்று அருளிச்செய்ய, (அப்படியே இராமாநுசர்) விடைகொண்டு சென்றனர். மற்றொருதினம் தனித்து, திருக்கோட்டியூர் நம்பிகளது தளிர்போன்ற திரு வடித்தாமரைகளை யடைந்து வணங்க, உண்மையான தவத்தையுடைய நம்பி களும் வாட்டமில்லாத பரமமான பொருளை அருளிச்செய்து, "இதை யெ வர்க்கும் நீவிர் சொல்லவேண்டா" என்று அருளிச்செய்தலும், இராமாநு சர் நம்பிகளை வணங்கி,

இங்கு அருளிச்செய்தது சரமசுலோகார்த்தம்.

வருந்தல்—எதிர்மறை வியங்கோள். நீத்து—நீ—பகுதி. **சார்ந்தனன்**— வினையெச்சமுற்று. இதுவும் அடுத்த செய்யுளும் ஒரு தொடர்.

75. (இ-ள்.) "அடியேன் கூரத்தாழ்வானுக்குச் சொல்லாமலிரேன்" என்று கூற, "அக்கூரத்தாழ்வான் இப்பொருளை அறிந்துகொள்ளும் தன் மையுடையவரேயாயினும் ஒரு வருஷம் சிசுரூஷைகொண்டு சொல்வீராக" என்று அருளிச்செய்ய, இதைத் தெரிந்துகொண்டு, பெருமான் எழுந்த ருளியிருக்கும் திருவரங்கத்துக்கு இராமாநுச முனிவர் எழுந்தருளலும், கூரத் தாழ்வானுகிய தலைவர், நிறைந்த கிருபையையுடைய யதிராசரைப் பணிந்து, "அடியேனுக்கு அந்தப் பொருளை அருளிச்செய்வீராக" என்று விண்ணப் பித்தனர்.

**வற்சனுமத்தன்**—வற்சனும் அத்தன், வற்சன் 36—வது செய்யுட் குறிப்பிற் காண்க. (**எதிராதன்**—எதி—யதி—சந்நியாசி) துறவிகளில் தலைவர், எதிராசர் என வழங்குவது மரபு.

76. (இ-ள்.) இராமாநுசரும் திருக்கோட்டியூர் நம்பிகள் அருளிச்செய்த படி யருளிச்செய்யவே, விளங்கும் அழகிய மலைபோன்ற தோள்களையு டைய கூரத்தாழ்வானும், நித்தியமான எம்பெருமானது ஸ்வரூபமென்னும்

அந்த அர்த்தத்தை யறிந்து, ஒருவருஷம் வருந்திச் செய்யும் சிசுருஷையி னும் ஒருமாசம் உபவாசமிருக்கும் தவம் சிறந்ததாகும் என்று சாஸ்திரங் கள் சொல்வதை யுணர்ந்து, கூரத்தாழ்வான் அவ்வாறே ஒருமாசம் உபவா சமிருக்க, இராமாநுசர் அவ்வர்த்தத்தை யுபதேசித்தனர்.

**நிலைமைப்பொருள்**—நித்தியமான பொருள், எம்பெருமான். **வடிவு**—ஸ்வரூபம்.

**77.** (இ-ள்.) முதலியாண்டானும் அந்தப் பொருளை விரும்ப, இராமா நுச முனிவரும் முன்பு எனக்கருளிச்செய்த திருக்கோட்டியூர் நம்பிகளது திருவடிகளை யடைந்தே கேட்பீராக வென்றுரைக்க, முதலியாண்டானும் திருக்கோட்டியூர் நம்பிகளது திருவடிகளைப் பணிந்து இதமாகும்படி ஆறு மாசமிருந்து அநுவர்த்திக்க, நம்பிகள் சிறிதும் கடாக்ஷிக்காமையினாலே, ''என்னையாளும் எண்ணுவதற்கரிய கலியாணகுணங்களையுடையீர்'' என்று ஒருதினம் வணங்குதலும், ஆசாரியரும் கடாக்ஷித்து,

**இதம்**—ஹிதம். இதுவும் அடுத்த செய்யுளும் குளகம்.

**78.** (இ-ள்.) ''புகழைத்தரும் வித்தை தனம் குலம் என்னும் இந்த முக்குறும்பையும் கடப்பதே சமமாகும்; திருத்தமுடைய அந்தத் தமமென் பது மனத்தை யடக்குவதாகும். ஆதலால் இவற்றை நீ நிவர்த்திப்பை யாயின் வருந்தாயாகி வருவாயாக'' என்ன, முதலியாண்டான் திருவரங்கத் துக் கெழுந்தருளி மாதுலரான இராமாநுசர் திருவடிகளை வணங்கியிருந்து, பின்னர்த் திருக்கோட்டியூர் நம்பிகள் திருக்குமாரத்தியான தேவகியார் புரு ஷகாரத்தால் நம்பிகளிடத்தில் விசேஷித்ததான அந்தச் சரமசுலோகார்த் தத்தைப் பெற்று யாரினு முயர்ந்தனர்.

இவ்வாறன்றி, குருபரம்பரா பிரபாவம் முதலியவைகளில் திருக்கோட் டியூர் நம்பிகள் முதலியாண்டானை நோக்கி, உமது முக்குறும்புங் கெடுமா யின் இராமாநுசரே உபதேசிப்பரென, அவ்வாறே முதலியாண்டான் இரா மாநுசரைச் சார்ந்து உபதேசம் பெற்றனரென்பது காணவருகிறது.

இதுவுமன்றி 74—வது செய்யுளின்படி திருக்கோட்டியூர் நம்பிகள் சரம சுலோகார்த்தம் அருளிச்செய்வதன்பொருட்டு இராமாநுசரை மீண்டும் வரு கவென நியமிக்க, அவ்வாறே இராமாநுசர் சென்று நம்பி திருமாளிகைப் புறத்தே ''உந்துமதகளிற்றன்'' என்னும் திருப்பாவைச் செய்யுளில், ''செந் தாமரைக்கையால் சீரார்வளையொலிப்ப வந்து திறவாய் மகிழ்ந்தேலோரெம் பாவாய்'' என்று அநுஸந்திக்குங் காலையில், நம்பிகள் திருக்குமாரத்தி, தேவ கிப்பிராட்டி என்பார், திருக்கதவைத் திறந்ததும் இராமாநுசர் அவளை நப் பின்னைப்பிராட்டி யென்றெண்ணித் தண்டன் ஸமர்ப்பித்தனர். அதைக் கேள்வியுற்ற நம்பிகள், ''உந்துமதகளிற்றன்—அநுஸந்தாநமோ'' என்றருளிச் செய்து, இராமாநுசருக்குச் சரமசுலோகார்த்த மருளிச்செய்தனராதலால், தேவகிப்பிராட்டியார் புருஷகாரமாக உபதேசிக்கப்பெற்றவர் இராமாநு சரேயென இராமாநுச திவ்யஸூரி சரிதையினால் தெரியவருதலுங் காண்க.

**விஞ்சை**—வித்யை என்பதன் மரூஉ. **வருந்தலை**—வினையெச்சமுற்று.

**79.** (இ-ள்.) யாவரினும் உயர்ந்த வைபவத்தையுடைய இராமாநுசரும், ஸ்ரீ ஆளவந்தாரது இரண்டு திருவடிகளை வணங்கி, மிகுந்த தவம் விளங்

கும் திருமாலையாண்டானிடத்தில் தமிழ் வேதத்தின் பொருள்களையெல்லா மறிந்து, துன்பந் தீர்ந்துயர்ந்த சிறப்புடைய திருவரங்கப் பெருமாளரைய ரிடத்தில் சங்கீதமாகிய கடலின் கரையைக் கண்டு, பூமியிலுள்ளோர் போற் றும்படி மாணாக்கர்களுக்கு வேதாந்தார்த்தங்கள் அருளிச்செய்துகொண்டு திருவரங்கத்தில் இன்பத்துடன் எழுந்தருளி யிருந்தனர்.

**தமிழ்மறை**—த்ராவிடவேதம், நாலாயிரப்பிரபந்தம். **கானமாங் கடற் கரைகாணு** என்றது, ஆழ்வார்கள் அருளிச்செயல்களைப் பண்ணில் இயைத் துப் பாடினதாம். **இனிது**—வினையுரிச்சொல்.

80. (இ-ள்.) இப்படி எழுந்தருளியிருக்கும்போது, வடக்குத் திசையிலி ருந்து ஒருவரும் ஒப்பில்லாதாராய் ஒற்றைத்தண்டம் தங்குதலான சிவந்த கையையுடைய சங்கரரென்னும் பெயரையுடைய ஒரு யதியானவர் திரு வரங்கத்துக்கு வந்து, சிறப்பையுடைய உபய வேதங்களையு முணர்ந்த இரா மாநுசரை "என்னுடனே நீ வாதிப்பாயாக" என்று கேட்டலும், அவர் வருவாயாக வென்று வாதிக்க அழைத்து, இருவரும் மதத்தில் மாறுபட்டுப் பதினேழு நாள்வரையில் நீங்காதவராகி,

**இறைகொளும்:**—(இறு—தங்கல்) தங்குதலான. **இருசீர்மறை**—உபயவே தம், வடமொழிவேதமும் தமிழ்வேதமும். **வாதி**—(வாதியாய்) முன்னிலை யேவல். **அறைபுகன்று** — அறைகூவி — பொர அழைத்து — வாதுக்கழைத்து. **ஆறிரண்டு**—மூன்றுவதனுருபும் பயனு முடன்றொக்க தொகை. ஆறாகிய இரண்டு எனப் பண்புத்தொகையுமாம். ஆறிரண்டு ஐந்து உம்மைத்தொகை (ஆறிரண்டும் ஐந்தும்—பதினேழு). அறை என்பதைச் சபதமெனக்கொ ண்டு, எதி தோற்பாராயின் இராமாநுசருக்குச் சிஷ்யராவதென்றும், இரா மாநுசர் தோற்பாராயின், கிரந்த சந்நியாசம் (படிப்பதும் மாணாக்கர்க்குபதே சிப்பதும் ஒழிப்பது) செய்வதென்றும் ஏற்படுத்திக்கொண்ட தெனினுமாம்.

81. (இ-ள்.) அழகுமிக்கிருக்கிற பெரிய திருவடிகளையுடைய அழகிய நரசிங்கனென்னுந் திருநாமமுடைய பெருமான் திருமுன்பே தருக்கஞ் செய்ய, அப்போது வெல்லுதற்கரிய தன்மையையுடையவராகச் சங்கரர் அதிகரித்துப்போகவே, இராமாநுசர் தளர்ந்து வாசனை கமழும் திருத்து ழாய் மாலையையணிந்த நரசிங்கப் பெருமானது திருவடிகளைத் துதித்தத னாலே, அவரது கனவில் நரசிங்கப்பெருமானும் சுருக்கமாயிருக்கும் மறை வாக்கிய மொன்றை யளித்தலும், இராமாநுசர் அதனாலே சங்கரரது வலி மையையெல்லாம் கெடுத்தனர்.

**சீதரன்**—ஸ்ரீதரன், இலக்குமியை மார்பில் தரித்திருப்பவன். **நரகரி**—நர ஹரி, நரசிங்கம். **வலி**—வாதபலம்.

82. (இ-ள்.) அப்போது சங்கரர் திகைத்து இராமாநுசமுனிவரது திரு வடித்தாமரைகளைத் தமது சிரசின்மீது தரித்துக்கொண்டு, "சிவந்த கண் களையுடைய பெருமானுக்குச் சமானமானவரே! என்னை அடிமைகொள் வீராக" என்று கூற, இராமாநுசர், முப்புரிநூலுடன் சிகையையும் மூன்று தண்டத்தையும் மங்களகரமாகிய வேதசாஸ்திர முறைமைப்படி அணியச் செய்து, அஷ்டாக்ஷரோபதேசஞ்செய்து, திருவுள்ள மகிழ்ச்சியினாலே அச் சங்கரர்க்கு அருளாளப்பெருமா ளெம்பெருமானார் என்று திருநாமமளித் தனர்.

**மறைநூல்**—பண்புத்தொகை. **அவ்விடத்து**—அப்பொழுது.

83. (இ-ள்.) இப்படி மூலமந்திரத்தின் உட்பொருளை யருளிச்செய்து அவருக்கு அடியவர்களில் முதன்மையு மளித்து மிகவும் மகிழ்ச்சியடைந்து எழுந்தருளியிருக்குங் காலத்தில், அநந்தாழ்வானும் எச்சானும் மெய்த் தவத்தி னொழுக்கமுடைய தொண்டனூர் நம்பியும் மருதூர் நம்பியும், மேற் றிசையினின்று, ஆலமரத்தடியி லமர்ந்த சிவபிரான் துதித்தருளும் திருவரங் கத்தில் எழுந்தருளியிருக்கும் இராமாநுசமுனிவரது திருவடிகளை யடைந் தார்கள்.

மூலமந்திரம்—மந்திர ரத்தினமான துவயம்.

84. (இ-ள்.) வந்த அவர்களை அருளாளப்பெருமா ளெம்பெருமானா ருக்கு அடிமையாகும்படி யளித்தனர். அவர்கள் சந்தோஷத்துடன் அவர் திருவடிகளைப் பணிந்து துதிக்க, அந்த உயர்ந்த தவத்தையுடைய அருளாளப் பெருமா ளெம்பெருமானாரும் (நமக்கும் ஆசாரியத்துவம் வருமாயின் ஸ்வாதந் திரியம் தலை யெடுக்குமேயென்று) பயந்து, ''பிறவித் துன்பத்தைக் கெடுக் கும் சீரையுடைய இராமாநுச முனிவரது திருவடிகளிடம் செல்லுங்கள்'' என்று கூறியருள, அவர்களும் அவ்விதமாகவே ஆசைப்பெருக்கத்தோடு இரண்டு திருவடிகளைத் துதிக்க, பெருமையையுடைய திருவரங்கத்தில் இராமாநுசரும் எழுந்தருளி யிருந்தனர்.

வெருவி-வெருவு-பகுதி. அகன்ம்-அகலும் என்னும் முற்றில் உகரம் தொ குத்தலாயிற்று. [அகல்—(உ)ம்]: ஆகவே லகரம், அடுத்த மகரத்துக்கு இனவெ ழுத்தாகத் திரிந்தது. இங்ஙனம் வருகின்ற இடங்களில் மகர மெய் தனக் குரிய மாத்திரை குறுகிவருதலின் மகரக்குறுக்கம் எனப் பெறும். இவர்வு—(இவர்—பகுதி) தொழிற்பண்புப்பெயர்.

85. (இ-ள்.) இப்படியிருக்குமவர் முதலிகளைக் கடாக்ஷித்து, ''எம் பெருமானெழுந்தருளிய திருமலைக்குப் போய் விருக்ஷங்கள் பொருந்திய திருநந்தன வனம் ஏற்படுத்தி, புஷ்ப கைங்கர்யம் பண்ணுவோர் யாவருள் ளார்'' என்று கேட்டருள; அநந்தாழ்வா னெழுந்து விருப்பத்துடன் இராமா நுசரது திருவடிகளைப் பணிந்து துதித்து விடைகொண்டு, திருவேங்கட மென்னும் திருநாமமுடைய திருமலையை யடைந்து, இராமாநுச முனி வரது திருநாமத்தாலே மலர்களையுடைய நந்தனவனத்தை அழகுபெறும்படி யுண்டாக்கினர்.

அநந்தாழ்வான்: இராமாநுசர், தமது மாணாக்கருக்குத் திருவாய்மொ ழிப் பொருளை அருளிச்செய்துவருகையில், ''சிந்து பூ மகிழுந் திருவேங் கடத்தெந்தை'' என்னும் பிரஸ்தாபத்தில், இராமாநுசர், ''திருவேங்கடத் தப்பனுக்குப் புஷ்பத்தில் அதிப்பிரியமாதலால் இங்குள்ளாரில் யாரேனு மொருவர் சென்று திருமாலை கைங்கரியம் செய்து வருவாருண்டோ'' எனக் கேட்டனர். சிலர், திருமலையில் குளிர் முதலியவைகட்குப் பயந்து பின்வாங்கினர். அநந்தாழ்வானென்போர் எழுந்து நின்று, அந்த நியமநத்தைத் தாம் தலைக்கட்டுவதாகச் சொல்லினர். இவர் ஆண்பிள்ளைத் தனத்துடன் எழுந்து நியமநங் கொண்டமையால் ''அநந்தாண்பிள்ளை'' எனச் சிறப்பித் துரைக்கப்பட்டார். பின்னர், இவர் தம் தேவிகளுடன் பிரயாணமாய்த் திருமலையை யடைந்து எரிக்கும் நந்தனவனத்துக்கும் தக்க

இடமொன்று ஏற்படுத்திக்கொண்டு, அங்கிருந்ததொரு மேட்டைச் சிதைத்து, கர்ப்பவதியாகிய தம் தேவிகளை மண் சுமக்க வைத்தனர். அவர் கர்ப்பவதியாதலால் மண்சுமந்து சென்று வந்து வருந்தினர். அக்காலை எம்பெருமான், ஒரு சிறுவனுருக் கொண்டுவந்து அவ்வம்மையார் ஏந்திச்செல்லும் மண் கூடையைத் தான் ஏந்திச்சென்று குறித்த இடத்தில் மண்ணைக் கொட்டிவிட்டுக் கூடையைக் கொண்டுவந்து கொடுத்தனன். அம்மையார், முன்பு தாழ்த்து வருவதினும் இருமுறை விரைந்து வந்தனர். ஆழ்வான், தம் தேவிகளை நோக்கி, முன்னையினும் இப்போது விரைந்து வருதல் என் என்று கேட்டனர். அம்மையார் ஒரு சிறு பிள்ளை சகாயத்தால் இங்ஙனம் வந்தேனென்று சொல்லினர். ஆழ்வான் கோபங்கொண்டு, "எனது ஆசாரியன் திவ்யாஜ்ஞையை நானே செய்து முடிக்கும் பேறெய்தாமல் இடையே தடைசெய்ய வந்தவனே! உன்னை முடித்துவிடுகிறேன்" என்று ஓடிச்சென்று, தம் கைக்கொட்டகையைச் சிறுவன் தலைமேலோச்சினர். சிறுவன் ஓடினன் ஆழ்வானும் பின்றொடர்ந்தனர். சிறுவன் ஒரு மரத்தின்மேல் ஏறிக்கொண்டனன். ஆழ்வானும் விடாதிருக்க, சிறுவன் மரத்தினின்றுங் குதித்துச் சந்நிதிக்குள் ளோடினன். ஆழ்வான் பின்றொடர்ந்து சென்று; அங்கு திருவேங்கடத்தப்பனன்றி, வேறொருவரில்லாதிருப்பதையும், அச்சிறுவன் றலையில் ஆழ்வான் கொட்டகைகொண்டு அடித்த இடத்தில் அப்பனுக்கு இரத்தம் வடிந்து வருவதையுங் கண்டு அப்பனுடைய சௌலப்பிய குணத்துக்கு மிகவும் ஈடுபட்டு, மீண்டு, ஏரியையும் நந்தனவனத்தையும் ஏற்படுத்தித் திருமாலை கைங்கரியம் நடத்திவந்தனர். இக்காலத்தும் சந்நிதிக்குத் தென்மேற்கே அவ்வேரியும் நந்தனவனமும் அதிரமணீயமாய் விளங்கிவருகின்றன. அவர் திருமாலை கட்டிக்கொண்டிருந்த இடமும் சந்நிதிக்கு வடகிழக்கு மூலையில் அதிபரிசுத்த தலமாகப் பாராட்டப்பட்டுத் திருமாலை கைங்கரியமும் நடந்தேறுகின்றன. அங்கு ஆழ்வான் எழுந்தருளியிருந்து மாலை கட்டிக்கொண்டிருந்த மரப்பலகை யொன்று பலராற் சேவிக்கும்படியிருக்கிறது. ஒருநாள் ஆழ்வான் திருமாலை புனைந்துகொண்டிருக்கும்போது, அப்பன், இவரை வருமாறு நியமநமிட்டருளினன். இவர் அப்போது போகாமே யிருந்துவிட்டுத் திருமாலை முடிந்ததும் சமர்ப்பிக்கச் சென்றனர். அப்பன் இவரை நோக்கி, "நாம் நியமநமிட்டபோது ஏன் வந்திலீ" ரென்ன, ஆழ்வான், "புஷ்பங்கள் மலர்ந்து வாசனை வெளியேறுமுன்னே திருவடியிற் சமர்ப்பிக்கவேண்டாவோ? ஆசார்ய திவ்யாஜ்ஞையைத் தடைசெய்யும் தேவரீர் நியமநம் யாதுக்கோ" என்றனர். அப்பன் "நமது நியமநத்தை மறுத்த உம்மை இம்மலையைவிட்டுப் போம்படி சொன்னாலோ" என்ன, ஆழ்வான், "பிரான் சென்று சேர் திருவேங்கடமாமலை" என ஆழ்வார் அருளிச்செய்திருத்தலால், அடியேனுக்குச் சில நாட்களுக்கு முன்னே தேவர் இத்திருமலைக்கு எழுந்தருளினீராகவேண்டும். இம்மலை சேஷாசலமன்றோ? சேஷர், அடியேனுக்கு நியமநமிட்டருளின ஆசாரியரன்றோ? ஆனபோது திருமலையில் சம்பந்த உறைப்பு தேவரீரைக்காட்டிலும் அடியேனுக்கு விசேஷமேயாம்" என்றனராம். மற்றொருநாள் ஆழ்வானை ஒரு சர்ப்பந் தீண்ட, இவர் நீராடித் திருமாலை புனையலுற்றனர். சிலர் சர்ப்பவிஷத்துக்குப் பரிகாரமேதேனுஞ் செய்யலாகாதோவென்ன, இவர், "கடித்த பாம்பு வலிதாகில் விரஜையில் நீராடி, பரமபத நாதனுக்குக் கைங்கரியம் செய்யச்

சித்திக்கிறது. கடியுண்ட பாம்பு வலிதாகில், திருக்கோனேரியில் நீராடி, திருவேங்கடத்தப்பனுக்குக் கைங்கரியம் செய்யச் சித்திக்கிறது. இரண்டிடத்திலும் கைங்கர்யாநுபவத்துக்குக் குறைவில்லையே" என்றனராம்.

86. (இ-ள்.) சொல்லுவதற்கரிய பெருமைமிகுந்த இராமாநுச முனிவரும், பலநாட்கள் சென்றபிறகு முன்பு கஜேந்திராழ்வானை ரக்ஷித்தருளிய திருவரங்கநாதனைப் பணிந்து அப்பெருமானிடத்து விடைபெற்றுக்கொண்டு, முதலிகள் தம்மைச் சூழும்படி திருவரங்க நகரத்தைவிட்டு, நீண்ட திருக்காவேரிநதியைக் கடந்து, பெருமான் நித்தியவாசஞ்செய்யும் அநேகந் திருப்பதிகளைச் சேவித்துக்கொண்டு நீங்கி, தாமரைபூத்த உந்தியையுடைய பெருமானெழுந்தருளிய கருடாசலமுடைய திருவேங்கடமென்னுந் திருப்பதியை யடைந்தனர்.

இராமாநுசர் திருவேங்கடயாத்திரை செய்கையில் இடையில் வழி காட்டிய ஏற்றமிறைப்பானொருவனைத் தெண்டனிட்டனரெனக் குருபரம்பரையும் இராமாநுச திவ்யஸூரி சரிதையும் புகழ்ந்துரைக்கும்

**கருடப்பொருப்பு**—ரிஷபாத்திரி, கருடாத்திரி, அஞ்சநாத்திரி, சேஷாத்திரி, நாராயணாத்திரி, நரசிம்மாத்திரி, வேங்கடாத்திரி என்னும் ஏழுமலைகளிலொன்று. இவ்வேழும் வேறுவேறாகத் திருப்பதியிலுள்ளன. இவை ஆங்காங்குள்ள மண்டபங்களாற் றெளியப்படுமென்பர். இதனால் திருமலை ஏழுமலையென்றும், சுவாமி, ஏழுமலையான் என்றும் வழங்குதல் காண்க. **மிதலை**—கொப்பூழ். நளினமிதலை—தாமரைபூத்த உந்தி, பதுமநாபி. நளினமிதலைமால்—பதுமநாபன்.

87. (இ-ள்.) முற்காலத்தில் திருமங்கையாழ்வார் திருமலையில் ஏறாதமுறைமையினாலே, தாமும் அவ்விதமாகவே (திருமலையேறாமல்) பக்தியமர்ந்த திருவுள்ளத்துடன் எழுந்தருளியிருத்தலும், அநந்தாழ்வான் முதலிய அனைவரும் வந்து, "பொன்பொருந்திய இம்மலையில் நீவிர் ஏறியருளாவிடில் இப்பூமியிலுள்ளவர்கள் எவரும் வந்து ஏறிச்சென்று பெருமானைச் சேவிக்கமாட்டார்கள்" என்பதைச் சொல்ல, இராமாநுசர், மாணாக்கர்களுந் தாமுமாகத் திருமலையில் ஏறுவதாக இசைந்தனர்.

**பரகாலன்**-திருமங்கையாழ்வார், ஆழ்வார்கள் பதின்மரிலொருவர். இவர், சார்ங்காம்சமாய்த் திருக்குறையலூரில் அவதரித்து, கல்வியினும் ஏனைய வித்தையினும் வல்லராயிருந்தனர். இவரைச் சோழபூபதி ஒரு சிற்றரசனாக்கி வைத்தனன். குமுதவல்லியாரை மணந்து அவர் விருப்பின்படி நாடோறும் பாகவதர்கள் ஆயிரந் திருநாமங்களுக்கு ஆராதநஞ்செய்து கைப்பொருளும் அரசிறைப்பொருளும் செலவழித்தனர். கேட்ட அரசன், கோபித்து, இவரைச் சிறை செய்யுமாறு தன் சேனைகளை யனுப்பியும், தானே வந்தும் யுத்தஞ் செய்ய, இவர், அவர் யாவரையும் தோற்கடித்தனர். அரசன் இவரை வஞ்சனையாற் சிறை செய்ய, பெருமான் அளித்த பொருளால் சிறையினின்று மீண்டு, களவு செய்தும் வழிபறித்தும் பாகவதாராதநஞ் செய்துவந்தனர். ஒருநாள் எம்பெருமான் மணக்கோலங்கொண்டு, பெருந்திரவியத்துடன் வருகையில், இவர், பெருமானை வழிமறித்து, பறித்தபொருளை முடிந்து எடுக்கப் புக, அது மேலெழாமலிருந்ததுகண்டு, பெருமானை நோக்கி, "நீ மந்திரத்தால் இவ்வாறு செய்தனை. அம்மந்திரத்தை இப்போது சொல்லுக" வென்று வாளைக்கொண்

டோச்சினர். பெருமான், இவர் திருச்செவியில் திருமந்திரத்தை யுபதேசித்தனர். உடனே இவருக்கு ஞானோதயமாய், "வாடினேன் வாடி வருந்தினேன் மனத்தாற் பெருந்துய ரிடும்பையிற் பிறந்து, கூடினேன் கூடி யிளையவர்தம்மோ டவர்தருங் கலவியேகருதி, ஓடினே னோடி யுய்வதோர் பொருளா லுணர்வெனும் பெரும்பதந் தெரிந்து, நாடினே னாடி நான்கண்டுகொண்டே னாராயணா வென்னு நாமம்" என்றாரம்பித்து, பத்துப் பாடல் பாடி, பல திருப்பதிகளினுஞ் சென்று மங்களாசாசநஞ்செய்தனர். பின்னர், நாகப்பட்டினத்தில் பொன்னாற் சமைந்த பௌத்த விக்கிரகத்தைக் களவுசெய்தும், திருவாலூரில் கமலாலயத் தடாகத்துக்குப் படிகளமைத்தும், சம்பாதித்த பொருளைக்கொண்டு திருவரங்கத்தில் திருமதில் கைங்கரியமும் திருப்பணி கைங்கரியமும் நடாத்தினர். முடிவில் திருக்குறுங்குடியில் யோகத்தி லெழுந்தருளியிருந்து திருநாட்டுக் கெழுந்தருளினர். இவர் அருளிச்செய்தவை-பெரிய திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருவெழுகூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல் என்னும் ஆறு பிரபந்தங்களாம். இவை நான்கு வேதங்களுக்கு ஆறங்கங்கள்போல நான்கு வேதஸாரமாக நம்மாழ்வா ரருளிச்செய்த திருவிருத்தம், பெரிய திருவந்தாதி, திருவாசிரியம், திருவாய்மொழி என்னும் நான்கு பிரபந்தங்களுக்கு ஆறங்கங்களாயிருப்பவை. ("மாறன்பணித்த தமிழ்மறைக்கு மங்கையர்கோன் ஆறங்கங்கூற"—உபதேசரத்தினமாலை.)

இங்கு ஆழ்வார்களில் ஒருவரைக் கூறவே எனையோரையுங் கொள்க. **போதார்**—போ—(புகு என்பதன் மரூஉ) பகுதி. **ஏறுவான்**—ஏற.

88. (இ-ள்.) தெளிந்த தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து, வெண்மையான திருமண்ணைத் தரித்து, கெடுதலில்லாத சேஷகிரியான திருமலையின் அடிவாரத்தில் திருப்புளியை வணங்கி, எம்பெருமானது மேலான பரமபதத்திற்கு ஏறுவதாகத் திருவுள்ளத்திற்கொண்டு, வாசனையுடைய குளிர்ந்த மலரிலுள்ள தேனைப்பருகி உழை குரல் விளரி கைக்கிளை முதலிய இசைகளின் நலத்தின்படி வண்டுகள் ஒலிக்கும் வளமிகுந்த திருமலையிலேறியருளு மிராமாநுசர், பரிவட்டப்பாறையைச் சேர்ந்தனர்.

**தவளம்** — தாவள்யம், வெண்மை. கொடு—கொ(ண்)டு — தொகுத்தல். **மேற்பதம்**—பரமபதம்.

89. (இ-ள்.) பெருமானும் திருமலைநம்பியை நோக்கி "இராமாநுசரை எதிர்கொண்டு செல்லுவீராக" என்று அருளப்பாடிட, வேதம்போலத் தூய்மையுடைய நம்பியும் திருத்துழாய் மாலையைத் திருக்கையிற்கொண்டு எதிரே வரக்கண்டு, அவரது திருவடிகளைத் தொழுது, "நேசத்தையுடைய பூமியிலுள்ளோர்க்கு, ஆசாரியரான தேவரீர் சிறியவர்களைப்போல் வருதல் நீதியாகுமோ" என்று இராமாநுசர் சொல்லுதலும், நம்பியும் "(இவ்விடத்தில்) என்னினும் சிறியவர்கள் இல்லை" என்று சொன்னவளவில், இராமாநுசர் அதிசயித்து அவரோடு நடந்தனர்.

துளவமாலிகையென்றதனால் தீர்த்தப்பிரசாதங்களுங்கொள்க. **மாலிகை**—மாலிகா, மாலை. **ஆயவன்**—ஆய+அவன்—அங்ஙனமாகிய அவன்.

90. (இ-ள்.) இந்தத் திருப்பதியில் நித்தியவாசஞ்செய்யும் எம்பெருமானது அடியார்களுடைய பெருமையையெல்லாம், முத்துக்கள் வரிசையாக

வைத்தனவே என்னலான தந்தபந்தியையுடைய அலர்மேன்மங்கைப் பிராட்டியார் ''அகலகில்லேனிறையும்'' என்றிருக்கும் திருமார்பினிடத்துப் பெருமை பொருந்திய திருத்துழாய்மாலையையுடைய பெருமானல்லாத பிறர் அறியாரென்றுகொண்டு, இலைகளையுடைய காடு சூழ்ந்த கல்வேலியின் பக்கத்தைச் சேர்ந்தனர்.

இருத்திய—பலவின்பால் வினையாலணையும் பெயர். 'முத்தே இருத்திய அன்னநகை' என ஏகாரத்தை முத்தோடு கூட்டிக்கொள்வதும் பொருந்தும்.

91. (இ-ள்.) விளங்கும் கல்வேலிவரையில் செல்லுதலும், துளவமாலை பிரகாசிக்கும் திருத்தோள்களையுடைய திருவேங்கடத் தெம்பெருமான், சேனைமுதலியாரை எதிராக வரவிடுத்தருள, நன்மை மிகுந்த இராமாநுச முனிவரும் அந்தச் சேனைமுதலியாரைப் பணிந்து பக்தியோடு வலஞ்செய்து உயர்ந்த வைகுண்டக் கோபுரவாசலை யடைந்தனர்.

சேறலும்—உம்மீற்று வினையெச்சம். சேனைநாதன்—நித்தியசூரி பரிவாரங்களுக்குத் தலைவர். ''ஆளிலமாரரங்கேசர் சேவைக்கணுகுந்தொறுங், கோளில் திரளைவிலக்கும் பிரம்பின் கொனைபடலால், தோளிலடித்தழும்புண்டு சுரர்க்கச்சுரர் தொழலால், தாளில் முடித்தழும்புண்டு நஞ்சேனைத்தலைவருக்கே'' என்னும் திருவரங்கத்துமாலைச் செய்யுளால் எம்பெருமான் சந்நிதியில் இவர்க்குள்ள தலைமை விளங்கும்.

92. (இ-ள்.) ஒப்பற்ற ஸ்வாமி புஷ்கரிணி தீர்த்தத்திற் படிந்து, தமது நியமங்களை முடித்து விசாலமான திருவீதிகள் நான்கையும் வலம் வந்து, மலர்களையுடைய அழகிய சோலைகள், நிறமுடைய மணிமயமான மடங்கள், அழகிய பொன்மயமான மாளிகைகள், தாமரைமலர்கள் மிகமலர்ந்த சுனைகள், பூமண்டபங்கள், மலர்கள் புஷ்பிக்கும் அழகிய மரங்கள் ஆகிய இவைகளையெல்லாம்

இதுவும் அடுத்த செய்யுளுங் குளகம். முற்றி—முற்று—பகுதி, இ—இறந்தகால வினையெச்ச விகுதி. கோனேரி—ஸ்வாமி புஷ்கரிணி. கோன்—ஸ்வாமி, ஏரி—புஷ்கரிணி. சந்நிதிக்கு வடபுறத்தேயிருக்குந் தடாகம். நியமம்—அநுஷ்டிக்கவேண்டிய கிரமங்கள்.

93. (இ-ள்.) சேவித்துக்கொண்டு கோனேரியில் வாழும் நீர்ப்பறவைகளின் ஓசையையும் சோலைகளில் வண்டுகள் சத்திக்கும் கீதச்சுவையையும் திருச்செவிசார்த்தி, சருவவியாபகனான பெருமான் நித்திய வாசஞ்செய்யும் பூலோக வைகுண்ட மிதுவாகுமென்று மிகவும் ஆநந்தங்கொண்டு திருவுள்ளங்களித்து, சிவந்த பொன்மயமான கோபுரவாசலைச் சேர்ந்தனர்.

மடுத்துமாந்தி—ஒருபொருட் பன்மொழி. மிகக்கேட்டு என்பது பொருள். வாயின்மொழிலைச் செவியின்மேலேற்றிச் சொல்லப்பட்டது.

94. (இ-ள்.) தமது கோரைப்பல்லாலே பூமியைக்கொண்ட ஞானப்பிரானது தாமரைமலர்போன்ற திருவடிகளை நிறைந்த விருப்பத்துடன் வணங்கித் துதித்து, தனது நிழல் திரும்பாத மேன்மையையுடைய திருப்புளியையும் கருடஸ்தம்பத்தையும் இரண்டு சிவந்த திருக்கைகளைக் கூப்பி, மலையையொத்த ஒப்பற்ற திண்ணிய திருத்தோள்கள் பூமியைத் தொடும்படி பணிந்துபோற்றி,

4 ɒ ں
ɒ ) 75 )

**மருப்புமண்கோண்ட ஞானப்பிரான்**—இவர் சந்நிதி ஸ்வாமி புஷ்கரிணிக்கு வடமேற்கிலிருப்பது. **மருப்பில் மண்கோண்டது**-ஒரு கற்பத்தில் பாதாளத்திலழுந்தி அண்டச்சுவரில் ஒட்டிக்கொண்ட பூமியை சுவேத வராகவுருக்கொண்டு சென்று தனது கோரைப்பற்களாற் பூமியைக் குத்தி யேந்திவந்ததாம். இக்கற்பம்-சுவேத வராக கற்பமெனப்படும். இதனை ஸ்ரீ விஷ்ணு புராணத்தில் விரிவாயுணர்க. **ஞானப்பிரான்**--என்றது பூமிதேவிக்கு ஞானமார்க்கத்தை யுபதேசித்ததனால். **ஆன்ற**—ஆல் (அகல்) பகுதி; மிக்க, நிறைந்த என்பதாம். இதுவும் அடுத்த செய்யுளும் குளகம்.

95. (இ-ள்.) கெடாத மெய்த்தவத்தையுடைய இராமாநுசர், அன்போடு சண்பகாவாணத்தைச் சுற்றிவந்து, அழகிய பொன் மயமான அவாவறச் சூழ்ந்தான் கோபுரவாசலை யடைந்து, பூரண சந்திரோதயகாலத்தில் உயர்ந்தோங்கிய சமுத்திரம்போன்ற சந்தோஷத்துடன் கெடாத பிரகாசமுடைய ரத்தினக்கூட்டத்தாலும் பொன்னாலும் செய்தமைந்த திருக்கோயிலிற் பிரவேசித்தனர்.

**சூழ்போந்து**—சூழ்போ—பகுதி. அணாமி—அண்மு—பகுதி.

96. (இ-ள்.) தாமரைமலரில் வீற்றிருக்கும் மான்போன்ற பெரிய பிராட்டியாருக் கிருப்பிடமாய் ஆநந்த நிலயமென்னும் பெயரதாய் நல்ல பொற்சோதியுடன் நிர்மலமான விமாநத்தைத் தரிசித்தும் தேவர்கள் விரும்பிப் போற்றும் பரிசுத்தமுடைய அழகிய பெருமைமிக்க மண்டபம் முதலியவைகளைச் சேவித்தும் விருப்பத்துடன் பெருமை பொருந்திய போரையுடைய நரசிங்கப்பெருமான் திருவடிகளைப் பெருமைமிக்க இராமாநுசர் வணங்கினர்.

இரணியனோடு பொருது கொன்றமையால் '**சமர**மா நரசிங்கன்' என்றார். **நரசிங்கன்**—நர (மனித) வுருவமும், சிங்கவுருவமும் ஒருருவில் அமையப்பெற்ற பெருமான்.

97. (இ-ள்.) குதிரைநம்பி முதலாக அங்கிருக்கும் வாகனங்களைத் தொழுது, முதன்மைபெற்ற சேனைமுதலியார், பெரிய திருவடி, ஆஞ்சநேயர் ஆகிய தியானபரர் மூவரையும், இன்னுமுள்ள மற்றவர்களோடும், திருக்கைகளாகிய அழகிய தாமரையைக் கூப்பி வணங்கி, எழுலகங்களையும் கடந்ததான வலிமை மிகுந்த நரகாசுரனை வென்ற திருவேங்கடமுடையானது செம்பொன் மயமான அழகிய திருக்கோயிலுக்கு வந்து சேர்ந்து வணங்கித் துதிக்கலாயினர்.

**அங்கண்**—அக்கண் என்பதன் மெலித்தல். **நரகாரி** (நரக+அரி)—நரகன்—நரகாசுரன், அரி—பகைவன், நரகாசுரனை வென்றவன்.

98. (இ-ள்.) ''திருவுந்தியாகிய தடத்தில் பூத்த ஒரு தாமரையில் பிரமனை ஒரு புத்திரனை யாவருக்கும் முற்படச் சிருஷ்டித்து, முற்பட்டுண்டான பதினாலுலகங்களும் நிலைபெறும்படி சராசரங்களை யுண்டாக்க முயலுவாய்; உன்னைத் துதித்துநிற்கும் அப்பிரமனால் சிவனாகிய ஒரு புத்திரனை உண்டாகச்செய்து, முன்னுண்டான சராசரங்களையெல்லாம் சிந்தனை செய்து அழிப்பாய்; உன்னுடைய கிருபையினாலே ரக்ஷிப்பாய். இவைகளைச் செய்யும் வல்லமையுடையவனே! இந்தத் திறமை மிக நன்றேயாகும்.

**மற்று**—அசை. **நன்று நன்று**—உவகையால் வந்த அடுக்கு.

99. (இ-ள்.) "உனது திருவடியில் உண்டான நீர்மயமான கங்கை யானது, பூமியின்மீ திறங்கி, பிறவியாகிய சமுத்திரத்தில் ஆன்மாக்கள் எப்போதும் அமிழாதவிதமாக உயர்ந்த மோக்ஷத்தைக் கொடுக்கும். கீர்த்தி மிகுந்த வேதாந்தம் அறியாததான உனது நிலையை விளங்கும்படி யாவர் அறிவார்கள்? பூதங்களாலுண்டான வடிவுகளாய் அவைகளல்லவாய் அவை களில் கூடாமல் நின்று கூடியிருக்குமவனே!

வேதந்தினரந்தம்—வேதாந்தம், உபநிஷதம். 'பூதத்தியைந்தவடிவாய்' என்றது, பெருமான், எல்லாப்பொருளிலும் அந்தர்யாமியாய் நிறைந்திருத் தலால், ஒற்றுமை நயத்தால் ஒன்றென்றுரைத்தவாறும். 'அகன்று' என் றது, ஸ்வரூப ஸ்வபாவங்களால் பிரிந்திருக்கும் வேற்றுமை நயத்தால் வேறு என்றுரைத்தவாறும். தொல்காப்பியம், நூன்மரபு, "ஔகாரவிறுவாய்" என்னுஞ் சூத்திரத்துரையில், "இறைவன் ஒன்றேயாய் நிற்குந்தன்மையும், பல்லுயிர்க்குந் தானேயாய் அவற்றினளவாய் நிற்குந்தன்மையும்" என நச் சினார்க்கினியர் கூறுதல் காண்க. 'புணராது நின்று புணர்வாய்' என்றதை "தோய்ந்துந் தோய்விலன்" என நம்மாழ்வாரும், "பற்றுகபற்றற்றான்" என் னுந் திருக்குறளினுரையில் "எல்லாப் பொருளையும் பற்றிநின்றே பற்றற்ற இறைவன்" எனப் பரிமேலழகரும் பணித்ததனாலுணர்க.

100. (இ-ள்.) "குறைவொன்றுமில்லாத நெடியவனே! திருவரங்க நக ரத்தில் வாழும் முகுந்தனே! திருவடிகளோரிரண்டும், திருத்தொடைகளும், பொன்னாலான அழகிய ஆடையினழகும், பூமியிலுள்ளோர் சொல்லும் அண்டங்கள் பலவற்றைப் பெற்று அழகு விருத்தியாகும் திருவுந்தியாகிய மலரும், ஒரு கொடியைப்போன்ற இடையையுடைய அலர்மேன் மங்கைத் தாயார் நித்திய வாசஞ்செய்யும் திருமார்பும், ஒளியுடன் நிறைவுற்ற திரு மேனியும்,

படி—இடவாகு பெயர். அண்டமது—அது—சாரியை. நிகரா நிறைந்த வடிவு—தனக்குத்தானே நிகராக நிறைந்த வடிவு. இதுவும் அடுத்த செய் யுளும் ஒரு தொடர்.

101. (இ-ள்.) "சேவித்தேன்; நான் செய்த கனமான பாதகங்களை நீக்கு வாயென்னும் ஆசை மிகுதியே கொண்டேன், இறந்து பிறவாத தன்மை கெடாத வரத்தை யளிப்பாயாக. குளிர்ந்த தேனையுடைய மாலையானது திருத்துழாயாக வுகந்த மலைபோன்றவனே! உலகங்களென்று சொல்லும் நீரையுண்டு மறுபடியும் உமிழ்ந்த மேகம்போன்றவனே! பிறவிகள் சம்ப வித்து ஒழியாமல் சுபாவத்திலேயே ஒழிந்த காரணபூதனே!"

கண்டேன்—முன் பாட்டில் சொல்லிய 'அடியோரிரண்டு' முதலியன கண்டேன் என்க. கவர்வு—கவர்தல்—ஆசைப்பெருக்கம். மூதல்—பண்பாகு பெயர்.

102. (இ-ள்.) என்று பிரீதியோடு சொல்லித் துதித்து, ஸ்வரத்தை யுடைய வேதத்துக்கும் நினைக்கவும் சொல்லவும் இசையாமல் நின்றவனை பெருமானிருக்கும் உயர்ந்த திருவேங்கடமலையை வேறொன்றுக்கு ஒப்பாக நினைப்பின், இப்பூமியில் எவையும் பொருந்தாதென்று சந்தோஷமிகுந்த ஞான வலிமையையுடைய இராமாநுசர், ஒருபக்கத்தே மநநசீலர்கள் தமது

திருவடிகளைத் துதித்துக்கொண்டிருக்கும்படி நதிகளி லுயர்வாகத் தோன்றிய பெருமை மிகுந்த,

**இசையா** (நின்றான்). இசையா(து)–ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். இதுவும் அடுத்த மூன்று செய்யுளும் ஒரு தொடர்.

103. (இ-ள்.) ஆகாசகங்கையோடு பாவநாசம் இவைகளில் அன்போடு தீர்த்தமாடி, அரிய நான்கு ஏகாந்தியன்பர்கள் எதித்தலைவராகும் இருவரையும் ஏற்படுத்திவைத்து, ஒப்பில்லாத ஸ்ரீநிவாசன் இன்பமுறும்படி திருமாலை திருவிளக்கெரிக்கை பெரிய திருவாராதநம் மற்று மேவற்றையும், சங்கும் சக்கரமும் நிலைபெற்ற திருத்தோள்களையுடையராய் ஞானமுடைய யோகியராகிய இராமாநுசர் பிரீதியோடு நன்மையாகச் செய்துவைத்து,

**ஆகாயகங்கை, பாவநாசம்** இரண்டும் திருமலையிலுள்ள தீர்த்த விசேஷங்கள். **ஏகாந்தியன்பர்**–திருமலையில் ஸ்ரீநிவாசப் பெருமானுடைய அகில கைங்கரியங்களிலும் கூடி நடத்துவோர்: வெள்ளாடை யுடுத்து அதன் மீது ஒற்றைக்காவி யுடை யுடுத்திருப்பது இவர்கட் கறிகுறியாம். **எதியீசராதும் இருவர்**–பெரிய ஜீயர், சிறிய ஜீயர் எனப்பட்டு எல்லாக் கைங்கரியங்களிலுந் தலைமை பெற்றிருப்போர். **மாகாந்தன்**–(மா–இலக்குமி) இலக்குமி கணவன், ஸ்ரீநிவாசன்.

104. (இ-ள்.) அந்நாட்டையாளும் மன்னன் வந்து வணங்குதலும், அம்மன்னனுக்கு ஆசீர்வாதமொன்றைச் சந்தோஷத்தோடு பலமுறையு மருளிச்செய்து, அவனிடம் வளமிகுந்த ஒரு ஊரைப்பெற்று, அங்கு, விளங்கும் திருவாழி திருச்சங்குகளைத் திருத்தோள்களிலுடையாரான பாகவதர்கள் சோர்வடையாமல் இன்பமுறும்படி, கணக்கில்லாமல் அபிவிர்த்தியாகும் கலியாணகுணங்களையுடைய இராமாநுசர் பிரீதியோடு அவர்கட்கு அளித்து பெருமானது திருவடிகளை வணங்கி,

**வணங்கலோடும்**–வினையெச்சம்.

105. (இ-ள்.) விடைபெற்றுக்கொண்டு, தமக்குத் தொண்டுபுரியும் அன்பர்கள் தம்மைச் சூழும்படி மிகுந்த சீலத்தையுடைய திருமலை நம்பியுடனே பிரயாணமாகி, உயர்ச்சியையுடைய திருமலையில் நின்றிழிந்து, எல்லா நலங்களையுமுடைய திருவநந்தாழ்வான்மீது அறிதுயில்கொண்டு, செந்தாமரை மலரிலிருக்கும் மடப்பத்தையுடைய பெரிய பிராட்டியார் வளமிகுந்த பூமிதேவியார் ஆகிய இருவர் பக்கத்திலிருக்க, மாலையைப்பூண்ட மேகமென்று சொல்லும்படி, கிடந்த திருக்கோலமாயிருக்கும் திருத்துழாய் மாலையையணிந்த கோவிந்தராசப் பெருமானை வந்து தொழுதனர்.

**கண்படை**–கண்படு–பகுதி. தொழிற்பெயர்.

106. (இ-ள்.) தேவலோகத்திலிருக்கும் தேவர்கள் வந்து வணங்கும் மேன்மையுண்டாவதாகத் திருமலைநம்பிகள் அருளிச்செய்யும் ஸ்ரீமத் வான்மீகி ராமாயண காலக்ஷேபத்தை விரும்பிக் கேட்டு, அவரது இரண்டு திருவடிகளையும் விரும்பி, மிகுந்த பெருமையையுடைய யோகஞ்செய்த அறிவுடையோர்களும் தேவர்களும் தொழும்படி அறிதுயிலமரும் குளிர்ந்து

கறுத்த மேகம்போன்ற பெருமானது கிழைத்திருப்பதியில் வாசஞ்செய்யுங் காலத்தில்,

**வான்மீகம்**—கருத்தாவா லெய்திய பெயர். வான்மீக முனிவர் புற்றி னின்று தோன்றியபடியால் இப்பெய ரெய்தினர். வன்மீகம்—புற்று. இது வும் அடுத்த மூன்று செய்யுளும் ஒரு தொடர்.

107. (இ-ள்.) ஒப்பின்றி யுயர்ந்த நான்கு வேதங்களை யுணர்ந்தோரும் அரசர்களும் மற்றவர்களும் வணங்கித் துதிக்கும் பழமையான சீரையுடைய திருமலை நம்பிகட்கு முதன் மாணுக்கரும் யாவரினுஞ் சிறந்த மேலோருமாய் விர்த்தியாகுங் கீர்த்தியையுடைய எம்பாரென்று உலகத்திலுள்ளோர் துதிக் கும் கோவிந்தப் பெருமாளென்பவர், ஒருதினம் அரிய மணிகளிழைத்த கட்டிலின்மீதுள்ள படுக்கையைத் திருமலைநம்பிகள் திருக்கண் வளர்வதற்கு அலங்கரித்து,

**எம்பார்** என்போர், இச்சருக்கம் 8—வது செய்யுளுரையிற் குறிக் கப்பட்ட கோவிந்தப்பட்டராம். இவர் உள்ளங்கைகொணர்ந்த நயினுரெ னப் பெயரேற்று காளத்தியிலிருக்கையில், திருமலைநம்பிகள் சென்று, அவர் கேட்ட வினுக்களுக்குத் தக்க விடையளித்து அவரைத் தமக்கு மாணுக்க ராக்கிக்கொண்டனர்.

**மஞ்சம்**—கட்டில். **கண்வளர்தல்**—நித்திரை செய்தல்.

108. (இ-ள்.) நினைப்பதற்கரிய பெரிய பெருமையையுடைய நம்பிக ளது திருமேனியில் உறுத்தாதபடியை அறியுமாறு முன்னர் அப்படுக்கை யில் தாம் படுக்க, அதனைப் பெருமையையுடைய இராமாநுச முனிவர் கண்டு, இப்படிப்பட்டதொரு வழக்கம் இவர் செய்வதேயென்று நம்பிக்கு விண்ணப்பித்தலும், நம்பிகளும், கோவிந்தப்பெருமாளை வருவீராகவென்று அழைத்துக் கடாக்ஷித்து,

**உறுத்நாது**—உறுத்தாமை—எதிர்மறைத் தொழிற்பெயர். உறுத்தாதது எனச் சாரியைபெற்று வழங்கும். **ஓர்வான்**—வினையெச்சம்.

109. (இ-ள்.) "இன்றையதினம் நமது படுக்கையின்மீது நீவிர் துயின் றீர் என்றனர்; நீவிர் செய்த இந்தத் தீமைக்காக அடையும் கதியாது" என்று கேட்க, அவரும் "நரகம்" என்ன, நம்பிகள், "அதனை யுணர்ந்துவைத்தும் அப்படிச்செய்தகாரணம்சொல்வீராக" என்ன, "நன்மையைத்தரும் தேவரீர் படுக்கையுறுத்தாமல் திருக்கண் வளர ஒப்பற்ற நன்மையை யடையின், அடி யேன் போய் நரகத்தில் அழுந்தினும், அதுவும் மிகவும் சிறந்ததே" என்றனர்.

**ஒன்று**—வினைத்தொகை வினை. **தளிமம்**—மக்கட்படுக்கை, மெத்தை. **அழுந்துகின்**—அழுந்து—பகுதி, கு-சாரியை, இன்—வினையெச்ச விகுதி, எதிர்காலம்.

110. (இ-ள்.) என்று உரைத்த கோவிந்தப்பெருமாளை இராமாநுசரென் னுந் திருநாமமுடைய யதியும் மிகுந்த மனமகிழ்ச்சியோடு கடாக்ஷித்து, இவரையொத்த பெருமையுடையோர் வேறில்லையென்று தமது திரு வுள்ளத்திற்கொண்டு, ஒருதினம் திருமலை நம்பிகளது திருவடிகளை வணங்கி,

பெருமான் திருவநந்தாழ்வான்மீது அறிதுயிலமரும் திருவரங்கத் திருப்ப திக்குப் போக விடைதருவீராக வென்னலும், நம்பிகள் பிரீதியோடு கடா க்ஷித்து,

**பனகம்**—ப(ன்)னகம், பாம்பு, திருவநந்தாழ்வான்.

111. (இ-ள்.) உமக்கு அருமையான பொருள் என்னிடமுள்ளதென்று கொடுப்பதற்கு யான் இங்கு ஒன்றுங் கண்டிலேனே யென்று திருவுள் ளத்திற் கருணையோடு உபசாரஞ்சொல்லவே, இராமாநுசரென்னுந் திரு நாமமுடைய உதாரரும், அடியேனுக்கு ஒன்று கொடுப்பதற்குத் திருவரு ளுண்டாயின், எம்பாரை யளிப்பீராகவென்று வணங்கித் துதிக்க, நம்பிகள், தமக்கு நிகர்த்த கோவிந்தப்பெருமாளைத் திருவுள்ளத்தில் சந்தோஷ மங்கி கரிக்கக் கொடுத்தருளினர்.

**உதவவியான்**—யகர சப்தத்தில் முதலில் இகரம் ஒன்றிவருதலின், இயான் எனச் சீர் நிரம்புதற்பொருட்டுக் கொண்டனர் இவ்வாசிரியர். எல்—எனில்.

112. (இ-ள்.) குற்றமற்ற இராமாநுசரும், நம்பிகளது திருவடிகளை வணங்கி விடைகொண்டு, மேன்மையும் மெய்ம்மையுமுடைய கோவிந் தப்பெருமாளுடன் அழகிய நகரத்தை நீங்கிப், பசிய பொன்மயமாய்ப் பிர காசமுடைய திருமதில்கள் சூழ்ந்த திருக்கச்சியிற் பிரவேசித்து, பேரருளா ளப் பெருமானது திருவடிகளைத் துதித்து, குற்றமற்ற ஆதியோகியரில் முதல்வரான பொய்கையாழ்வாரைப் பணிந்து, திருக்காவேரி சூழ்ந்த திரு வரங்கத்தைச் சார்ந்தனர்.

இராமாநுசருடன் சென்ற எம்பாருக்குத் திருமலைநம்பிகள் பிரிவி னுல், திருமேனியில் வாட்டமுண்டாய் மீண்டுந் திருமலைக்குவர, நம்பிகள், "விற்றமாட்டுக்குப் புல்விடுவாருண்டோ" என்றுரைத்துப் போகவிட, மீண் டுந் திருவரங்கஞ் சேர்ந்தனரென்பர்.

**ஆதிமுனிவரர்க் கிறை**—ஆதியோகியரான முதலாழ்வார்கள் மூவரில் முதல்வர்—பொய்கையாழ்வார். மற்றையர் பூதத்தாழ்வாரும் பேயாழ்வாரும்.

**பொய்கையாழ்வார்**, கச்சித்திருவெஃகாவில் பொற்றாமரைப் பொய் கையில் மலரிலுதித்தவர். **பூதத்தாழ்வார்**, திருக்கடல் மல்லையில் தடா கத்தில் நீலோற்பலமலரிலுதித்தவர். **பேயாழ்வார்**, திருமயிலையில் தடா கத்தில் செவ்வல்லிமலரிலுதித்தவர். முதலாழ்வார்களான இம்மூவருங் கூடித் திருக்கோவலூருக்குச் சென்று, அவ்விரவில் தாங்களிருந்த இடத்தில் வந்து கூடியிருந்த எம்பெருமானைத் தக்க ஞானக்கண்களாலே சேவித்து, முறையே முதல் திருவந்தாதி, இரண்டாந் திருவந்தாதி, மூன்றாந் திரு வந்தாதி என்னும் மூன்று பிரபந்தங்களை யருளிச்செய்து, பல திருப்பதிக ளுக்கும் லோகங்களுக்குஞ் சென்று பெருமானைச் சேவித்தும் நெடுங்காலம் யோகத்திலிருந்தும் பரமபதத்துக் கெழுந்தருளினர்.

113. (இ-ள்.) இரத்தினமயமாய் உயர்ந்த அழகிய திருக்கோயிலையு டைய திருவரங்கப்பெருமானது திருவடித்தாமரைகளை அன்போடு போற்றி எழுந்தருளியிருக்கும் சிரேஷ்டரான இராமாநுச முனிவர், இதரமான புல் லிய சமயங்களை நிரசிக்கத் திருவுள்ளத்திற்கொண்டு, உண்மையைச் சொல்

னும், வேதாந்த சாரம், வேதாந்த தீபம், வேதார்த்த சங்கிரகம், உலகங்களை யுண்டுயர்ந்த பெருமானது திருவாராதனக் கிரமம், பெரியோர்கள் சொல்லும் கீதாபாஷ்யம் ஆகிய கிரந்தங்களை யருளிச்செய்து,

அரதனம்—ரத்நம், வடசொல். வரமுனிவன்-(வரம்-சிரேஷ்டம்) சிரேஷ்டமான முனிவன்: இது முனிவரன் என வழங்கலும் காண்க. சுருக்கம்-ஸங்க்ரஹம்.

114. (இ-ள்.) ஞானந்தரும் ஸ்ரீரங்ககத்தியம் முதலானவற்றை மூன்று விதமாக அருளிச்செய்து, பழமையுடைய வேதாந்த சூத்திரத்தின் நன்மை பூமியின்மீது விளங்கும்படி ஸ்ரீபாஷ்யத்தை யருளிச்செய்து, அவைகளை யெல்லாம் மாணுக்கர்களின் சமூகங்கள் மிகவும் அழகுபெறும்படி போதித்து எழுந்தருளியிருக்கும்போது, புல்லிய சமயக்கூட்டங்கள் மிகவும் பூமியின்மீது அதிகப்படக் கண்டு திக்குவிஜயம் செய்யும்படி திருவுள்ளத்திற் கொண்டனர்.

கத்தியங்கள் மூன்ருவன: ஸ்ரீரங்ககத்தியம், சரணுகதிகத்தியம், ஸ்ரீவைகுண்டகத்தியம். இவை கத்தியத்திரயமெனப்படும்.

கத்தியம்-செய்யுட்போலியான வசனம். முதல-வினையாலணையும் பெயர். தொன்னூல்-வேதவியாசமுனிவ ரருளிச்செய்த வேதாந்த ஸூத்ரம். இது ப்ரஹ்மஸூத்ரம், சாரீரக மீமாம்ஸை எனவும் பெறும். "தொன்னூலறைந்த புகழ் வியாதமுனி" என்பது அருதாரியப்பப்புலவர் பாகவதச் செய்யுள்.

115. (இ-ள்.) முதலியாண்டான் கூரத்தாழ்வான் முதலான முதலிகளும் தாமுமாகத் திருவரங்கத்தி லெழுந்தருளிய பெருமானது திருவடிகளை வணங்கி விடைபெற்றுக்கொண்டு, திருவநந்தபுரத்தையடைந்து சிலநாள் அவ்விடத்தில் வாசஞ்செய்து, அங்கு தமது திருநாமத்தாலே மடமொன்றமைத்து, தம்மோடு மாறுபட்ட மதஸ்தர்களது பெருமை நாசமடையும்படி வென்று பூப்பிரதக்ஷணம் வரும்படியாக உத்தரதிசையே பிரயாணமாயினர்.

நடப்பது—காலங்காட்டுந் தொழிற்பெயர், எதிர்காலம்.

116. (இ-ள்.) கண்ணனெம்பெருமான் நித்திய வாசஞ்செய்யும் திருமதுரை திருத்துவாரகைகளையடைந்து, பிறகு பிரயாகையி லெழுந்தருளிய கருணையையுடைய நீலவண்ணனை உயர்ந்த மாதவனையும் காசியிலிருக்கும் பிந்துமாதவப் பெருமானையும் வணங்கித் துதித்து, வெண்மையான பற்களையும் சிவந்த இதழையுமுடைய சரசுவதிதேவியார் வீற்றிருக்கும் பட்டிமண்டபத்தை யடைதலும், எண்ணுவதற்கரிய வைபவத்தையுடைய நாமகளான சரசுவதிதேவியும் எதிர்வந்து தழுவிக்கொண்டு தமதிருப்பிடத்திற் பிரவேசித்தனள்.

பட்டி மண்டபம்—கல்வி மண்டபம். "பன்னருங்கலைதெரி பட்டிமண்டபம்" என்ருர் கம்பநாடரும். நாமகள் "நாவீற்றிருந்த புலமாமகள்" என்ருர் பிறரும். இருக்கை—தொழிலாகுபெயர்.

**117.** (இ-ள்.) பனுவலாட்டியான சரசுவதிதேவியும், இராமாநுசரைக் குற்றமற்ற மணிகளிழைத்த ஆசனத்தின் மீதிருத்தி அர்ச்சனைசெய்து பக்கத்திலிருந்து, எழுதுவதற்கரிய நான்கு வேதங்கள் முதலிய நூல்களினாலே இவரது வைபவத்தை யாராயவே, முழுதுமுணர்ந்த மநநசீலரான இராமாநுசரும் அவற்றின் உயர்ந்த திடமான பொருள்களை யருளிச்செய்யக் கேட்டு, வணங்கித் துதித்தனள். யதிராசரும் அந்நாமகளை மகிழ்ச்சியோடு எதிராகத் துதித்துச் சேவித்து,

**பனுவலாட்டி**–(பனுவல்–கல்வி, நூல்) கல்வியிலும் நூல்களிலும் ஆட்சியுள்ளவள். கல்விக்கு அதிதேவதையாதலின் இப்பெயர் வழங்கலாயிற்று. இதுவும் அடுத்த செய்யுளும் குளகம்.

118. (இ-ள்.) "உலகங்களெல்லாவற்றுக்கும் தாயாகிய நீவிர் இன்று என்னை மகிழ்வடைந்து பிரீதிசெய்வதற்கு நான் முன்பு என்ன தவஞ்செய்தேன்" என்று சொல்லுதலும், சரசுவதிதேவியாரும், "சங்கராசாரியர் என்னும் பெயரையுடைய சந்நியாசியானவர் நான் கேட்ட முதன்மையான வேத வாக்கியத்தின் பொருளை யுணராதவராகித் திகைத்தனர்; நீவிர் திகைக்காமற் சொன்னதினாலே உம்மை யுவந்தேன்; வேதாந்த சூத்திரத்துக்குப் போதாயனமுனிவ ரருளிச்செய்த போதாயனவிருத்தி கிரந்தத்தைக் கொள்வீராக" என்று சந்தோஷத்தோடு கொடுத்தருளினள்.

**உணரான்**–வினையெச்சமுற்று. **போதாயன விருத்தி**–வேதாந்த சூத்திரத்துக்கு வேதவியாசர் சிஷ்யரான போதாயன முனிவர் இயற்றிய விருத்தியுரை.

119. (இ-ள்.) இராமாநுசர் அதனைப்பெற்றுத் தாமருளிச்செய்த வேதாந்த தீபத்தை யவளது திருக்கரத்திற் கொடுத்தனர். அப்பெருமாட்டி உவந்து திருக்கையிற்கொண்டு அதன் பொருளை யுணர்ந்து சிரத்தின்மீதணிந்து, பெருமானது திருவுந்தியிற்பூத்த தாமரைப்பூவில் உண்டான பிறப்புத் தன்னுடையதாயிருக்கும் மநநசீலனான பிரமதேவனும் தெரிவதற்கரிய பொருளையுடையது இந்தக் கிரந்தமாகுமென்று சிவந்த பவளத்தை யொத்த திருவாய்மலர்ந் துரைத்து, சந்தோஷத்தோடு கணக்கற்ற சிறப்புக்கள் செய்தனள்.

120. (இ-ள்.) இப்படி கலைமகளான சரசுவதிதேவியாரிடத்தில் விடைபெற்றுக்கொண்டு, எதிர்த்த கவிஞர்களை வென்று அவர்களிடம் திறைபெற்று, யாவரும் சொல்லும் ஒழியாத புகழையுடைய இளையபெருமாளென்னுந் திருநாமமுடைய யதிராசரது பெருந்தகைமையின் தோற்றத்தையெல்லாம், கொலைசெய்யும் கூர்மையான வேலைத்தரித்த நிருபசிங்கமென்னும் பேரையுடையவனுய்ப் பூமியை ரக்ஷிக்கும் அரசன் கேட்டு, அலைகளையுடைய திருப்பாற்கடலில் அறிதுயிலமரும் பெருமான் இவரேயென்று இராமாநுசரை யடைந்து அடிமையாயினன்.

**எதிர்**–வினைத்தொகை வினை.

**121.** (இ-ள்.) பூமியிலுள்ள எவர்களுடைய மதத்தையும் உயர்ந்த தமது மதத்தினாலே நிவர்த்தித்து, அவர்களது புல்லியமதத்தை நிராகரித்து, திருப்பாற்கடலில் ஆதிசேஷசயநத்தில் அறிதுயிலமரும் பெருமானது சமயத்

தை நிலைநிறுத்திய இராமாநுசரது திறலைப் பொறுக்காமல், குற்றமுடைய வர்களான சிலர் இவரை வதைக்கும்படி யெண்ணி (சேனைவிதி) யாகஞ் செய்ததும், மலையைப்போல உயர்ச்சியையுடைய பெரும்பூதங்கள் ஊழித் தீயென்னும்படி அவ் யாகத்தி லுண்டாயின.

**திணை**—சினையாகுபெயர். **நோனுது**—நோன்—பகுதி. **புரையிலவர்**—இல், அ—சாரியைகள். புரையில் பொருந்தினவர் எனலுமாம்.

**122.** (இ-ள்.) (அவர்கள்) அவற்றை இராமாநுசர்மீது விட்டனர். அவரும் மிகக் கோபித்து ஆச்சரியகுண சேஷ்டிதனை பெருமானது திருக்கைத் தலத்திலுள்ள திருவாழியாழ்வானைச் சிந்திக்க, அச்சக்கரத்தாழ்வானும் அந்த க்ஷணமே அங்குத் தோன்றி (அப்பூதங்களையும் அவர்களையும்) கோபித்து வருத்துவதைக் கண்டு, அவர்கள் (வேறு கதியின்றி) இராமாநுசரது திருவடிகளை யாசிரயித்து அடிமையாயினார்கள். அப்பூமியையாளும் அரசனும் உண்மையான தவத்தையுடைய இராமாநுசரை அழகிய மதில் சூழ்ந்த அயோத்தி யென்னும் நகரம்வரையில் (திருமேனிக்குக் காவலாகப் போய்) வழிவிடுத்து மீண்டனன்.

**கைத்தலம்** — கை. **நேமி** — வட்டவடிவமுள்ளது; பண்பாகு பெயர். **பைத்து**—பை—பகுதி. **காறும்**—காறு—அளவு.

**123.** (இ-ள்.) இராமாநுசர் அங்கு எழுந்தருளியிருக்கும் சக்ரவர்த்தித் திருமகனைத் துதிக்க, அப்பெருமான் நீவிர் நமக்கு ஒப்பற்ற திருத்தம்பியா ரா யிருப்பவராதலால் பூமியெவ்விடத்தும் நீவிர் ஜயிக்கக்கடவீராக வென்று வரங்கொடுக்கப் பெற்றுக்கொண்டு, அப்பெருமானது திருவடிகளை வணங்கித் துதித்து, உயர்ந்த சிகரத்தையுடைய சாளக்கிராமபர்வதம் பதரியாசிரமம் இவைகளைத் தொழுதுபோற்றி, சிவபெருமானுக்கு மாமனான இமயகிரியை யடைந்து அங்கு ஜயஸ்தம்பத்தை நாட்டினர்.

**அநுசன்**—(அநுஜன்) பின்பிறந்தவன், தம்பி.

**124.** (இ-ள்.) தோதரிகை நைமிசாரணியம் முதலிய பதிகளெவற்றையும் தொழுதுபோற்றி, குளிர்ந்த நதியாகிய சிந்து முதலியவைகளில் நீராடி, பிரமதேவன் முதலான தேவர்களுக்கெல்லாம் நாதன் நெடுமாலே யாவன்; பூமியிலுள்ளவர்களுக்கு நாதன் நானேயாவனென்று விருது கூறி, அவ்விடத்திலுள்ளவர்களான நான்கு வேதங்களை யுணர்ந்த முனிவர்களை உபய வேதாந்தங்களை யுணர்ந்த மகநீலரும் ஜகதாசாரியருமான இராமாநுசர் வென்று மீண்டனர்.

**உபயவேத** மென்றது, கீர்வாணவேதம் தமிழ்வேதங்களை.

**125.** (இ-ள்.) சிறப்பையுடைய புருஷோத்தமம், நீலகிரி, ஒள்ளிய கூர் மாத்திரி, சிங்கவேள்குன்றம், பிறவியை யகற்றும் பெருமையையுடைய புஷ்கரம், கோகுலம் முதலாகிய பர்வத திவ்யதேசங்கள், முப்பத்திரண்டு தருமங்கள் தழைத்த திருக்கச்சி, திருக்கோவலூர், ஸ்ரீமுஷ்ணம், திருச்சித்திரகூடம், உலக இன்பம் யாவுந் துறந்தவர்கள் வாழும் சீராமவிண்ணகரம், திருவாலித் திருநகரி, விளங்கும் திருநாங்கூர்,

**பார்**—இடவாகுபெயர். பார் முதலிய யாவும் எனக்கொண்டு, பொன்னும் பெண்ணுங் கொள்ளலுமாம். இதுவும் அடுத்த செய்யுளும் குளகம்.

126. (இ-ள்.) திருக்கண்ணபுரம், திருக்குடந்தை, திருக்காவேரியின் மத்தியிலே நித்தியவாசஞ்செய்யும் கரிய மேக நிறத்தையுடைய மேகவண்ணன் திருவநந்தாழ்வான்மீது அறிதுயிலமரும் கீழையூரிலுள்ள ஒள்ளிய மதிலையுடைய திருவரங்கமாகிற மணியாலும் பொன்னாலுமான திருக்கோயில், பெருமையிற் சிறந்த இராகவப்பிரா னெழுந்தருளிய தர்ப்பசயநம், சேது, திருமோகூர், தேவர்களாலும் நினைப்பதற்கரிய சீரையுடைய திருக்குருகூர், திருக்குறுங்குடி, திருமாலிருஞ்சோலைமலை யென்னும் பெயரையுடைய,

கீழையூரிலுள்ள திருப்பதி கீழையரங்க மென்னப்படும்.

127. (இ-ள்.) திருப்பதிகள் வழியாகப் பெருமானது அர்ச்சாவிக்கிரகங்களைப் பணிந்துபோற்றி, இராமாநுசர் தமது திருநாமத்தாலே மடங்களையமைத்து, மதில்சூழ்ந்த திருவரங்கத்தை யடைந்து, கெடாத மோக்ஷத்தை யளிக்கும் திருவரங்கநாதனை வணங்கி, தாம் கொண்டுவந்த போதாயந விருத்தி கிரந்தம் அழகு பெறும்படி பூமியின்மீது ஞானத்தாலுயர்ந்த மாணாக்கர்களுக்கு அருளிச்செய்து, தமக்கு ஒருவரு மொப்பில்லாதவரா யெழுந்தருளியிருந்தனர்.

கோணார் — வினைத்தொகை வினை. கவின — (கவின் — அழகு. இது வினைத்தன்மை யெய்தி அழகுசெய் என்னும் பொருளில் பகுதியாக வரும்.) செயவெனெச்சம்.

128. (இ-ள்.) இராமாநுசர் இருக்கும் இவ்விதத்தையெல்லாம், சிவத்தின்மீது வேறொரு பொருளில்லையென்று பூமியிலுள்ள பல சமயங்களையும் ஒரு மதத்திலடக்கும் கலக்கங்கொண்ட சிறு தொழிலையுடைய கண்டனென்னு மொரு சோழன் கேள்விப்பட்டு, அக்கினியைப்போலக் கோபித்து (தன் ஏவலாளர்களை நோக்கி), "இராமாநுசரை இந்த க்ஷணமே கொண்டு வருவீர்களாக" வென்று சொல்லுதலும்,

தவனன் — தபனன் — சூரியன், நெருப்பு. கனன்று — கனல் — பகுதி. இதுவும் அடுத்த செய்யுளும் குளகம்.

129. (இ-ள்.) கணக்கற்ற தூதுவர்கள் ஓடிச்சென்று, எம்பெருமானது திருவரங்கத்தை யடைந்து வாழும் இராமாநுசரது மடத்தில் இதைச் சொல்லினர். புண்ணிலிட்ட வேலைப்போலச் செவியில் அம்மொழி புகப்பொறாதவராகி, "தேவலோகத்திலுள்ள தேவேந்திரனேயாயினும் வெல்லக்கடவோ" மென்று கோபித்து,

புண்ணில் வேலென — தொழிலுவமம்.

130. (இ-ள்.) படத்தையுடைய ஆதிசேஷசயநத்தி லமர்ந்த எம்பெருமானைப் பணிந்து, "ஸ்வாமீ! இப்போது அடியேன் செய்யத்தகுவது யாது சொல்லியருளவேண்டு" மென்ன, உலகமுண்ட பெருமான், "பெருந்தவமுடையீர்! உம்மைக்கொண்டு உலகத்தில் நாம் செய்ய நினைந்துள்ள காரியங்கள் பலவாகு" மென்று தெரிவீராக;

மகி — பூமி. 'நிற்கொடுமகியிற் செய்ய யாநினைந்துள்ளன பல' என எம்பெருமானருளிச்செய்தது, இராமாநுசர் அவதாரத்தால் உண்டாகும் பல நன்மைகளைக் குறித்ததேயாயினும், மேனாட்டில் அநேகர் இருந்ததற்கும்

திருநாராயணப் பெருமாளேயும் செல்வப்பிள்ளேயையும் ப்ரதிஷ்டை செய் தற்கும் சோழன்பொருட்டால் இராமாநுசர் மேனட்டுக்கு எழுந்தருள வேண்டியிருத்தலேக் குறித்ததெனினுமாம்.

131. (இ-ள்.) "ஆகவே, நாளே நீவிர் வழிகொண்டு மேனட்டுக்குச் செல் லுவீராக; காலமறிந்து இராக்கதரது அக்கிரமச் செயல்களேக் கெடுத்தபடி யே, காளேயாகத் திரியும் சோழனது அகங்காரத்தைக் காற்றிலகப்பட்ட பூளேப் பூவைப்போலாகும்படி விரைவிலேயே நாம் செய்வோ" மென் றுரைத்தருளினன்.

நண்ணை—வியங்கோள்.

132. (இ-ள்.) கூரத்தாழ்வானனவர் அங்கே அதைக் கண்டதும் "கொ டியவனன சோழனிடத்துக்குத் தேவரீர் செல்லுதல் நீதியன்று; ஸ்வாமிக ளது திருவருளுண்டாயின் ஆத்தியையணிந்த தோளேயுடைய தத்துவஞான மில்லாத சோழனது சபையினிடத் தடைந்து பூமியிலுள்ளோர் புகழ்தலான மறுமொழி சொல்லக் கடவே" னென் றுரைத்தனர்.

ஆத்திமாலே—சோழர்க்குரியது.

133. (இ-ள்.) இராமாநுசர், அருள்புரிந்து முக்கோலுடன் தமது உரு வத்தை யவர்க்களித்து, சாஸ்திரார்த்தங்களே விரித்துச் சொல்லி, "நமது மா ணுக்கர்களோடு செல்லுவீராக" வென்று கூற, கூரத்தாழ்வான், யாவரும் சொல்லும் சக்கரங்களேப்பூண்ட தேரையுடைய சூரியனேப்போல் அம்மா ணுக்கர்களுடன் சென்று, இருளே விரித்த புல்லிய மதத்தனை சோழனது சபையை யடைந்திருந்தனர்.

ஏகு—(ஏகுவாய்) ஏவல். ஓருவா-(ஒருவு-நீங்கு-)நீங்கி, அவ்விடம் விட் டுச் சென்று.

134. (இ-ள்.) யானேக்கூட்டத்தில் சிங்கம்போலவும், தாவும் சுபாவ முடைய மான்களின் வரிசையிற் பிரவேசித்த ஒரு புலியைப்போலவும், பொருந்திய பாதகத்தின் முன்பு வந்ததான ஒப்பற்ற தருமத்தின் வடிவ மெனவும், மநநசீலரான கூரத்தாழ்வான் வந்து இருத்தலும், தத்துவஞான மில்லாத சோழனும் பார்த்து,

தந்தி-தந்தத்தையுடையது, யானே. இச்செய்யுள் ஒப்புமைக்கூட்ட வுவமை. வளவன்-சோழன். இதுவும் அடுத்த செய்யுளும் குளகம்.

135. (இ-ள்.) மிகுதியான கோபத்தோடு "சிவத்தின்மீது வேறொரு பொருளில்லே"யென்று அமையும்படி கையெழுத்திடுவாயாக வென்னுதலும், "சிவமென்னும் குருணியின்மீது எவ்விடத்திலும் வழங்குவதான துரோண மென்னும் பெயருடைய பதக்கும் உண்டு" என்று, சொல்லுவதற்கரிய பெ ரிய பெருமையையுடைய கூரத்தாழ்வானும் கையெழுத்திட்டனர்.

சோழராசன், "சிவாத்பரதரம்நாஸ்தி" (சிவாத்-சிவத்தைக்காட்டிலும், பரதரம்-மேலானது, நாஸ்தி-இல்லே) என்றெழுதி அதன் கீழே கூரத்தாழ் வானேக் கையெழுத்திடக் கேட்டனன். சிவம் என்பது சிவபிரானுக்கும் குருணி என்னும் நாலுபடிகொண்ட முகத்தலளவைக்கும் பெயராதலால், கூரத்தாழ்வான், சோழன் கருத்தை யுணர்ந்திருந்தும் அது தவறெனத்

துணிந்து, தாம் சிவம் என்பதற்குக் குருணியெனப் பொருள்கொண்டு, "த்ரோணமஸ்திதத: பரம்" (தத:-அச்சிவத்தைக் காட்டிலும், பரம்-மேலானதாக, த்ரோணம்-எட்டுப்படிகொண்ட பதக்கு என்னும் முகத்தலளவை, அஸ்தி-உண்டு) எனக் கையெழுத்திட்டனர். எனவே சிவபிரானுக்கு மேற்பட்டவர் உண்டெனக் குறிப்பித்தபடியாம்.

136. (இ-ள்.) அதைப் பார்த்த கண்டனும் கண்களில் அக்கினியுண்டாவதாக உள்ளத்தில் கோபங்கொண்டகாலையில், தூதர்கள் வந்து அவனது பாதங்களை யணுகி, "எண்ணும் தவத்தையுடைய இராமாநுசர் இவரன்று" என்று வாய்திறந்து சொல்லி, "அவர் திருவரங்கத்திலுள்ளா" ரென்று தெரிவித்தார்கள்.

**பிறழ்ந்**த-பிறழ்தா-பகுதி.

137. (இ-ள்.) "நமது சேனையுடன் விரைவாகப்போய் அங்குள்ள அவ்விராமாநுசனைச் சூழ்ந்து பற்றிக் கட்டிக்கொண்டு இந்த க்ஷணமே கொண்டு வந்து கொடுப்பீர்களாக" வென்று சொல்லினன். வெற்றியையுடைய வீரரும் சேனையும் வருவதைக் கேட்டு, இவனது நாட்டில் இனி யிருப்பது தீங்குண்டாகுமென்று சிலர் சொல்ல, அதனை இராமாநுசமுனிவர் மதித்து,

**வீக்கி**-வீக்கு-பகுதி. இதுவும் அடுத்த செய்யுளும் குளகம்.

138. (இ-ள்.) பெருமைபொருந்திய திருக்காவேரியாற்றைக் கடந்து, மேற்றிசையே விரைவாகச்சென்ற விதத்தைக் கேட்டுத் தத்துவஞானமில்லாத சோழனது சேனை தொடர்ந்து பின்னே செல்ல, இராமாநுசர் "கொடுமை செய்யுங் கூற்றமுமென் கோலாடி குறுகப்பெறா, தடவரைத்தோள் சக்ரபாணி சார்ங்கவிற்சேவகனே" யென்னும் பெரியாழ்வாரருளிச்செயலான கவியொன்றை யநுஸந்தித்து அங்குக் கிடந்ததான ஒரு பருக்காங்கல்லை யெறிந்தனர்; அங்கு ஒரு மலை தோன்றியது.

**பதாதி**-சேனைத்தொகை பத்தினொன்று. அஃது ஓர் தேரும், ஓர் யானையும், மூன்று பரியும், ஐந்து காலாளுங்கொண்டது. இங்கே சேனையென்று பொருள்.

**பட்டர்கோன்**—ஆழ்வார்கள் பதின்மரிலொருவர், பெரியாழ்வார். இவர், பெரியதிருவடி அம்சமாய் ஸ்ரீவில்லிபுத்தூரில் அவதரித்து, நந்தனவனமமைத்துப் பெருமானுக்குத் திருமாலை கைங்கரியம் நடத்திவந்தனர். அக்காலை மதுரையில் பாண்டியராசன், பரதத்துவநிர்ணயமாக ஒரு பொற்கிழி தூக்கிவைத்தனன். இவர், எம்பெருமான் நியமநம்பெற்று அரசவைக்குச் சென்று, அங்கிருந்த பலமதவாதியரை வென்று நாராயணனே பரனென நாட்டிக் கிழியையறுத்தனர். பின்னர், திருத்துழாயடியில் பூமிதேவி அமிசமாயவதரித்த ஆண்டாளைப் போற்றி வளர்த்துவருகையில், தாம் நாடோறும் எம்பெருமானுக்குச் சமர்பபிக்கும் திருமாலைகளை அப்பெண்மணி சூடுவதையுணர்ந்து, அம்மாலைகளை யொதுக்கி வேறுமாலைகள் புனைந்து, பெருமானுக்குச் சமர்ப்பிக்கப் பெருமான், "அம்மங்கை சூடியதையே நாம் விரும்பிச் சூடுவோம்" என நியமித்ததனாலும், ஆண்டாள் "மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன்" என்றதனாலும், அவரைத் திருவரங்கநகரப்பனுக்குத் திருமணம் புணர்வித்தனர். பின்னர், வடநாட்டிற் சென்று, அங்கிருந்த க்ஷாமத்தைத் தம் வரவாலொழித்து மீண்டனர்.

139. (இ-ள்.) பெருமையிற் சிறந்தவராய்ப் பெரிய பிராட்டியாரது திருவருளுக் கிலக்கான இராமாநுச முனிவரைத் தொடர்ந்து பின்செல்லும் எண்ணுவதற்கரிய சேனையானது, இடையில் மலை தோன்றியதனாலே இனி நாம் அவரை யடைதல் அரிதாகுமென்று சொல்லி, சீர் அமைந்த தேரையுடைய சோழனுக்கு இவ்விதத்தைச் சொல்லினார்கள்.

பண்-சீர், செவ்வி.

140. (இ-ள்.) சோழன், அம்முனிவரான கூரத்தாழ்வானை அழலுமிழும் கண்களாலே பார்த்து, "குருணிக்கு மேலே பதக்குண்டோ" வென்று கேட்கக் கூரத்தாழ்வானும், யாவரும் துதிக்கும் நன்மையையுடைய வேதவசநங்களை யருளிச்செய்து, அரியென்னுந் திருநாமமுடைய பெருமானே பராபரனென்று இருபத்தைந்தென்று சொல்லும் சுக்ஷிகளாலே சைவமதத்தைக் கண்டித்தனர்.

141. (இ-ள்.) பின் விளையப்போவதை யறியாதவனான சோழன் கோபித்து, கூரத்தாழ்வானது இரண்டு கண்களையும் பிடுங்கி விடுங்களென்று சொல்லுதலும், கூரத்தாழ்வானும், "உன்னைப் பார்த்த கண்களாலே வெண்ணெயுண்ட பெருமானது அடியார்களைச் சேவிப்பது தீதாகு" மென்று இளையாழ்வாரான இராமாநுசரது திருவடிகளை நினைந்து தமது திருக்கண் மலர்களைக் களைந்து விட்டெழுந்து,

இளையவன்-இளையாழ்வார், இராமாநுசர். எழுந்தான்-வினையெச்சமுற்று. அடுத்த செய்யுளில் புக்கு என்பதைக்கொண்டு முடிகின்றது.

142. (இ-ள்.) திருவரங்கத்திற் சென்று அவ்விடத்தில் எழுந்தருளியிருந்தனர். பூமியிலுள்ள உயிர்களுக்கு ஒப்பற்ற தாயினும் மிகுந்த அன்புள்ளவரான இராமாநுசரும், மூங்கிற் கூட்டங்களடர்ந்த காட்டில் மடங்கிச்செல்லும் கால்வழியேகொண்டு மேற்றிசைக்குப் போக, மேற்குக் கடலில் சூரியனும் பிரவேசித்தனன்.

தாயின் - இன் - உறழ்பொருவு. கானெறி - காலால் நடந்துசெல்லும் வழி. கடம் - காடு. திரும்பு - வினைத்தொகை வினை, மடங்குவதான. பதங்கன்-சூரியன்.

143. (இ-ள்.) இராமாநுச முனிவரும், தொண்ணூற்றைந்து திருநாமங்களாகிய முதலிகளுடனே வளைக்கும் சிலையையுடைய வேடமுதலிகளிருக்கும் சிறிய ஊரினிடத்தை யடைந்து, "இவ்விடத்தில் இனி யிருப்போ" மென்று முதலிகளுக்கு அருளிச்செய்யும் பரிசுத்தமான வார்த்தையைச் சிறுகுடில்களில் வாழும் அவ்வேடமுதலிகள் கேட்டனர்.

ஒன்பதிற்றைவர்-இற்று-சாரியை.

144. (இ-ள்.) அவர்கள், இவ்விருளில் வந்தவர்கள் யாவரோவென்று சந்தேகித்து வேலை யெடுத்துக்கொண்டு சமீபத்தில் வந்து, வார்த்தையாலும் அழகிய நெற்றியிலிருக்கும் திருமண்ணினாலும் அவர்கள் ஸ்ரீவைஷ்ணவர்களென்று தெளிவடைந்து, அவர்களது திருவடிகளை உருகும் உள்ளத்தோடும் உவப்போடும் பலமுறையும் வணங்கினார்கள்.

அயிர்த்து-அயிர்-பகுதி. வயிணவர் (போலி) வைணவர், வைஷ்ணவர்

145. (இ-ள்.) "எவ்விடத்திலிருந்து ஸ்வாமிகள் இவ்விடத்துக்கு எழுந்தருள்வது" என்று அவ்வைஷ்ணவர்களது திருவடிகளைப்பூண்டு வணங்கி வினவுதலும், பதில் சொல்லுதற்குரியோரான வைஷ்ணவர்களும், "அடியார் வேண்டும் பெரிய மோக்ஷசாம்பிராச்சியத்தை யளித்து உலகங்களையெல்லாம் விருப்பத்தோடு ஆட்கொண்டு விளங்கும் திருவரங்கத் தெம்பெருமானது திருவரங்கமாநகர"மென்று அருளிச்செய்தார்கள்.

அடிகள் எழுந்தருள்வது யாண்டிருந்து (ஆகும்) எனப் பயனிலை தொக்கதாகக் கொள்க. அடிகள் என்பது படர்க்கை முன்னிலையில் வந்தது. அடிகள் என்பது எழுந்தருள்வது என்பதன் முதனிலையைக் கொண்டு முடிந்தது.

146. (இ-ள்.) என்று முதலிகள் சொல்லுதலோடும், (அவ்வேடமுதலிகள்) "அத்திருவரங்க மாநகரத்தில் நித்தியவாசஞ்செய்யும் எம்பெருமானார் நன்மைபெற்று எழுந்தருளியிருக்கும் விதத்தைச் சொல்லுவீர்களாக"வென்று கேட்டார்கள். "அந்த இராமாநுச முனிவரரை நீங்கள் அறிந்து கேட்கும் குறிப்பு யாது" என்று வைஷ்ணவர்கள் கேட்க, அவ்வேடமுதலிகளும் வணங்கிக் கூறுவார்கள்.

நன்னர்-பண்புப்பெயர், நர்-விகுதி.

147. (இ-ள்.) "விளங்கும் பொன்மயமான மதில்களையுடைய திருக்கச்சிப் பேரருளாளப் பெருமானது திருவருளுக்கு இலக்காகி, வெற்றியைக்கொண்டிருக்கும் திருவேங்கடத்து ஸ்ரீநிவாசப்பெருமான் விருப்பமடையும்படி அப்பெருமானது அபிமானம்பெற்று, அகோபில சயிலத்தின் சம்பந்தமுற்று, பகையை வென்று நன்மைபொருந்திய மநநசீலர்களில் சிரேஷ்டரான திருமலை நல்லான் சக்ரவர்த்திஸ்வாமி,

இலக்கு-லக்ஷ்யம், குறி. யோபளக்கிரி—அஹோபிலம், சிங்கவேள் குன்றம். யோபளக்கிரியுறவு-அஹோபிலமடத்தின் சம்பந்தம். இதுவும் அடுத்த செய்யுளும் குளகம்.

148. (இ-ள்.) "அஞ்ஞானத்தை நிவர்த்தித்து எங்களை யடிமைகொள்ளும்போது 'எம்பெருமானாரான ஒப்பற்றவர் பெரிய பூமியிலுள்ள உயிர்களெல்லாம் உஜ்ஜீவிக்கும்படி வாழும் பரமாசாரியராவர்; அவர் திருவடிகளே சரணம் என்று குறிக்கொண்டு நீங்கள் வர்த்தியுங்கள்' என்று அருளிச்செய்ததாலே அறிந்தோ"மென்றார்கள்.

எம்பெருமானார்-இராமாநுசர். பரமதரு-பரமாசாரியர், ஆசாரியருக்கு ஆசாரியர்.

149. (இ-ள்.) அப்போது இராமாநுச முனிவரும் திருவுள்ளமகிழ்ந்து, "உயர்ந்த சீரின் வளப்பம் மிகுந்த நல்லானென்னுங் காளமேகம் நடுக்காட்டிலும் கூடி வருஷித்ததோ" என்று பணித்து, அந்த வேடமுதலிகளுக்குத் திருத்துழாய்மாலையை யணிந்த பெருமானுக்குச் சமானமான தமது திருவுருவத்தையும் சொல்லியருளினர்.

"வளமலிந்த.......பொழிந்தது" உருவகம்.

150. (இ-ள்.) திருவரங்கமாநகரத்தில் திருவநந்தாழ்வான்மீது எழுந் தருளியிருக்கும் பெருமான் இவ்விடத்தில் அடியார்களுக்கு இரங்கி அடி மைகொள்வதற்காக எழுந்தருளினதுபோலே, வணங்கித் துதித்து, கை கள் கூப்பிக்கொண்டு தங்கள் ஊரிற் கொண்டு சென்று களித்தார்கள். பாணங்களாற் பொலிந்த உட்டொளையுடைய அம்புக்கூட்டைத் தரித்த பின்புறத்தையுடைய வேடர்கள்.

**கடவுள்**, வந்தது என்பதன் முதனிலையைக்கொண்டு முடிந்தது. ஏகா ரத்தைக் கடவுள் என்பதோடு கூட்டிக் **கடவுளே** வந்ததென என்று கொள் ளலுமாம். **வந்நது**-இறந்தகாலத் தொழிற்பெயர். 'வந்தனன்' என்பது உவப்பால் 'வந்தது' என வந்ததாக வழுவமைத்துக்கொள்வது மொன்று.

151. (இ-ள்.) பலாக்கனி வாழைக்கனி தேமாங்கனி தினைமா தேன் இவைகளை மகிழ்ச்சியோடு விரைவாகத் திருமுன்பே சமர்ப்பித்து இதனை யமிசை செய்தருளவேண்டுமென்று விண்ணப்பித்தார்கள். அபிவிருத்தி யாகும் அன்போடு முதலிகளுடனும் அவ்விராமாநுச முனிவர் சுருக்க மில்லாமல் தமது அநுஷ்டாநங்களை முடித்துக்கொண்டு அவற்றை யமிசை செய்து அவ்விடத்தில் துயிலமர்ந்தனர்.

**தேம்**-தித்திப்பு. **பொருக்கெனை**-விரைவுக் குறிப்பிடைச்சொல்.

152. (இ-ள்.) பிறகு அங்கு நின்றும் ஆறுகாதங் கடந்து தமது திரு வடி சம்பந்திகள் வர்த்திக்கும் ஓரூரில் தங்கி, அந்தப் பதியையும் விட்டு நீங்கி, இருள்போம்படி பிரகாசம்விடும் ரத்தினக்கூட்டங்கள் எவ்விடத்தும் பொருந்திய யாதவாத்திரியை யடைந்து அவ்விடத்தி லிருந்தனர்.

**தணந்து**-தண-பகுதி.

153. (இ-ள்.) அவ்விடத்தில் இராமாநுசர் எழுந்தருளியிருக்க, திரு வரங்க மாநகரத்தில் எழுந்தருளியிருக்கும் மங்களகரமான கூரத்தாழ்வானும், "அன்போடு இவ்விடத்தில் நிகழ்ந்த முறைமைகளைச் சொல்லுவீர்களாக" வென்று தூதர்களுக்குச் சொல்ல, அந்தத் தூதர்களும் போய் வருத்தத்துடன் இராமாநுசரை வணங்கி, நிகழ்ந்த விதத்தையெல்லாம் விண்ணப்பிக்க, எதிராசரும் மிகக் கோபித்து, "கூரத்தாழ்வான் விஷயத்திற் குற்றத்தைச் செய்த அரசன் முடிவானுக"வென்று திருவரங்கமாநகரப்பனது திருவடி களைச் சிந்தித்துச் சபித்தனர்.

**நவின்ம்**-நவிலும் நவில்+(உ)ம்: விகுதி உகரம் தொகுத்தல். **முடிந்திட**- வியங்கோள். **தவறல்**-தொழிற்பெயர்.

154. (இ-ள்.) விஷமுற்ற கண்டத்தையுடைய திருவநந்தாழ்வானாகிற படுக்கையில் அறிதுயிலமரும் திருவரங்கத் தெம்பெருமானும், கனவில், வாளைக்கொண்டு, வலியையுடைய கண்டனென்னும் சோழனது கழுத்தைத் துண்டித்தலும், அவன் நித்திரை குலைந்து உயிர்த்தெழுந்து குரூரமான துன் பத்துக் கிடமானவனாகித் தனது வாய்வழியே புழுக்களைச் சொரிந்து தன் குடும்பத்தோடுந் தொலைந்தனன். விரிந்த கடல்சூழ்ந்த பூமியின்மீது இடரையொழித்த பெரியோர்களாலே கோபிக்கப்பட்டவர்களில் கெட்டுப் போகாதவர்கள் யாவர்?

**பெரியோர் வேதுண்டுனோர்** — செயப்பாட்டுவினை செய்வினைபோல வந்தது. **எவரே**-ஏ-எதிர்மறை. 'விடுமிடர்......புவிமேல்'—வேற்றுப்பொருள் வைப்பு.

155. (இ-ள்.) அவ்விதத்தைத் திருவரங்கத்தில் நித்தியவாசிகளாய் வாழும் மாருதியம்மாள் அழகிய மாருதியாண்டான் என்னு மிருவர் இராமாநுச முனிவரிடத்துக்கு வந்து வணங்கிச் சொல்லவே, இராமாநுசர் அவர்களை நினைப்பதற்கரிய சந்தோஷத்தோடு தழுவிக்கொண்டு, அவர்கட்குக் கொடுப்பதற்கு உயர்ந்த பொருள் ஒன்றுமில்லாமல் முன்பு தாமருளிச்செய்த துவய மந்திரத்தின் மூலமான பொருளை யருளிச்செய்தனர்.

156. (இ-ள்.) பின்னர், திருநாராயணபுரத்தில் செல்வப்பிள்ளையினது அர்ச்சாவிக்கிரகத்தை முயற்சியுடன் பிரதிஷ்டைசெய்து, திருமதில் திருத்தேர் குற்றமற்ற திருக்கோபுரம் திருக்கோயில் இவைகளை யமைத்து, அப்பெருமானிடத்து விடைபெற்றுக்கொண்டு, உயர்ந்த மாதவனுய்த் திருவரங்கத்திருக்கும் மாயப்பிரானைப் பணிவதாகத் திருவுள்ளத்திற்கொள்ள, யாதவசைலத்திலுள்ளவர்கள் இராமாநுசரை வணங்கி, தேவரீர் எங்களைவிட்டு நீங்க, நாங்கள் தரிக்கமாட்டோமென்று விண்ணப்பித்துப் பெருமூச்செறிந்திருந்தார்கள்.

**இயற்றி**-முயற்சி. **நெடிதுயிர்த்து**—ஒரு சொல். இராமாநுசர், திருநாராயணபுரத்தில் எழுந்தருளியிருக்கையில், தம்மிடத்திலிருந்த திருமண் செலவழிந்து, சாத்துகைக்கு வேறு திருமண் கிட்டாமையால், மிகச் சோகத்துடன் கண்வளர்ந்தனர். அவர் கனவில் திருநாராயணப்பெருமாள் தோன்றி, "நாம் இன்ன இடத்தில் இருக்கிறோம்; எமக்குச் சந்நிதிமுதலியன நிருமிப்பீராக; இன்ன இடத்தில் திருமண் உண்டு; அதையெடுத்து அணிந்துகொள்க" என்று நியமநமிட்டு மறைந்தருளினன். இராமாநுசர், விழித்தெழுந்து, மிகமகிழ்ச்சியடைந்து, பெருமான் சொன்ன குறிப்பின்படி தேடி, திருநாராயணப் பெருமாள் என்னும் மூலவிக்கிரகத்தைச் சேவித்தனர். திருமண்ணையும் எடுத்தனர். பின்னர், பெருமானுக்கு விமாந கோபுர மண்டப பிராகாரங்களை யமைத்து, உற்சவ விக்கிரகமில்லாமைக்குச் சிந்தித்திருக்கையில், அவ்விக்கிரகத்தை டில்லி நபாபுசேனை கொண்டுபோயிற்றெனத் தெரிந்து, டில்லிக்குச் சென்று துருக்க அரசனைக் கண்டு, தம் பெருமானைக் கொடுக்கும்படி கேட்டனர். அவன் தன் பரிவாரங்கள் கொண்டுவந்த பல விக்கிரகங்களைக் காட்டி, "உமது பெருமானைத் தேடி எடுத்துக்கொள்க" என்றனன். அந்த விக்கிரகங்களில் திருநாராயணப் பெருமானுக்கேற்ற விக்கிரகம் இல்லாதிருக்கக் கண்டு, சோகித்திருக்கையில், அன்றிரவு கனவில் பெருமான் எழுந்தருளி, "நாம் நபாபு குமாரத்தியின் மனையிலிருக்கிறோம்" என்றருளிச் செய்தனன். இராமாநுசர், அவ்விக்கிரகத்தைக் கொடுக்குமாறு கேட்க, அவன், "அவர் உமது பெருமானாயின் இங்கிருந்தே அழைத்து எடுத்துக்கொண்டுபோக" என்றனன். அவ்வாறே இராமாநுசர் பிரார்த்தித்தவளவில், அப்பெண்மணியுடன் மருவியிருந்த விக்கிரகம் தவழ்ந்தும் நடந்தும்வர, இராமாநுசர், "என் செல்வப்பிள்ளையோ" என்று எடுத்தணைத்துக்கொண்டு திருநாராயணபுரத்துக்குப் பிரயாணமாயினர். பெருமானை இராமாநுசர் எடுத்துச் செல்வதைக் கேட்ட நபாபு மகள், பிரிவாற்றாது மிக வருந்தினளாக, நபாபு இராமாநுசரைத் தொடர்ந்து சென்று, அவ்விக்

கிரகத்தைக் கொண்டுவருகவெனச் சேனையை யனுப்பினன். இராமாநுசர், நபாபுசேனை, தம்மை நெருங்குவதைக் கண்டு, அருகே யிருந்ததொரு மதங்கச்சேரியுட் பிரவேசித்து, மதங்கரை நோக்கி, "இச்சமயத்தில் பெருமானைக் காத்துக்கொடுப்பீர்களாயின், உங்களுக்குப் பெரியதோதருவி செய்வே" னென்றனர். மதங்கர் ஆயுதமெடுத்துச் சென்று, நபாபு சேனையுடன் பொருது, சேனை சிதறியோடச் செய்தனர். பின்னர் இராமாநுசர், அரும்பெறலடிகளான செல்வப்பிள்ளையைத் திருநாராயணபுரத்திற் பிரதிஷ்டைசெய்து உற்சவாதிகளை நடத்தி, "ஒரு நாயகமாய்" என்னும் திருவாய்மொழியிலுள்ள ஆழ்வாரருளிச்செயலை அப்பெருமானுக்குச் சமர்ப்பித்தனர். மதங்கர் செய்த உதவிக்குக் கைம்மாருகப் பிரதி வருஷ பிரமோற்சவத்தில் திருத்தேர் உற்சவமுதல் தீர்த்தவாரி உற்சவமீருக மூன்றுநாட்களிலும் அம்மதங்கர் யாவரும் சந்நிதிக்குள்ளே சென்று சேவிக்குமாறு திவ்யாஜ்ஞை யிட்டருளினர்.

இக்காலத்தும் அம்மதங்கர் ஆயிரமாயிரமாக வந்து சேவித்து உய்வடைந்து வருகிருர்கள். இதனுல் இராமாநுசர் திருவுள்ளத்தில் கருணை சுரந்து, மடைதிறந்து, தேங்கிய மடுவாயிருப்பது திருநாராயணபுர மென்னப்படும். அங்குள்ள கலியாணசரசில் தீர்த்தவாரி உற்சவத்தில் மதங்கர் கூடித் தீர்த்தமாடுவது வழக்கம். சில வருஷங்களுக்குமுன் இவ்வழக்கத்தை இராசாங்கத்தார் தடைப்படுத்தினர். அவ்வளவில், அத்தீர்த்தத்தில் புழுக்கள் மலிந்து துர்நாற்றம் வீசுதலாயிற்று: இது இராமாநுசர் திவ்யாஜ்ஞையைத் தடைப்படுத்தியதனு லுண்டானதெனத் தெரிந்து வழக்கப்படியே செய்துகொள்ளக் கட்டளையிட்டனர். உடனே புழுக்களும் துர்நாற்றமும் இல்லாமே யொழிந்தன. சில பெரியோர், மதங்கர் கூடிச் சந்நிதிக்குட் சேவிக்கச் செல்லும்போது கூடவே செல்லுவராம். ஏனெனில், எம்பெருமானுக்கும் இராமாநுசருக்கும் அம்மதங்கரிடத்து விசேஷ கடாக்ஷமுண்டாதலால், அவர்களுடன் கூடிச் சேவிப்போர், அவ்விசேஷ கடாக்ஷத்தைப் பெறலாமென்பராம்.

**157.** (இ-ள்.) அவர்களது துயரத்தைத் தணித்து, அவ்விடத்தில் தம்மை ஒரு அர்ச்சாரூபமாகச் செய்து நன்கமைத்து, நல்ல தவத்தையுடைய இராமாநுசர், திருவரங்க நகரத்தையடைந்து திருவநந்தாழ்வான்மீது அறிதுயிலமரும் வேதங்களாற் கூறப்படும் நாதனுன பெருமானது அழகிய விசாலமான இரண்டு திருவடிகளைப் பணிந்து பலமுறையும் புகழ்தலும், கருணை மழையையுடைய மேகமான பெருமானும், "நாம் வருத்ததான நமது சமயத்தை நிலைநிறுத்துமவரான நீர் வந்தீரோ?" என்று தழுவிக்கொண்டு சந்தோஷித்தனன்.

**இராமாநுசர்விக்கிரகம்**—தமருகந்தவுருவம், தானுனவுருவம், தானுகந்தவுருவம் என மூன்று. முதலாவது: நம்மாழ்வார், ஸ்ரீமந்நாத முனிகளுக்குத் திருவாய்மொழிப்பொருளை அருளிச் செய்து வருகையில், "பொலிக பொலிக" என்றற்ருெடக்கத்துப்பத்தில், ஆழ்வார், "ஒரு மகாபுருஷர் அவதரிப்பர்" என்றருளிச் செய்ய, ஸ்ரீமந்நாத முனிகள், அவரைத்தாம் சேவித்தல் வேண்டுமென விரும்பினர். அக்காலை ஆழ்வாரால் ஸ்ரீமந்நாத முனிகளுக்கு அளிக்கப்பட்டது **தமருகந்தவுருவம்.** இதுவே ஸ்ரீரங்கத்திலிருப்பதென்பர். இரண்டாவது: இராமாநுசர், திருநாராயண புரத்தினின்று மீளும்போது அங்குள்ளார், அவர் பிரிவுக்கு வருந்தினராக, அங்கு தம்போ

லொரு படிவமமைத்து, அவ்வன்பருக்கு வேண்டும் ஹிதங்களை அருளிச் செய்யுமாறு தமது சக்தியைத்தந்து அளித்ததான **தானுகந்தவுருவம்**. இதுவே திருநாராயண புரத்திலிருப்பதென்பர். மூன்றாவது: இராமாநுசர் அவதார ஸ்தலமான ஸ்ரீபெரும்பூதூரில் அவரடித் தொண்டர்களால் ஏற்படுத்திய தான **தானுகந்தவுருவம்**. இவ்விக்கிரகத்தை இராமாநுசர் தழுவிக்கொண்டு தமது சக்தியைத் தந்தனரென்றும், ஒருகால் அவ்விக்கிரகத்தின் கபோலத்தில் சுத்தமுண்டாக்குமாறு கருவியை உபயோகப்படுத்தியபோது, அக்காலே ஸ்ரீரங்கத்தில் தமது மாணாக்கருக்குக் காலக்ஷேபஞ் செய்திருந்த இராமாநுசருக்கு அவ்விடத்தே இரத்தந்தோன்றிய தென்று முரைப்பர்.

158. (இ-ள்.) "ஊழிகாலம் நூறு கடந்து உலகமும் உயிர்கள் எவையும் அழியினும் கெடாமலுயர்ந்து நீவிர் வாழக்கடவீராக; நம் மதமும் வாழ்வதாக; உம்மைப் பணிந்தோரும் எம்மை வணங்கினோராவர்" என்று மகிழ்ச்சியோடு, முகபடாமணிந்த உயர்ந்த கஜேந்திராழ்வானைக் காத்தருளிய பெருமான் வரமளித்து, திருவநந்தாழ்வான்மீது திருக்கண்மலர்கள் துயிலமர்ந்தனன். திருவாழியாழ்வானைத் தரித்த அப்பெருமானிடத்து விடைபெற்றுக் கொண்டு, இராமாநுச முனிவரும் கூரத்தாழ்வானது திருமாளிகையை யடைந்தனர்.

**வாழி**—வியங்கோள்.

159. (இ-ள்.) எதிராக எழுந்துவந்து வணங்கும் கூரத்தாழ்வானைத் தழுவிக்கொண்டு இருகண்களிலுள்ள நீராலே மஞ்சனமாட்டி அவ்விடத்து எழுந்தருளியிருந்து, முதிர்ந்த கருணையுடன் தமது திருக்கைகளாலே கூரத்தாழ்வானது திருக்கண் மலர்களைத் தடவி, "பழமையான வேத முதல்வனே! மதில் சூழ்ந்த திருவரங்கேசனே! கூரத்தாழ்வானது இரண்டு திருக்கண் மலர்களும் கொடுத்தருள்க" என்று துதிக்க, அப்போதே பெருமானும் கூரத்தாழ்வானுக்குத் திருக்கண் மலர்களை அளித்தனன். எதிராசரும் அங்கு நின்று எழுந்து தமது மடத்தை யடைந்து இனிது எழுந்தருளியிருந்தனர்.

**தைவரா**—தைவா-பகுதி.

160. (இ-ள்.) வஞ்சனையைத்தொலைத்த சீரையுடைய கூரத்தாழ்வானும், பெருமானது திருக்கோயிலை யடைந்து, கவுத்துவமணியும் ஸ்ரீவற்சமும் பொருந்திய திருமார்பையுடைய திருவரங்கத் தெம்பெருமானது பெருமைபொருந்திய தாமரைமலர்போன்ற திருவடிமுதல் திருமுடிவரையில் தமது திருக்கண்களாலே சேவித்துச் சந்தோஷித்து, "தஞ்சமாயிருக்கும் தேவரீர் அடியேனை யாண்டருள்வீராக" என்று வணங்கித் துதித்தலும், உலகமளந்த பெருமானும் "நீவிர் விரும்பிய குறைவில்லாத வரத்தைக் கொடுப்போம்" என்று திருவாய்மலர்ந்து அருளிச்செய்தனன்.

**ஓவிய**-ஓவு-பகுதி. **நோக்கபு**-பு-வினையெச்சவிகுதி; இது இறந்தகாலத்தில் வரும்.

161. (இ-ள்.) கெடாத பரமபதத்தை அளிப்பீராகவென்று வணங்கப் பெருமான் அளித்தருளினன். உயர்ந்த சீர் தொலைதலில்லாத கூரத்தாழ்வானும் விடைகொண்டு, தம்முடையதாகிய திருமாளிகையை விட்டு, நிலையில்லாத சரீரத்தை நீக்குவதற்காக என்னையாண்ட நெடிய பெருமானது திரு

வடிகளை நினைந்து அலைதலில்லாத யோகத்தில் செவ்வனே பொருந்தியிருந்தனர். அதனை எதிராசரு மறிந்து,

162. (இ-ள்.) துன்பமடைந்து கூரத்தாழ்வானிடமெழுந்தருளி, "நீவிர் என்னையும் நீங்கியது யாதுக்கு? சொல்லுக"வென் றருளிச்செய்ய, துயரந்தீர்ந்து செய்த தவத்தையுடைய கூரத்தாழ்வானும் திருவுள்ளத்தில் ஐம்புலன்களையு மடக்கிப் பெருமானது திருவடிகளில் தமது திருவுள்ளத்தைச் சேர்த்து அழியாத யோகத்திலிருந்தவராய் ஒன்றும் உணராதவராக, அதனை இராமாநுசர் அறிந்து மயக்கமற்ற துவயமந்திரத்தை அவரது திருச்செவியில் அருளிச்செய்தனர். கூரத்தாழ்வானும் மகிழ்வடைந்து,

மனு-மந்திரம். செவிக்கே-வேற்றுமை மயக்கம்.

163. (இ-ள்.) தமது திருமேனியைவிட்டு நீங்கிப் பெருமான் நித்தியவாசஞ்செய்யும் உயர்ந்த திருநாட்டை யடைந்தனர். ஆசாரியரான இராமாநுசரும், கெடாத துக்கமடைந்து, அவரது திருக்குமாரரான ஸ்ரீ பராசரபட்டராகிய மகநீயராலே பழுதில்லாத வேதசாஸ்திரப்படியே செய்யவேண்டுங் கடமைகளை முடித்து, ஸ்ரீ பராசரபட்டரைத் தமது கையிற் பிடித்துக் கொண்டுபோய், ஆடும் திருவநந்தாழ்வான்மீது திருக்கண்வளரும் கருணையையுடைய அழகிய திருவரங்க நகரப்பனது ஸந்நிதாநத்தை யடைந்து, "என்னையாண்ட ஈசனே! இவர் உமக்கு அடைக்கலம்" என்று பெருமானது திருவடிகளைப் பணிந்து சமர்ப்பித்தனர்.

164. (இ-ள்.) பெரியபிராட்டியார் பூமிப்பிராட்டியார் என்று சொல்லும் திருத்தேவிமார்களோடு எம்பிரானான திருவரங்கேசன் சிவந்த திருக்கரத்தாலே பட்டரைத் தழுவி, தனக்கு இனிய திருக்குமாரராக அபிமாநித்து, "நமது செல்வத்தில் முந்தியவரிசை இவருடைய"தென்று திருவருளோடு அருளிச்செய்தனன். பட்டராகிய முனிவரும், பெருமானுடைய திருவுந்தித் தாமரையிலுண்டான குமாரனான பிரமதேவன் மேலுலகத்துக்கு உயர்ந்திருப்பதுபோல, பூமியில் உயர்வை யடைந்தனர்.

165. (இ-ள்.) பின்னரும் நம்பெருமான் பிரீதியோடு தனது திருக்குமாரரான ஸ்ரீ பட்டருக்கு ஆயுளை யளித்தனன்; இராமாநுச முனிவர் உரிமையான வித்தையை யளித்தனர்; புகழையுடைய எம்பாரென்னும் முனிசிரேஷ்டர் உலகமெல்லாம் பரவும் தரிசனத்துக்கு முதன்மையாந் தன்மையை யளித்தனர். பெருமானது சிரேஷ்டமான திருக்குமாரரான பட்டரும், பூமியிலுள்ளோர் தமது திருவடிகளைப் பணியும்படி நன்கு எழுந்தருளியிருந்தனர்.

166. (இ-ள்.) நல்ல தவத்தையுடைய திரிதண்டதாரிகள் எழுநூறு திருநாமங்கள், பெருமைபெற்ற சிம்மாசனாதிபதிகள் எழுபத்துநால்வர், ஏகாந்தியர் ஈராயிரந்திருநாமங்கள் ஆகிய இவர்கள் பிரியாமலிருந்து ஏத்த, பொருந்திய சாஸ்திரார்த்தங்களை அவர்களுக்கு அருளிச்செய்து, நான்கு கடல்கள் பக்கங்களிற் சூழ்ந்த உலகத்திலுள்ளோர் வாழும்படி வெற்றியையுடைய இராமாநுசராகிய முனிசிரேஷ்டரும் நம்பெருமான் நித்தியவாசஞ்செய்யும் கோயிலாகிய திருவரங்கத் திருப்பதியில் வாழ்ந்தனர்.

---

Printed at the S. P. C. K. Press, Vepery, Madras—1907.

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. S...